சபா.ஜெயராசா



புனைகதை இயல்

சேமமடு பதிப்பகம்

புனை கதை இயல்

ANALYSIS OF FICTION

முனைவர் சபா.ஜெயராசா

MURALI BOOK CENTRE
18/5, Dunbar Road, Hatton

சேமமடு
சேமமடு பதிப்பகம்
2009

நூற் குறிப்பு

நூற் தலைப்பு	:	புனைகதை இயல்
நூலாசிரியர்	:	முனைவர்.சபா.ஜெயராசா
பதிப்பாளர்	:	சதபூ.பத்மசீலன்
பதிப்புரிமை	:	ஆசிரியருக்கே
பதிப்பாண்டு	:	தை கி.பி.2040 (2009)
எழுத்து	:	11 புள்ளி
பக்கங்கள்	:	120
படிகள்	:	1000
விலை	:	ரூ.260/-
அச்சிடல்	:	சேமமடு பதிப்பகம், கொழும்பு -11. தொ.பே: 0777 345 666.
வெளியீடு	:	சேமமடு பொத்தகசாலை, யூஜி.50, பீப்பள்ஸ் பார்க், கொழும்பு-11. தொ.பே: 011-2472862, 2321905. மின்னஞ்சல் : *Chemamadu@yahoo.com*
ISBN - NO	:	**978 - 955 - 1857 - 31-8**

Title	:	**PUNAIKATHAI EYAL**
Author	:	Pro.Saba Jeyarasa ©
Edition	:	2009
Price	:	Rs.260/-
Published by	:	Chemamadu Poththakasalai UG.50, People's Park, Colombo -11. T.P : 011-2472362, 2321905.
Printed by	:	Chemamadu Pathippakam, Colombo -11. T.P 0777 345 666. E-mail : *Chemamadu@yahoo.com*
வெளியீட்டு எண் :		CBCN - 2009-01-02-032

முன்னுரை

தமிழில் புனைகதை இலக்கியம் பற்றிய சிந்தனையும் தேடலும் மற்றும் ஆய்வும் பல நிலைப்பட்ட பல தளப்பட்ட செல்நெறிகளாக விருத்தி பெற்றுள்ளன. குறிப்பாக, இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியின் பின்னர் புனைகதை இலக்கியம் "புனைகதை இயல்" ஆக வளர்ச்சியடைந்து புதுப்பிரக்ஞையும் புதுப்பரிமாணமும் மிக்க ஓர் துறையாக பரிணாமம் பெற்றுள்ளது.

இன்று எல்லா நாடுகளிலும் எல்லா மொழிகளிலும் செல்வாக்குப் பெற்ற இலக்கிய வடிவமாகத் திகழ்வது புனைகதைகளே ஆகும். இவற்றின் செல்வாக்கை தாக்கத்தை அடிப்படையாகவும் அளவுகோலாகவும் கொண்டு நூல்களை 'புனைகதைகள்' என்றும் ' புனைகதைகள் அல்லாதன' என்றும் பிரிக்கும் முறை ஏற்பட்டது. உரைநடைப்புனைகதை என்பது சிறுகதை, நாவல் ஆகிய இரண்டையும் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகவும் பயன்பட்டு வருகின்றது.

தொடர்ந்து மேனாட்டுத் தொடர்பால் வந்த இலக்கிய வடிவங்களை விளங்கிக்கொள்ளும் முயற்சி தீவிரப்பட்டது. இதனால் கவிதை, உரைநடை போன்றவற்றின் இயக்கத்துக்கான கோட்பாட்டு விளக்கத்தினை மேனாட்டு இலக்கியக் கோட்பாட்டாளர்கள் விமரிசகர்கள் வழியாக அறிந்துகொள்வதற்கு விமரிசனப் பயில்வு இடமளித்தது.

இன்று நாம் இலக்கிய விமரிசனம் என மேற்கொள்ளும் இலக்கியக் கற்கை மேல்நாட்டு கல்விமுறை வழியாக வந்தது. அதாவது மேனாட்டு இலக்கிய அறிகையுடனேயே வந்தது. இந்தப்

பண்பு புனைகதை இயல் பற்றிய அறிதல்மரபிலும் சிந்தனை மரபிலும் பெரும் தாக்கம் செலுத்தின. நவீன இலக்கியப் பயில்வின் பரப்பை ஆழ அகலப்படுத்தின. சமகாலத்தில் பன்னாட்டு இலக்கியப் பரப்பில் பெருமளவில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட துறையாக புனைகதை இலக்கியம் வளர்ந்து வருகிறது.

நவீன இலக்கியக் கோட்பாடுகள் பல புனைகதை இலக்கியம் பற்றிய அறிதல்முறைமையிலும் படைப்பாக்கமுறைமையிலும் பல்வேறு புதிய புதிய சாத்தியப்பாடுகளை உருவாக்கியுள்ளன. நவீனத்துவம் சார்ந்த புதிய சொல்லாடல்களை தமிழில் புழக்கத்துக்குக் கொண்டு வந்துள்ளன. கலை - இலக்கியம் சார்ந்த நவீன கோட்பாடுகளை விவாதிக்கும் உரையாடும் மரபுகளையும் உருவாக்கியுள்ளன.

இதுவரை வாய்மொழிப் பாரம்பரியத்தில் கதை சொல்லல், கதை கேட்டல் என்னும் மரபுகள் வலுவாக இருந்துள்ளன. இதனால் "கதை சொல்லிகள்" அந்தந்தப் பண்பாட்டுக் கோலங்களுடன் வெளிப்பட்டு வந்துள்ளனர். அதாவது தொன்மையான சமூகங்களில் அறிவு மற்றும் அனுபவம்சார் கையளிப்புக்களில் கதைசொல்லி-களின் வகிபாகம் முக்கியமானதாக இருந்துள்ளன.

நமக்கு கதைசொல்லல், கதைகேட்டல் என்னும் மரபுகள் அச்சு ஊடக வருகையால் கதையெழுதுதல், கதைவாசித்தல் என்னும் மரபுகளாக நீட்சிபெற்றன. வாய்மொழி மரபில் கதைகளாக இருந்தவை அச்சுவடிவில் உருமாறும் பொழுது "புனைகதை" என்ற பெயரைப் பெறுகின்றன.

அதாவது கதைசொல்லல், கதைகேட்டல் அனுபவங்களின் எடுத்துரைப்பிலிருந்து ஆரம்பித்து அனுபவங்களின் பிறிதொரு பரிமாணமாகிய கற்பனைகளுடன் இணைந்து வளர்ந்து செல்லும் படிமலர்ச்சி நிலையினை கதைகள் கொண்டுள்ளன. தொல்குடியினர் தமது சூழலை விளங்க, விளக்க முற்பட்ட வேளை கலை வடிவங்களுள் ஒன்றாக "கதை" தோற்றம் பெற்றது. இது சமூகத்துக்கு அறிவூட்டுவதற்கும் மனித நடத்தைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் உரிய மொழிச்சாதனமாக கலைச் சாதனமாக "கதை" பயன்படுத்தப்பட்டன.

வாய்மொழி மரபில் கதைசொல்லல், கதைகேட்டல் பண்பாட்டுக் கோலமாக பரிணாமம் பெற்றது. இது பின்னர் அச்சு

ஊடகம் வழியே கதையெழுதுதல், கதைவாசித்தல் என்னும் வடிவம் கொள்ளும் பொழுது இதன் பண்புகள் வேறுபட்டதாக அமைந்தன. கல்வியின் விரிவாக்கம் கதை எழுதுதல் என்னும் செயற்பாட்டில் புது நுட்பங்களை உட்புகுத்தின. இதனால் கதை சொல்லலில் அதன் எடுத்துரைப்பில் பன்முகப்பட்ட விருத்திக்கோலங்கள் வெளிப்பட்டன.

நமக்கு 'எழுதுதல்' என்பது எழுத்தறிவு என்ற பண்பின் பல பரிமாணங்களை உள்வாங்கியதாக வெளிப்பட்டது. எழுதுவோரின் எழுத்தறிவு, வாசிப்போரது எழுத்தறிவு போன்ற கூறுகள் புனைகதைக் கட்டமைப்பில் முக்கிய பங்காற்றுகின்றன. இந்த பின்புலத்தில்தான் மனிதர்கள், கதை, களம் மற்றும் மொழி யாவும் கட்டப்பட்டன.

தமிழில் அச்சுத் தொடர்பூடகம் உருப்பெற்ற சூழலில் அதன் உடன் விளைவாக 'இதழியல' துறையும் வளர்ச்சியடைந்தது. இதழியலில் எழுதுவதற்கு ஒரு புதிய வடிவமாக உரைநடை மேலெழுச்சிப் பெற்றது. இந்த உரைநடையை அடிப்படையாகக் கொண்ட புனைகதை மொழி உருப்பெற்றது. அந்த மொழியில் எழுதும் வடிவங்கள் புனைகதைகள் ஆயின. எனவே புனைகதைக்கான மொழி என்பது புதிதாகத் தோன்றியது. இது பல்வேறு தன்மைகளில் வெளிப்பட்டது. குறிப்பாக ஐரோப்பிய மரபில் இந்த மொழி இயல்பாகவே உருப்பெற்றது. ஆனால் தமிழில் புனைகதை மொழி நவீனத்துவக் கூறுகளை படிப்படியாக உள்வாங்கத் தொடங்கியது. இதற்கு தமிழில் தோன்றிய ஆளுமை மிக்க படைப்பாளிகள் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கினார்கள்.

வாசிப்பு பழக்கம் சார்ந்த இதழியல் வளர்ச்சியில் புதிது புதிதான நிகழ்வுகளைச் சொல்லும் தேவை மேலும் மேலும் அதிகரித்தது. இதனால் இவற்றை வாசிக்கும் மனிதர்களுக்கு இதுவரை அறியாத நிகழ்வுகளை, களங்களை அறியும் வாய்ப்புக் கிடைக்கிறது. தொடர்ந்து உருவான கல்வியின் விரிவாக்கம் புனைகதை இலக்கியம் பற்றிய வாசிப்பிலும் கற்பனையிலும் மற்றும் எழுதியலிலும் புதிய புதிய நுட்பங்களை அறிமுகம் செய்தன. பல்வேறு படைப்பாளிகள் வெவ்வேறு பண்புகளில் புனைகதை வடிவங்களை கையாளத் தொடங்கினார். புனைகதை உருவாக்கம் தன்னளவில் பன்முக அடையாளங்களைக் கொண்டதாக வெளிப்பட்டது.

பன்னாட்டு நவீன இலக்கியப் பயில்வு தமிழில் பல்வேறு புதிய களங்களை மொழிதல் சாத்தியப்பாடுகளை எடுத்துரைப்புக்களை அறிமுகம் செய்தன. நவீன இலக்கிய உலகை 'புனைகதை உலக'மெனச் சுட்டுவதற்கான அனைத்துத் தன்மைகளும் தன்னகத்தே கொண்டு புதுப் பரிமாணம் பெற்றது.

இன்று நம்மைச் சுற்றி பல்வேறு நிகழ்ச்சிகள் உண்டு. ஆனால் ஒரு நிகழ்ச்சிக்குப் "புனைவு மதிப்பு" ஏற்படுவது என்பது, அவை மனிதப் பிரச்சினைகளோடு தொடர்புடையவை என்னும் கட்டத்தில் தான். ஆகவே புனைகதைஎடுத்துரைப்பு என்பது நிகழ்ச்சிகள், நிகழ்ச்சிகளுக்கான வார்த்தைக் குறியீடுகள், எடுத்துச் சொல்லும் அல்லது எழுதும் செயல்பாடு ஆகிய அடிப்படை அம்சங்களைக் கொண்டுள்ளது. இதுவே பின்னர் கதை, பனுவல், எடுத்துரைப்பு என்றும் அழைக்கப்படுகின்றது.

சமகாலத்தில் நவீன இலக்கியக் கோட்பாடுகள் "புனைகதை" பற்றிய ஆழமான ஆய்வுகளை முன்னெடுக்கின்றன. ஆனால் தமிழில் புனைகதை பற்றிய கோட்பாட்டு ஆய்வுகள் இன்னும் அதிகம் பெருகவில்லை. இதனால் புனைகதை பற்றிய இலக்கிய அறிதலில் விமரிசனச் செயற்பாடுகளில் மற்றும் படைப்பாக்கச் செயற்பாடுகளில் புத்தாக்கமான புதிய மரபுகள் உருவாகவில்லை. அல்லது அவ்வாறு தோற்றம்பெற்ற இலக்கியவகைமைகள், அறிதல்புலங்கள், கோட்பாடுகள் தமிழில் புனைகதை மரபுகளை புரிந்து கொள்வதற்கான பொருத்தமான ஆய்வுத் தடங்களை வழங்கத் தவறிவிட்டன.

தமிழில் புனைகதைகள் வளர்ந்தளவிற்கு அவை பற்றிய விமரிசனங்கள் ஆய்வுகள் பெருகவில்லை. இதுவரையான புனைகதை உத்திகள், பாணிகள், மரபுகள் தமிழில் முழுமையாக இன்னும் பன்முக ரீதியில் அலசப்படவில்லை. இதனால் புதிய நாவல் பற்றிய புதியவிமரிசனஎழுத்து நமக்கு பழக்கப்படாதவை யாக உள்ளன. புதியவாசிப்பு சாத்தியப்பாட்டுக்கான தன்மைகளும் உணரப்படாமல் உள்ளன. இதனால் புனைகதை எடுத்துரைப்பியலின் பன்முகக் கூறுகளை எடுத்துக்காட்டும் நுட்பமான அணுகுமுறை மற்றும் வாசிப்பு விமரிசன களங்கள் நமக்கு விரிவாக்கம் பெறவில்லை.

இந்தப் பின்னணியில் தான் "புனைகதை இயல்" என்னும் இந்த நூல் வெளிவருகின்றது. இதுவரை புனைகதை பற்றி வெளிவந்துள்ள

நூல்களில் இருந்து இந்நூல் முற்றிலும் வேறுபட்டு நிற்கின்றது. எமது சமூக பண்பாட்டுக் கோலங்களுடன் ஊடாடி தமக்கான சிந்தனைத் தளத்தை வரித்துக்கொள்கின்றது. பின்காலனித்துவ சிந்தனையின் தாக்கத்துக்கு உட்பட்டுத்தான் படைப்பு விமரிசனம் பற்றிய தேடுகையும் வேர்விடுகையும் அமையும். இதுவே நமக்குப் பொருத்தமான ஆய்வுக் கருவிகளை வழங்கும். இந்த நம்பிக்கையின் உறுதிப்பாட்டிலிருந்து தான் இந்நூலாசிரியர் இந்த நூலை எழுதியுள்ளார்.

கிராமத்துக் 'கதை சொல்லிகள்' என்னும் முதல் அத்தியாயம் எமது இதுகாறுமான புனைவு இலக்கியம் குறித்தான பார்வைகளை சிந்தனைகளை மறுவாசிப்புக்கு உட்படுத்துகின்றது. தொடர்ந்து 'புனைவின் நீட்சி', 'சிறுகதையின் கோட்பாட்டு வளர்ச்சி' 'புவியியல் மற்றும் பண்பாட்டு அலகுகள் சார்ந்த புனைவுகள்' 'புனைவும் எழுநடையும்' 'கற்பனையியல்' போன்ற அத்தியாயங்கள் மறுசிந்தனை மறுவாசிப்பு மேற்கொள்வதற்கான அவசியத்தை வலியுறுத்துகின்றன.

குறிப்பாக வாய்மொழி இலக்கியங்களும் அவற்றை எடுத்தாண்ட சமூக கட்டமைப்பின் அடிநிலை சார்ந்த கதை சொல்லிகளும் ஒருவகையில் ஒடுக்குமுறைக்கும் சுரண்டல் முறைக்கும் எதிரான நாட்டார் கதைகளை எடுத்துரைப்புக்கு பயன்படுத்தினர். இவ்வாறான செயற்பாடு அடிநிலை மக்களை மேலெழுச்சி கொள்ளச் செய்யும் கலைச் செயற்பாடாகவே விரிவு பெறுகின்றது. காலனித்துவ ஆட்சி காலத்தில் தோற்றம் பெற்ற நாட்டார் கலை வடிவங்களின் இவ்வாறான எதிர்ப்புக் கலகத் தூண்டல்களை காண முடியும். இந்தமரபு நவீனஇலக்கியம் என்று அடையாளப்படுத்தும் சமகால வடிவங்களில் வெவ்வேறு வகையில் தளமாற்றம் அடைந்து வருகின்றது. ஆகவே இதுபற்றிய தேடல் ஆய்வு நமக்கு அவசியமாகின்றது. இதற்கான சிந்தனைக் கிளர்வுகளை இந்நூல் தூண்டுகிறது. அத்துடன் 'புதியஅறிகைமரபு' 'புதியவிமர்சனத்தேடல்' போன்றவற்றையும் வலியுறுத்துகின்றது.

இதனால் "நவீன இலக்கியம்" பற்றி புதிய வகையில் பொருள்கோடல் செய்யும் மரபுக்குள்ளும் எம்மை அழைத்துச் செல்கின்றது. நாம் நவீன இலக்கியம் பற்றிப் பேசும் பொழுது ஐரோப்பிய ஆங்கில இலக்கிய மரபுகளை மட்டும் வைத்துப் பேசி வருகின்றோம். எம்மைப் போன்ற மூன்றாம் உலக நாடுகளின்

இலக்கியங்களை முன்னிறுத்தும் பேசுபொருளாக்கும் மற்றும் உரையாடல் செய்யும் பண்பு நமக்கு தற்போது வேண்டப்படுகின்றது. இதுவே நமக்கான வேறுபட்ட வித்தியாசமான தனித்துவ அம்சங்களை வெளிப்படுத்தும் கோட்பாட்டுமயமாதலைச் சாத்தியமாக்கும்.

இன்று ஐரோப்பிய நாடுகளின் இலக்கியங்கள் ஓரங்கட்டப்பட்டு மூன்றாம் உலக நாடுகளின் இலக்கியங்கள் முன்னணிக்கு வருகின்றன. பிராந்திய மொழிகளின் எழுத்துக்கள், விளிம்பு நிலை எழுத்துகள், காலம்காலமாய் ஒடுக்கப்பட்ட எழுத்துக்கள், வெளிச்சம்படாத இருண்ட நாடுகளின் எழுத்துக்கள் என்று முற்றிலும் புதிய இலக்கியவெளி இப்போது திறக்கப்படுகின்றது. இது நமக்கு இலக்கிய வெளியாக மட்டுமல்லாமல் ஒரு மாபெரும் அரசியல் வெளியாகவும் உருமாறி நிற்கின்றது. இந்த அரசியல் வெளியை புரிந்துகொள்வது என்பது நமது இலக்கியச் செயற்பாடுகளின் அரசியலாகவும் விரிவுபெறும். இந்த உணர்வும் சிந்தனையும் நமக்கான வாசிப்புச் செயற்பாட்டை விமரிசன அணுகுமுறைக்கான தெளிவை வழங்கும்.

தமிழில் புனைகதை வரலாறு எழுதுதல் பற்றிய புதிய அணுகுமுறைக்கான புதிய அம்சங்களை நமக்கு இந்நூல் அறிமுகம் செய்கின்றது. இதுவே இந்நூலின் பலம். மேலும் நூலில் இழையோடும் ஒவ்வொரு பகுதியும் இன்னும் விரிவாக ஆராய்ப்படுவதற்கான இறுக்கமான சிந்தனை அமைவுகளைக் தன்னகத்தே கொண்டுள்ளன. ஆழமான வாசிப்பு, ஆழமான தேடல் மற்றும் நுணுக்கமான ஆய்வு, விமரிசனக் கண்ணோட்டம் யாவும் உள்ளவர்கள் இதற்காக அதிகம் உழைக்க வேண்டும்.

10-01-2009 **தெ.மதுசூதனன்**

நூலாசிரியர் உரை

நவீன உலக இலக்கியப் பரப்பிற் பெருமளவில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட துறையாக புனைகதை இலக்கியம் அமைந்துள்ளது. தமிழ் மரபில் இத்துறையிற் பேசப்படாத விடயங்களும், தொட்டுக் காட்டப்படாத விடயங்களும் பல இருக்கின்றன. அவற்றை உள்ளடக்கிய ஆய்வின் தேவைகளையும், நூலின் தேவைகளையும் பேரானைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வ.மகேஸ்வரன், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்து விரிவுரையாளர் க.இரகுபரன் கலந்துரையாடி வந்தனர்.

இத்துறையில் சென்னைப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் வீ.அரசு மற்றும் தெ.மதுசூதனன் ஆகியோருடன் அளவளாவிய பொழுது நூற்புலக்காட்சி மேலும் கூர்ப்பு அடைந்தது.

தமிழியலில் ஆக்கபூர்வமான வெளியீடுகளை வெளியிட்டுவரும் சேமமடு பதிப்பகத்தினர் அளித்துவரும் உற்சாகம் புதிய ஆக்கங்களை உருவாக்குவதற்குரிய உந்துவிசையாக அமைந்து வருகின்றது.

ஆய்வுக்குரிய நூல்களை உடனுக்குடன் வழங்கிவரும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பிரதம நூலகரும், துணை நூலகர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

01-01-2009

சபா.ஜெயராசா
தலைவர்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

பதிப்புரை

சேமமடு பதிப்பகம் முனைவர் சபா.ஜெயராசாவின் நூல்களை தொடர்ந்து வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றது. இதுவரை பேராசிரியரது கல்வியியல் நூல்களை வெளியிட்டு வந்தோம்.

தற்போது மொழிக்காலணித்துவமும் பரதநாட்டியமும், இசையும் சமூகமும் உள்ளிட்ட நூல்கள் வரிசையில் "புனைகதை இயல்" என்னும் நூலையும் வெளியிடுகின்றோம். பேராசிரியரது கல்வியியல் பணிகளுக்கு அப்பால் பிறதுறைகளிலும் பேராசிரியர் மிகுந்த ஈடுபாடுமிக்கவர், ஆழமான கற்கையும் தேடலும் கொண்டவர். இத்துறைசார் அறிகை மரபுகளையும், ஆய்வுக் கண்ணோட்டங்களையும் தாங்கிய நூல்கள் பேராசிரியரிடமிருந்து இன்னும் பெருக வேண்டும்.

முன்னைய நூல்களைப் போல் இந்நூலுக்கும் தனித்துவமான இடமுண்டு. குறிப்பாக அந்தந்த துறைசார் விருத்தியில் இவரது நூல்கள் புதிய வளங்களை சேர்த்து வருகின்றன. சேமமடு பதிப்பகம் முனைவர் சபா.ஜெயராசாவின் பன்முக ஆளுமையை வெளிப்படுத்தும் நோக்கில் நூல்களை வெளியிடுவதை பெரும் பேறாகக் கருதுகின்றது.

நூலாசிரியருக்கும் மற்றும் எமது ஆசிரியர் குழுவிற்கும் நன்றிகள்.

15-01-2009

அன்புடன்
பதிப்பாளர்
சதபூ.பத்மசீலன்

பொருளடக்கம்

		பக்கம்
(1)	கிராமத்துக்கதை சொல்லிகள் - ஆராயப்படாத ஆளுமைகள்	13
(2)	புனைவின் நீட்சி	27
(3)	சிறுகதையின் கோட்பாட்டு வளர்ச்சி	32
(4)	புனைகதையும் சமூகச் சித்திரிப்புக் கருத்தியலும்	38
(5)	புனைகதையும் படிம உலகமும்	43
(6)	புனைவும் காண்பிய ஆக்கமும்	49
(7)	வரலாற்றுப் புனையங்கள்	54
(8)	அறிவியற் புனையங்கள்	58
(9)	நகைச் சுவைப் புனையங்கள்	67
(10)	புவியியல் மற்றும் பண்பாட்டு அலகுகள் சார்ந்த புனைவுகள்	74
(11)	புனைவும் எழு நடையும்	80
(12)	கற்பனையியல்	85
(13)	புனைகதையும் நுகர்வோர் சமூகமும்	93
(14)	ஆக்கமலர்ச்சிப் பதிவுகள்	98
(15)	நவீன இலக்கியப் புலப்பாடுகள்	107
(16)	ஆங்கில இலக்கியங்களும் தமிழின் முன்னோடிப் புனையங்களும்	116

01

கிராமத்துக் கதை சொல்லிகள்

ஆராயப்படாத ஆளுமைகள்



நவீன தொடர்பாடற் சாதனங்கள் உட்புகுவதற்கு முந்திய சமூக அமைப்பிலே "கதை சொலலிகளின்" முக்கியத்துவம் பண்பாட்டு மானிடவியல் மற்றும் அறிகை மானிடவியல் ஆய்வுகளிலே சிறப்பாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. பொதுவாக எல்லாப் பண்பாடுகளிலும் குறித்தபண்பாட்டுக் கோலங்களுடன் இணைந்த "கதை சொல்லிகள்" இருந்திருக்கின்றார்கள். மேலைநாடுகளின் தேவதைக் கதைகளின் பெருக்கத்துக்கு இவர்களே பொறுப்பு எனக் குறித்துரைக்கப்படுகின்றனர்.

வட இந்தியாவில் இவர்கள் "கதகர்" என்றும் "பட்" என்றும் அழைக்கப்பட்டனர். இராமாயணம், மகாபாரதம் முதலிய பெரும் இலக்கியங்களிலே பிரதி வேறுபாடுகள் தோன்றுவதற்கும், கிளைக்கதைகள் பெருக்கெடுப்பதற்கும் இவர்களே பொறுப்பாளிகளாகின்றனர்.

இலங்கையின் வடபுலத்தில் இவர்கள் "கதைகட்டிகள்" என்றும் "நவசிகள்" என்றும் அழைக்கப்பட்டனர். சில விடயங்களில் "குணாட்டியர்" என்றும் அவர்கள் குறிப்பிடப்பட்டனர். இஸ்லாமிய மரபில் இவர்கள் "குஸ்ஸாஸ்" என அழைக்கப்படுகின்றனர்.

தொன்மையான சமூகங்களின் அறிவு மற்றும் அனுபவக் கையளிப்புக்களில் கதை சொல்லி

களின் வகிபாகம் முக்கியமானதாக இருந்தமைக்குப் பொருள் உற்பத்தி முறைமை சார்ந்த சமூக உறவுகள் அடிப்படையாக இருந்தன. உடல் உழைப்பையும் நிலச் சொத்துரிமையையும் அடிப்படையாகக் கொண்ட விவசாய சமூகங்களில், உடலுழைப்பை வழங்குவதற்குரிய பலங்குன்றிய முதியோரும், பெண்களும், ஆக்கமலர்ச்சி கொண்ட நிலமற்றோரும், கதை சொல்லிகளாக மாறும் வாய்ப்புகள் அதிகரித்திருந்தன. வட இந்தியாவில் நிலவுரிமை அற்றோரும் கதை சொல்லும் ஆற்றல்மிக்கோரும் "பட்" என்ற தனி வகுப்பினராக வளர்ச்சியுற்றமை குறிப்பிடத்தக்கது.

தொல் சமூகங்களிலே கற்றல் மூன்று வகையாக இடம்பெற்றது. அவை:

(1) சந்தர்ப்ப வழியான கற்றல்

(2) சமூக வழியான கற்றல்

(3) குறியீட்டு நிலைக்கற்றல்

குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலே பெறப்பட்ட பட்டறிவை அடிப்படையாகக் கொண்டு நடத்தைகளை உருவாக்கிக் கொள்ளலும், அறிகை அமைப்பை வளமாக்கிக் கொள்ளலும், மனவெழுச்சிகளுக்குப் பயிற்சி தருதலும் சந்தர்ப்ப வழியான கற்றலாகின்றது.

சமூகத்தில் உலாவரும் பாத்திரங்களை அறிந்தும், முன்மாதிரிகைகளாகக் கொண்டும், உற்றுநோக்கியும் அறிவையும், நடத்தைகளையும் உருவாக்கிக்கொள்ளல் சமூகக் கற்றலாகின்றது.

ஐம்புலன்கள் வழியாக நுகரத்தக்க குறியீடுகளை அடிப்படையாகக் கொண்டு அறிவைத் திரட்டிக்கொள்ளல் குறியீட்டு நிலைக் கற்றலாகும். குறியீடுகள் என்பவை நிஜத்தின் பதிலீடுகளாகும். குறியீடுகள் சமூக வழியாகவே உருவாக்கவும் கற்றுக்கொள்ளப்படுகின்றன. சொற்குறியீடுகளைப் பயன்படுத்தி உரைநடை வடிவிலோ பாவடிவிலோ கதை சொல்லும் வல்லுனர்களாக கதை சொல்லிகள் விளங்கினர். கதைகளை எடுத்தியம்பவும், திரட்டிக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கும் உரிய ஆற்றல் வடிவங்கள் எல்லா மொழிகளிலும் காணப்படுகின்றன. எழுத்துருவமற்ற மொழிகளும் இவ்வகை ஆற்றல்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கதைகள் அகிலப்பண்பு கொண்டவை. கதையின் உருவாக்க அமைப்பியலே உலகப் பண்பாடுகள் என்ற அனைத்து அமைப்புக-

ளுக்குமுரிய பொதுத் தன்மைகள் காணப்படுகின்றன. சமூகத்தின் நேர் மற்றும் எதிர்ப்பண்புகளின் மோதலால் கதைகள் உருவாக்கம் பெறுதலும் வளர்ந்து செல்லலும் அகிலப் பொதுத் தன்மைகளாக இருக்கின்றன. ஒரு பண்பாட்டில் உருவான கதையை வேறு பண்பாட்டில் உள்ளோரும், சுவைக்கத்தக்கவாறு பொதுமை காணப்படுகின்றது.

மொழி எத்துணை பழைமையானதோ அத்துணை பழைமையாகி நிற்பது கதை வடிவமாகும். தமிழ் மொழியில் கதை என்பது கட்டு, குறிப்பு, கிளவி, புனைவு, கதானகம் போன்ற பல பெயர்களால் அழைக்கப்பட்டது. ஆங்கிலத்தில் *Tale, Fable, Story, Fiction* போன்ற சொற்கள் இத்தொடர்பிலே எடுத்தாளப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் *Myth* என்ற எண்ணக்கருவும் கதைக்கு இணையாகப் பயன்படுத்தப்படுகின்றது.

அனுபவங்களின் எடுத்துரைப்பிலிருந்து ஆரம்பித்து, அனுபவங்களின் பிறிதொரு பரிமாணமாகிய கற்பனைகளுடன் இணைந்து வளர்ந்து செல்லும் படிமலர்ச்சி நிலையினைக் கதைகள் கொண்டுள்ளன. தொல்குடியினர் சூழலை விளங்க முற்பட்டவேளை தோற்றம் பெற்ற கலைவடிவங்களுள் ஒன்றாக அமைந்த கதை சமூகத்துக்கு அறிவூட்டுவதற்கும் மனித நடத்தைகளை ஒழுங்குபடுத்துவதற்குமுரிய மொழிக்கருவியாகவும், கலைக்கருவியாகவும் படிமலர்ச்சி கொள்ளலாயிற்று.

நிகழ்ச்சிகளின் உயிர்ப்பித்தலுடன் வளர்ச்சிபெற்ற கதை அனுபவம் கடந்த காலத்தை உயிர்ப்பிக்கவும், இறந்தவர்களை உயிர்ப்பிக்கவும் வல்ல உளவியற் கருவியாகத் தொல்குடியினரால் பயன்படுத்தப்பட்டது. சூழலின் எதிர்மறை விசைகளைத் தாங்கிக்கொள்ளவும், அவலங்களுக்குப் பழக்கப்படவும்வல்ல கலைக் கருவியாகக் கதை பயன்படுத்தப்பட்டது.

உலகும் சூழலும் பொருள்களும் எவ்வாறு தோற்றம்பெற்றன என்பவற்றைத் தேடும் அறிகைச் செயற்பாடாகவும் கதைப் புனைவுகள் இடம்பெறலாயின. இந்நிலையிலே கதைகள் தொன்மங்கள் *(Myths)* என்பவற்றுடன் ஐக்கியப்பட்டு இணைந்து கொண்டன. இந்நிலையிற் கதைகள் நம்பிக்கைகளின் வடிவங்களாக மேலெழுந்தன.

மனித ஆற்றலைப் பெருக்கிக்கொள்ள வேண்டிய தேவை, சூழலுடன் நிகழ்த்தியப் போராட்டங்களைத் தொடர்ந்து விசை

கொள்ளச்செய்யலாயிற்று. ஆற்றலின் பெருக்க வடிவங்களை குறியீட்டு வடிவிலே கதைசொல்வோர் மேற்கொண்ட முயற்சியின் பயனாகப் பூதங்களும், தேவதைகளும் உருவாக்கப்பட்டன.

ஒட்டி இணைப்பதால் *(Hybrid)* ஆற்றலும், வினைத்திறனும் அதிகரிப்பதைத் தொல் குடிமக்கள் தமது தொழிற்பாடுகளில் இருந்து அறிந்துகொண்டனர். தடியும், நாணும், ஈட்டியும் ஒன்றிணைக்கப்பட்டபொழுது உருவான அம்பும் வில்லும் செயல்திறன் மிக்கதாக அமைந்தது. இவ்வாறாக ஒட்டி இணைக்கும் ஒன்றிணைப்பால் உருவான கருவிகளும், வண்டிகளும் மனித ஆற்றலின் பெருக்கத்துக்கு உதவின. வாழ்க்கை நிகழ்ச்சிகளை ஒன்றிணைத்துக் கதையாக்கம் செய்வதற்குரிய புலக்காட்சியை அவை ஏற்படுத்திக் கொடுத்தன.

உறுபழைமைப் பண்பாட்டில் *(Primitive Culture)* வாய்மொழிக் கதைக்கையளிப்பு சிறப்பிடம் பெற்றிருந்தது. ஓய்வு நேரங்களில் தமது பாவனைக்குரிய பொருட்களை அழகுபடுத்துதல் என்ற செயற்பாடு உறுபழைமைப் பண்பாட்டின் பிறிதொரு பரிமாணமாகும். இவ்வாறாக மட்பாண்டங்கள் மரப்பொருட்கள் மீது கோடுகளும் கோலங்களும் இடப்பட்டன. இந்த அலங்காரங்களிலே கேத்திர கணிதப் பண்புகள் விரவியிருந்தன. உற்பத்தி நடவடிக்கைகளோடும் கருவிகளின் ஆக்கத்தோடும் இணைந்திருந்த கேத்திர கணித அறிவு அழகுபடுத்தும் செயற்பாட்டிலும் எடுத்தாளப்படலாயிற்று. கேத்திர கணித அறிவின் வழியாக முகிழ்த்தெழுந்த நேர் எதிர் விசைகள், மற்றும் சமூக இயக்கத்திலும் இயற்கை இயக்கத்திலும் காணப்பெற்ற நேர் எதிர்விசைகள் கதை சொல்லிகளின் கதைப்புனைவுக்கும் கதை வளர்ச்சிக்கும் துணைசெய்தன.

பயிர்ச்செய்கைச் சமூகத்திலே கிடைக்கப்பெற்ற இரவு நேர ஓய்வும், தானியச் சேமிப்பினாற் கிடைக்கப் பெற்ற தன்னிறைவும் இரவு நேரக் கதை சொல்லல் - கேட்டல் என்ற பொழுது போக்குச் செயற்பாடுகளுக்கு இட்டுச் சென்றன. பயிர்ச் செய்கைப் பண்பாட்டிலே மகிழ்ச்சியைக் கொடுத்த செயற்பாடாக அறுவடை அமைந்தது. பயிர்ச் செய்கையிலிருந்து அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாகவே இயற்கை வளங்களில் இருந்து அறுவடையை மனிதர் பெற்றுக்கொண்டனர். அறுவடை என்ற பொருண்மிய எண்ணக்கருவின் நீட்சியாகவே கலைகளை மனிதர் தரிசிக்கத் தொடங்கினர். கதையாக்கமும் மொழிவழியாகப் பிறந்த அறுவடையாகக் கருதப்பட்டது.

பொருளுற்பத்தி முறைமையில் நிகழ்ந்த மாற்றங்களோடு இணைந்ததாக சமூக நிரலாக்கம் நிலைக்குத்து நிலையில் வலிமை பெறத் தொடங்க கதை சொல்லும் பண்பாட்டிலும் நிரலாக்கம் வளர்ச்சிப் பெறலாயிற்று. அரசர், நிலப்பிரபுக்கள், மந்திரி பிரதானிகளை முன்னிலைப்படுத்தும் கதையாக்கங்கள் மேநிலையினருக்கும், சமானியர்கள் தொடர்பான கதைகளும், உபகதைகளும் நிரலமைப்பின் அடிநிலை மாந்தருக்கும் உரியனவாயின. இவ்வாறான "கதை இடைவெளி" பிற கலைகளிலும் பிரதிபலித்தமையை சிலப்பதிகாரம் சுட்டும் "வேத்தியல் - பொதுவியல்" ஆகிய எண்ணக்கருக்களால் அறிய முடிகிறது. உயர்வகுப்பினர் கதை சொல்லிகளைச் சேவைக்கு அமர்த்தியவேளை அடிநிலை மாந்தரில் மூத்தோரும், அனுபவம் மிக்கோரும், படைப்பாற்றல் கொண்டோரும் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கதை சொல்லிகளாயினர். இவ்வாறு சேவைக்கு அமர்த்தப்பட்டோரே வட பாரதத்தில் "கதகர்" (பட்) என்ற சமூக வகுப்பினராக வளர்ச்சி பெற்றனர் (இச்சமூகத்தினர் பற்றி பி.சி. சௌத்திரிராய் விரிவாக ஆராய்ந்துள்ளார் - சாகித்திய அகதமி, புதுடில்லி, 1994)

நாடுகளைக் கைப்பற்றிக் கொள்ளலும், வளமான நிலங்களைத் தமதாக்கிக் கொள்ளலும், செல்வத்தைத் திரட்டிக்கொள்ளலும் மேலோங்கியோர் கதைகளின் உட்பொருளாயின. ராகுல் சாங்கிருத்யாயன் சொல்லும் கதை ஒன்றை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். (மனித சமுதாயம், சென்னை என்.சி.பி.எச்.பிரசுரம், 2003, ப.128) ராஷ்டிர பாலர் என்ற சீடன் அரசனான கவுரவ்யவரை இவ்வாறு கேட்டான்.

"உன்னுடைய நம்பிக்கைக்குரிய சேவகன் ஒருவன் கிழக்குத் திசையிலிருந்து வந்து, "மகாராஜா" நான் கிழக்குத் திசையிலிருந்து வந்திருக்கிறேன். அங்கே நான் அடர்த்தியான மக்கள் தொகையைக் கொண்ட ஒரு நாட்டைப் பார்த்தேன். அங்கே யானைகளும், குதிரைகளும், காலாட்படைகளும் எண்ணிலடங்காமல் இருக்கின்றன. விலையுயர்ந்த யானைத் தந்தங்களும், மான்தோல்களும் உள்ளன. இயற்கைத் தங்கமும் செயற்கைத் தங்கமும் செயற்கைப் பொன்னும் நிறைய இருக்கின்றன. அங்கே பெண்கள் மிக சுலபமாகக் கிடைக்கின்றனர். அந்த நாட்டைத் தங்கள் படைபலத்தால் வெற்றிக் கொள்ளலாம். அதைத் தாங்கள் வெற்றி கொள்ளுங்கள் மகாராஜா! என்று கூறினால் நீ என்ன செய்வாய்?" என்பதற்கு அதையும் வெற்றி

கொண்டு அரசாளுவேன் என்று கவுரவ்ய அரசனின் பதில் அமைந்த கதை, நிலப்பிரபுத்துவத்தின் அரச இயல்பைத் தெளிவுபடுத்துகின்றது.

சமூக இயக்கத்துக்கு பொருளுற்பத்தி எத்துணை முக்கியத்துவம் வாய்ந்ததோ அத்துணை முக்கியத்துவம் வாய்ந்ததாக அறிவு உற்பத்தியும் இலக்கிய உற்பத்தியும் அவற்றின் கையளிப்பும் முக்கியத்துவம் பெறுகின்றன. பொருளுற்பத்திக்கும் இலக்கிய உற்பத்திக்குமுள்ள தொடர்புகள் நேரானதாகவும் வெளிப்படையானதாகவும் இருக்கலாம். முரண்பாட்டின் இயக்கமாக எதிரானதாகவும் இருக்கலாம் மறைபொருளாகவும் இருக்கலாம்.

நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் எழுச்சிகொண்டு கோவை செய்யப்பட்ட புராணங்களும், காவியங்களும் அச்சமூகத்தின் நியாயப்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்தன. அரச வலிமையும், சமூக மரபுகளை வழுவாது பின்பற்றலின் மேன்மைசார் அறமும் வலியுறுத்தப்பட்டன. அவற்றைச் சாமானிய கதை சொல்லிகள் எடுத்துரைப்புக்கு உட்படுத்தியவேளை தமது உணர்வுகளோடு இணைந்த "உபகதைகளை"யும் இணைத்துக் கூறினர். பேச்சு வழக்கில் "உபகதை" என்ற எண்ணக்கருவே இலங்கையின் வடபுலத்தில் நிலவி வந்தது. (செவ்வி - நன்னித்தம்பி முதியவர், இணுவில்)

ஆட்சி முறைமையின் கருத்தியலுக்குரிய மாற்றுக் கருத்தியலை முன்னெடுப்பதற்கு இவ்வாறான உபகதைப் பெய்தல் துணையாயிற்று. உடல் உழைப்பாளிகளின் பறிப்பும் சுரண்டலறியா மனக் கோலங்களை விளக்குவதற்குரிய உபகதைகளுள் ஒன்றாகக் கதை சொல்லிகள் "விறகு வெட்டியின் கதையை" எடுத்துரைப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது. தனது இரும்புக் கோடரியை இழந்த விறகு வெட்டி வெள்ளிக் கோடரி, பொற்கோடரி முதலியவை காட்டப்பட்ட வேளை தனக்குரியவை அல்ல என்று கூறுதல் சுட்டிக்காட்டப்படத்தக்கது.

வாய்மொழி இலக்கியங்களும் அவற்றை எடுத்தாண்ட சமூக அடுக்கமைப்பின் அடிநிலை சார்ந்த கதை சொல்லிகளும் ஒருவகையில் ஒடுக்குமுறைக்கும், பறிப்பு முறைக்கும் எதிரான நாட்டார் கதைகளை எடுத்துரைப்புக்குப் பயன்படுத்தினர். இவ்வாறான செயற்பாடு அடிநிலை மாந்தரை மேலெழுச்சி *(Articulation)* கொள்ளச் செய்யும் கலைச்செயற்பாடாகக் கொள்ளத்தக்கது. காலனித்துவ ஆட்சிக்காலத்தில் தோற்றம் பெற்ற கிராமியக் கலை வடிவங்களில் இவ்வாறான மேலெழுச்சித் தூண்டல்களைக் காணமுடியும்.

ஒடுக்குமுறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் எதிரான விசைகளைப் பொதிந்த கதைகள் "முண்டிக் கதைகள்" மற்றும் "மிண்டிக் கதைகள்" என அழைக்கப்பட்டன. (செவ்வி: நன்னித்தம்பி முதியவர், இணுவில்) முட்டுதல் முண்டுதல் என்ற தொழிற்பாட்டு எண்ணக்கருக்களின் அடியாக அவை தோற்றம் பெற்றிருக்கலாம். நெறிப்படுத்துதல் என்ற பொருளையும் அவை கொண்டுள்ளன. இன்றும் தேர்களை நெறிப்படுத்தும் மரத்தினாற் செய்யப்பெற்ற மோதும் தண்டினை "முண்டி" மற்றும் "மிண்டி" என்று சொல்லும் வழக்கம் உண்டு. (இரத்தினம் ஆச்சாரி, தாவடி) இக்கதைகளில் அமைந்துள்ள விந்தையான கதை அலகுகளும் (Motif) நாட்டார் புலக்காட்சியின் வழியான தீர்வுகளும், கதைகேட்போருக்குக் கலை இங்கிதத்தைக் கொடுக்கின்றன. இங்கிதத்துடன் கதை சொல்லிகள் மேற்கொண்ட நிபந்தனையுறும் விளைவால் (Conditioningeffect) அவர்கள் விருப்புடன் சமூகத்தில் வரவேற்கப்பட்டனர். அதாவது கதை கேட்கும் மகிழ்ச்சி கதைசொல்லிகளைக் காணும் பொழுது ஏற்படலாயிற்று.

கதைசொல்லிகள் தமது எடுத்துரைப்பின்போது பலவகையான இணக்கல் (Improvisation) நுட்பங்களைப் பயன்படுத்துவர். இந்த உபாயங்கள் "மோடி" என்றும், "சுருள்" வைத்தல் என்றும் பேச்சு வழக்கிலே குறிப்பிடப்படும். மட்டுவில் கிராமத்தில் வாழ்ந்த கதை சொல்லிகளின் செல்வாக்கு பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் சுருள்நிலை எடுத்துரைப்புரைப்புக்களிலே நேரடியான செல்வாக்கைச் செலுத்தியமை பலநிலைகளிலே காணக்கூடியதாகவுள்ளது. வகை மாதிரிக்கு ஓர் எடுத்துக்காட்டைக் கூறலாம். "பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் ஆசிரிய கலாசாலை வகுப்பறையிலே கற்பிப்பதற்கு வந்தவுடன் அந்தப் பெண் செத்த குரங்கைத் தலையில் சுமந்தபடி வருவதைப் பாருங்கள் என்றார் நாங்கள் வியப்புடன் திரும்பிப் பார்த்தோம். செத்த குரங்கு என்றால் - "சாமந்தி" என்ற பூ என்றார் - வகுப்பறையில் ஒரே குதூகலம்" (செவ்வி, பாக்கியம் ஆசிரியை, இணுவில்) இக்கதை பின்னர் அவர் எழுதிய "இலக்கிய வழி" என்ற நூலிலும் இடம்பெற்றுள்ளது.

தமிழகத்தில் அம்புலி மாமா சஞ்சிகை வெற்றி பெற்று இன்று வரை இயங்கிக்கொள்வதற்கு கதை சொல்லிகள் உருவாக்கிய கதைப் படிமங்களும், காட்சிப் படிமங்களும், சம்பவ எறிவுகளும் (Projections) காரணங்களாக இருத்தலை நிராகரிக்க முடியாது.

புராணக் கதைகள் அல்லது தொன்மப் புனைவுகள் நீடித்த வாழ்வு பெற்றுத் தலைமுறையாகக் கையளிக்கப்பட்டு வந்தமைக்கு

கதை சொல்லிகளே முக்கிய பங்கு வகித்து வந்துள்ளனர். எடுத்துரைப்பினால் வாழ்வுபெற்று வந்த கதைகளின் உள்ளடக்கங்களை மாற்றியும் வந்துள்ளனர். தொன்மையான சமூகங்களில் உலகை விளங்கவும் விளக்கவும் முயன்ற கலைச் செயற்பாடுகளின் அடிப்படையாகத் தொன்மங்கள் *(Myths)* தோற்றம்பெற்றன. அனைத்து மக்களின் உணர்வுகளோடும் தொன்மங்கள் இணைந்துள்ளமையால் அவை கூட்டு நனவிலி *(Collective Unconscious)* வெளிப்பாடு என யுங் *(Jung)* அவர்கள் ஒரு சமயம் குறிப்பிட்டார். இவ்வாறாகப் பொதுமையப்படுத்துதல் அல்லது "கூட்டுமொத்தப்படுத்துதல்" தொன்மம் பற்றிய விளக்கத்துக்குத் தடையாகவுள்ளது.

தொன்மம் பற்றிய புலக்காட்சியில் சமூக நிரலமைப்பு வேறுபாடுகளுக்கு ஏற்ப மாறுபட்டு நிற்றல் குறிப்பிடத்தக்கது. தொன்மங்கள் புவியியல், பிரபஞ்சவியல், கோளவியல், தொழில்நுட்பப் பொருண்மியநிலை, சமூகவியல், ஊடிணைப்பு *(Integrative)* அடிப்படைகளில் விளக்கத்தக்கது என்று லெவி ஸ்ராஸ் விளக்கம் தந்தமை *(Alan Barnard (2007) Social Anth Ropology)* தொன்மம் பற்றிய பன்மை நோக்கினுக்கு ஒருவகையில் இடமளித்தது.

சமூக இருப்பின் தூரங்கள் தொன்மக் கதைகளில் இடம்பெறுதல் சமூகத்தின் மேலோங்கியவர்களுக்கும் ஏனையோருக்குமிடையே கதைகளில் வேறுபாடு காட்டப்படுதலை ஏற்படுத்தியது. எடுத்துக்காட்டாக, மழைக்கடவுளைத் தமது உழைப்புக்கு உதவுவதாக வேளாண்மை வேலையாட்கள் கருத, பண்ணையார் தமது விளைச்சலைப் பெருக்கும் கடவுளாகக் கருதும்நிலை பொங்கல் மற்றும் சல்லிக்கட்டு நிகழ்ச்சிகளாற் புலப்படுத்தப்படுகின்றது. பெருநிலம் மற்றும் சிறுநில சொந்தக்காரர் பொங்கலைக் கொண்டாட பண்ணை ஊழியர்கள் சல்லிக்கட்டைக் கொண்டாடுதல் குறிப்பிடத்தக்கது. நிலமுடையோர் "பொங்கும்" கதைகளும் நிலமற்றோர் "தண்டும்" (தண்டல்) கதைகளும் வாய்மொழி மரபுகளிலே காணப்படுகின்றன.

வாய்மொழிக் கதையானது பண்பாட்டை வெளிப்படுத்தும் சுட்டியாக *(Index)* மட்டுமன்றி சமூக இயல்பையும் சமூக நிரலமைப்பின் இயல்பையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. அரசர் மற்றும் நிலச் சொத்துடையோருக்கான புனைவுகளைக் கூறும் கதைகளை சமூக அடிமட்டத்துக் கதை சொல்வோர் தம்முடன் ஒட்டிப்போகாத புற அனுபவமாக அவற்றைப் பார்த்தலும், அடிமட்ட மக்களின்

புனைவுகளைக்கூறும் பொழுது உள்ளே நின்று பார்த்தலுமான இருமைப் போக்குகளும் கதை சொல்லிகளிடத்தே காணப்பெற்றன.

கதை சொல்லிகளாற் பயன்படுத்தப்பட்ட "பொதுக்கதைகள்" எல்லைகளையும் கடந்து பரவலாகப் பயன்படுத்தப்பட்டும் எடுத்தாளப்பட்டும் வந்தன. விக்கிரமாதித்தன் கதை, ஈசாப் கதைகள், பஞ்ச தந்திரக் கதைகள், பீர்பால் கதைகள், அலாவுதீனும் அற்புத விளக்கும், மதனகாமராசன் கதை, அப்பாஜி யுக்திக் கதைகள், தெனாலிராமன் கதைகள், தக்கண பூர்வ கதைகள், அவாந்திக் கதை, ஜாதகக் கதைகள் முதலியவை பல ஆள்புலங்களிலும் எடுத்தாளப்பட்ட பொதுக்கதைகளாகும். இவற்றைவிட குறிப்பிட்ட கிராமங்கள், குடும்பங்கள், பற்றிய கதைகளும் எடுத்துரைப்புக்கு உள்ளாக்கப்பட்டன.

இலங்கையின் வடபுலத்துக் கதை சொல்லிகள் நன்மை தீமை முதலாம் முரண்பாடுகளை விளக்குவதற்கு எருது, நரி ஆகிய விலங்குகளைக் குறியீடுகளாக முறையே பயன்படுத்தினர். அனுபவங்களைக் கட்புலக் குறியீடுகளாக்கி வெளிப்படுத்துவதற்கு பறவை, விலங்கு முதலியவற்றைப் பயன்படுத்தும் அறிகைச் செயல்முறை பல்வேறு பண்பாடுகளிலும் காணப்படும் பொதுப்பண்பு ஆகும்.

தென்னாசியாவின் உற்பத்திச் செயற்பாடுகளில் கடின வலுவை வழங்கும் விலங்காக எருது செயற்பட்டது. எருதை நந்தியாகக் கருதலும் புனிதமுடையதாகக் கருதுதலும் அதன் வேறு பரிமாணங்களாகின்றன. எருது "ஏறு" மற்றும் இடபம் என்ற உயர்ந்த எண்ணக்கருக்களாகவும் கருதப்பட்டது. இடபம் மீயாற்றல் கொண்ட விலங்காக தன்னம்பிக்கை, உறுதி, கள்ளங்கபடமின்மை, பயமின்மை, பலம், கடின உழைப்பு, ஒழுக்கம், நுண்மதி, கடவுள் நம்பிக்கை முதலானவற்றின் குறியீடாக வடபுலத்து நாட்டார் கதைகளிலே சுட்டப்படுகின்றது. (ஜெயராசா, (2000) யாழ்ப்பாணத்து மரபுவழிக் கல்வி, நல்லூர், போஸ்கோ பதிப்பகம்)

எருதின் தொழிற்பாடுகளைக் குறிப்பிடும் நாட்டார் பாடல்களும் வடபுலத்தில் நிலவுகின்றன.

"வெள்ளை மாடே வெள்ளை மாடே
எங்கே போறாய்?
வெட்டவெளிப் புல் கடிச்சு
மேயப் போறன்

வெள்ளை மாடே வெள்ளை மாடே
எங்கே போறாய்?
வேளைக்கொரு சுமையிழுக்கத்
துடங்கப் போறேன்
வெள்ளை மாடே வெள்ளை மாடே
எங்கை போறாய்?
தங்க மணித் தேரிழுக்கத்
தாவிப்போறேன்"

வடபுலத்து மரபில் எருதுகள் மனிதர்களின் பதிலீடுகளாகக் கருதப்பட்டன. என்னும் ஒருபடி கூர்ந்து நோக்கினால் தெய்வீகம் கலந்த பதிலீடுகளாகக் கருதப்பட்டன. திருநீறும், முக்குறியும், குங்குமமும் அதற்கு இடும் வழக்கம் இன்றும் உண்டு.

"ஏறு போல் நிமிர்-
ஏறு போல் நட
ஏறு போல் உழை
ஏறு போல் வாழ்"

முதலாம் தொடர்கள் இன்றும் உரை வழக்கிலே காணப்படுகின்றது.

கதை சொல்லிகள் உழைப்புக்கும், செல்வத்துக்கும் குறியீடாக எருதைக் குறிப்பிட்டமை போல் உழைப்பின்மை ஏமாற்றுத்தனம் முதலியவற்றுக்குக் குறியீடாக நரியைப் பயன்படுத்தினர். எருதை ஏமாற்ற முயன்ற நரி நீர்க்குழியில் விழுந்து தத்தளித்த இடம் "நரிக்குண்டு" "நரியன்குண்டு" என்பது கதை சொல்லிகளாற் குறிப்பிடப்பட்ட தகவல் (இணுவை செ.நடராசா, செவ்வி) யாழ் நகரில் கலட்டி என்ற இடத்தில் இது அமைந்துள்ளது.

மழைக்காலத்து இராப்பொழுது குடும்பக்கதை சொல்லிகளுக்கு உவப்பான காலமாக அமைந்தது. அக்காலத்தைய விரிந்த குடும்பங்களின் மூத்தோர் கதை சொல்லிகளாக விளங்கினர். "நெருப்புச் சட்டிக்கதை" , தீச்சட்டிக்கதை" என்ற தொடர்கள் வழக்கிலிருந்தன. அதாவது மழைக்கால இரவில் குளிர்காய்வதற்காக ஒரு பெரும் சட்டியில் தீமூட்டி அதற்குள் உலர்ந்த வேம்பம் விதைகளை இட்டுக்

குளிர்காய்ந்து கொண்டிருக்கும்வேளை முதியவர் ஒருவர் கதை சொல்லத் தொடங்குவார்.

தென்மராட்சியில் உள்ள மட்டுவிலில் பெண் கதை சொல்லி-களும் இருந்தனர். (தகவல் - எழுத்தாளர் டேவிட்) பெண்கதை சொல்லிகள் கைகளால் தொழில்களைச் செய்தபடி கதைகளை அவிழ்த்தனர். பாய்இழைத்தல், பெட்டிகடகம் இழைத்தல், பனங் கிழங்கு பதனிடல் முதலிய வேலைகளைச் செய்துகொண்டு முதிய பெண்கள் வாழ்மொழி வழியாகத் தாம் அறிந்த கதைகளைத் தமது பட்டறிவுடன் தொடர்புபடுத்தி வழங்கினர்.

நிலவுரிமையை அடிப்படையாகக் கொண்ட தன்னிறைவுப் பொருண்மிய நிலையைக் கொண்ட யாழ்ப்பாண சமூகத்தில் முதல் முதலாகப் "பணப்பயிர்" என்ற வகையில் புகையிலை அறிமுகமா-கியது. இப்பயிர்ச்செய்கை முறைமையும் பதனிடும் நடவடிக்கை-களும், சுருட்டுத் தொழிலின் தோற்றம் என்ற பொருண்மிய நடவடிக்-கைகள் யாழ்ப்பாணத்து மக்களின் சிந்தனைப்போக்கிலும் இலக்கிய நுகர்ச்சிப் பாங்குகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தின. இருந்த நிலை-யில் கைவிரலசைவுகளால் மேற்கொள்ளப்படும் தொழிலாக சுருட்-டுத்தொழில் அமைந்தது. நீண்ட நேரம் ஓரிடத்தில் இருந்தவாறு சுருட்டுத் தொழிலில் ஈடுபட வேண்டியிருந்தது. இந்நிலை சுருட்டுக் கொட்டில்களை அடிப்படையாகக் கொண்ட கதை சொல்லிகளை உருவாக்கியது. கூலிக்குக் கதை சொல்லுவோர் தோற்றம் பெற்றனர். சுருட்டுவோர் சூழவிருக்க கதை சொல்லி நடுவிலிருந்து உரத்த தொனியில் கதை சொல்வார். அவர் இருப்பதற்கென விரிக்கப்படும் ஓலைப்பாய், "கதை சொல்லிப்பாய்" எனப்பட்டது. (தகவல் க.சுப்பையா, இணுவில்)

கதை சொல்லிகள், "புராணம்" "இடைக்கதை" என்ற இரண்டு வடிவங்களைப் பயன்படுத்தினர். கம்பராமாயணம், மகாபாரதம், பெரியபுராணம், கந்தபுராணம் முதலியவை நாள்தோறும் தொடர் கதையாகச் சொல்லப்பட்டன. சில சமயங்களில் ஒரு புராணத்தில் வரும் சம்பவம் வேறொரு புராணத்திலே சிலமாறுதல்களுடன் எடுத்-தாளப்படுதல் உண்டு. கதை சொல்லிகள் சுவையூட்டுவதற்காக புரா-ணங்களில் வரும் பாத்திரங்களுக்கு இணையான கிராமத்துப் பாத்திரங்களையும் தொடர்புபடுத்திக் கதை சொல்லல் உண்டு. "இடைக்கதைகள்" என்பவை கதை சொல்லிகள் தாமே உருவாக்கிய கதைகளாகும்.

சில சுருட்டுக் கொட்டில்களில் பெருங்கதை எனப்படும் உதயணன் கதையும் சொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது உதயணன் கதை குணாட்டியர் என்பவர் பைசாச மொழியில் எழுதிய "பிருகத்கதா" வைத் தழுவித் தோன்றியது என்ற கருத்தும் உண்டு. பிருகத்கதா என்பது தமிழில் பெருங் கதையாயிற்று. உதயணனது வீரதீரச் செயலைக்கூறும் இந்நூல் அவனது யாழின் இசைச் சிறப்பையும் விளக்கியுள்ளது. "யாழ்பாடி" என்ற தொன்மத்துக்குப் பதிலீடாகவும் யாழில் சிறந்த உதயணன் கதை வழக்கிலிருந்தது. அதேவேளை விநாயக புராணத்தையும் பெருங்கதை என்று கூறும் மரபு யாழ்ப்பாணத்தில் இன்றும் காணப்படுகின்றது.

சித்திரை மாதத்தில் பெரும்பாலும் பத்தினிக்கதை அல்லது கோவலன் கதை சொல்லப்பட்டது. சித்திரைப் பூரணை தினத்தில் அக்கதை கதை கூறி முடிக்கப்பட்டதுடன் அன்றைய நாளில் அனைவருக்கும் சித்திரைக் கஞ்சி வழங்கப்பட்டது.

காவியங்கள் கதை சொல்லிகளுக்கு உவப்பான கலை வடிவங்களாக இருந்தன. அதன் நீண்டு நெகிழ்ந்த அமைப்பும் உபகதைகளை உள்வாங்கக்கூடிய சிறப்பும் கதை சொல்லிகளுக்கு அனுகூலமாக அமைந்தன. பெருங்காப்பியங்கள் பலரது ஆக்கங்களையும் நம்பிக்கைகளையும் "தொகுத்த" முயற்சிகளாகவே அமைந்துள்ளன. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நோக்கங்களும் நிகரற்ற தலைவன் பற்றிய புனைவும், மலை, கடல், நாடு, நகர் மற்றும் அறுவகைப் பருவம் இருசுடர்த் தோற்றம், மணவிழா, முடிவிழா, பொழில் விளையாட்டு, நீர்விளையாட்டு, மக்கட்பேறு, மந்திராலோசனை, தூது, போர், வெற்றி முதலாம் பல பரிமாணங்களூடே கதை சொல்லிகள் தமது கற்பனைகளையும், அனுபவங்களையும் செய்து கொள்வதற்கு வாய்ப்புக்கள் நிறைந்துள்ளன.

கதை சொல்லிகளின் செல்வாக்கு தமிழின் முன்னோடி நாவலாசிரியர்களிடத்தும், சிறுகதையாளர்களிடத்தும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 1875ஆம் ஆண்டில் தூ.வி.சேஷையங்கார் "ஆதியூர் அவதானி" என்ற நூலை வெளியிட்டார். அந்நூலிலே கதை சொல்லிகளின் தாக்கம் நேரடியாக வெளிப்பட்டுள்ளது. வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் பஞ்சதந்திரப் பாங்கில் அமைந்து கதைசொல்லிகள் எடுத்தாண்ட கருக்களைத் தொகுத்து வழங்கியது. பொதுவாக இந்தியா முழுவதிலும் சிறப்பாகத் தமிழிலும் பழைமையின் ஆதிக்கம் நிலவுகின்றது என்று கூறுகின்றவேளை

சிறப்பாகப் புனைகதைகளிற் கதை சொல்லிகளின் செல்வாக்கைப் புறந்தள்ளிவிட முடியாதுள்ளது.

சிறுகதைகளைப் பொறுத்தவரை வ.வே.சு ஐயர் மற்றும் புதுமைப்பித்தன் முதலியோரது கதையாக்கங்களில் கதை சொல்லிகளின் செல்வாக்குகளை நேரடியாகக் காண முடிகிறது. வ.வே.சு. ஐயரின் மங்கையர்க்கரசியின் காதலும் காங்கேயனும் கயேலிக் மகாகவியான ஒஸ்லியானுடைய காவியங்களின் "பந்தாவில்" எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"குலோத்துங்க சோழனுக்காகக் கலிங்கம் சென்று வென்று வந்த கருணாகரத் தொண்டமானுடைய மகளான மங்கையர்க்கரசி என்னும் மங்கை கருணாகரன் என்னும் வாலிபனைக் காதலிக்கிறாள்" என்ற முற்கோப்புப் புனைவு, கதை சொல்லிகளின் எடுத்துரைப்பின் தொடர்ச்சியைக் காட்டுகின்றது. புதுமைப்பித்தன் எடுத்தாண்டுள்ள காவிய நிகழ்ச்சிகள் கதை சொல்லிகளின் செயற்பாடுகளுக்குப் புது வாழ்வு கொடுக்கின்றன.

ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளாகிய இலங்கையர் கோன், மற்றும் சி.வைத்தியலிங்கம் ஆகியோரிடத்து ஏழாலைக் கிராமத்தின் கதை சொல்லிகளின் செல்வாக்குகள் இருந்தமையை மறுப்பதற்கில்லை, ஐயம்பிள்ளை பொன்னையா மற்றும் தாமோதரம்பிள்ளை, சடைவரதர் முதலிய கதை சொல்லிகள் ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளின் சூழலில் வாழ்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் ஏழாலையூர்க் கதை சொல்லிகளிடத்து ஆன்மிக சல்லாபங்கள் மேலோங்கியிருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. சி.வைத்திலிங்கம் அவர்களது கதைகளிலே முகிழ்த்தெழுந்த உலக நோக்கினுக்கு கதை சொல்லிகளின் ஆன்மிக சல்லாபங்களும் விசையூட்டின. வ.அ. இராசரத்தினம், அருள் செல்வநாயகம், அப்துல்ஸமது ஆகியோரிடத்தும் கதை சொல்லிகளின் செல்வாக்கு உண்டென்று கூற முடியும்.

இஸ்லாமியப் பண்பாட்டில் கதை சொல்லல் "குரஸ்ஸக" மரபின் வழியாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. அவர்களின் செல்வாக்கை அப்துல் ஸமதுவின் ஆக்கங்களிலே காணமுடியும்.

கதை சொல்லிகளின் சமூகச் செயற்பாடுகளையும் கதை சொல்லும் திறன்களையும் வெறுமனே ஒற்றைப் பரிமாணத்தில் அணுக முடியாது. சமூக நிரலமைப்பின் இயல்பும், அவர்களுக்குக் கிடைக்கப் பெற்ற பட்டறிவும், கதை உள்ளடக்கத்திலும் எடுத்துரைப்பிலும்

செல்வாக்குகளை ஏற்படுத்தியமை நோக்கப்பட வேண்டியுள்ளது. கடந்த காலத்தின் கலை அடையாளங்களாக அவர்கள் செயற்பட்ட நிலை இலக்கிய வரலாற்று ஆசிரியர்களின் கவனத்தை ஏன் ஈர்க்கவில்லை என்பதும் சிந்திப்பதற்குரியது.

சிறார் கல்விச் செயற்பாட்டிலே கதை சொல்லல் மேலும் மேலும் வலியுறுத்தப்பட்டுவரும் வேளை கதை சொல்லிகளின் அனுபவங்கள் ஆசிரியர்களுக்குப் பயனுடையவையாய் அமையும். சிறப்பாக "இணக்கல்" நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு அவை பெருமளவிலே துணை செய்யும்.

★★★

02

புனைவின் நீட்சி



வசனம் தழுவிய புனைவின் நீண்ட வடிவமாக நாவல் அமைகின்றது. அச்சு வடிவிலான பிரதியெடுக்கும் முயற்சியோடு நாவலின் வளர்ச்சியை இணைத்து நோக்குவோர் செப்பமான நாவலின் தொடக்கம் பதினேழாம் நூற்றாண்டு என்று குறிப்பிடுவர். ஆனால், நாவல் என்ற எண்ணக்கரு பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் இத்தாலியிலே தோற்றம் பெற்றுவிட்டதென்ற கருத்தும் உண்டு.

உலகில் விரைந்து வளர்ச்சியடையத் தொடங்கிய வர்த்தகமயப்பாடும், கைத்தொழில் அக்கங்களோடு நிகழ்ந்த செல்வக்குவிப்பும், காலனித்துவ நாடுகள் மீது மேற்கொள்ளப்பட்ட பறிப்பு நடவடிக்கைகளும், முதலாளியத்தின் எழுச்சியும் மக்கள் மனங்களிலே உருவாக்கிய நெடுஞ்சுமைகள், நீண்ட இலக்கியப் புனைவுகளுக்கு வழிவகுத்தன.

முதலாளியத்தின் வளர்ச்சிக்கு உதவிய சிறப்பார்ந்த காரணியாக உற்பத்திகளினதும் தொழிற்பாடுகளினதும் பன்முக ஆக்கங்கள் அமைந்தன. முதலாளியம் உருவாக்கிய பன்முக வடிவங்கள் கலை இலக்கியங்களிலும் ஊடுருவின. பிரான்சில் நிகழ்ந்த நாவல் இலக்கியப் பன்முகப்பாடுகளை நோக்கும் பொழுது, முதலாளியம் உருவாக்கிய சமூகத்துக்கும்

நாவலின் பன்முக விரிவுகளுக்குமிடையேயுள்ள தொடர்புகளை அறிந்துகொள்ள முடியும். பிரஞ்சு நாவல் வளர்ச்சியில் பின்வரும் கிளை பரப்பல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

(1) மெய்யியல் சார்ந்த நாவல்கள்: ஜீன்தலா பென்ரெயினே மற்றும் வேல்ரேயர் ஆகியோரின் நாவல்கள் இவ்வகையைச் சார்ந்தவை.

(2) உளவியல் மற்றும் இயற்பண்புநெறி சார்ந்தவை: ரூசோவின் நாவல்கள் இப்பிரிவில் அடங்கும்.

(3) உளக்கவர்ச்சியியல் *(Romantic)* சார்ந்தவை: லாகுலோஸ் உருவாக்கிய நாவல்கள் இப்பண்பை உள்ளடக்கியவை.

(4) வரலாற்று நாவல்கள்: அல்க்சாண்டே டமாளின் நாவல்கள் இப்பிரிவில் அடங்கும்.

(5) பழக்க வழக்கங்களையும் மனிதப் பண்புகளையும் வலியுறுத்தும் நாவல்கள்: ஹோர்னே த பிளாஸின் நாவல்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

(6) நடப்பியல் நாவல்கள்: கஸ்டேவ் பிளாபேட்டின் நாவல்கள் இவ்வகைக்கு எடுத்துக்காட்டாக அமையும்.

நாவலின் வளர்ச்சியைத் தொடர்ந்து ஐரோப்பாவில் "எழுத்தாளர்" என்ற எண்ணக்கரு தோற்றம்பெற்றது. அதாவது கவிஞர்களோ அல்லது நாடக எழுத்துரு செய்பவரே "எழுத்தாளர்" எனத் தொடக்க காலத்தில் அழைக்கப்படவில்லை. நாவல் எழுதுவோரே "எழுத்தாளர்" என வகைப்படுத்தப்பட்டனர்.

தமிழ் நாவலாக்கங்களைப் பொறுத்தவரை ஆங்கிலக் கல்வியின் தாக்கம் மிகையாகக் காணப்பட்ட சூழலில் வெளிப்பாடு துலக்கம் பெற்றது. மாயூரம் வேதநாயகம்பிள்ளை, பீ.ஆர்.ராஜமையர், ஆ.மாதவையா, கல்கி.ரா.கிருஷ்ணமூர்த்தி முதலியோர் ஆங்கிலக் கல்வி வழியாக எழுச்சி பெற்றோராகின்றனர். ஆங்கில நாவல்களினதும், உலக நாவல்களினதும் செல்வாக்குகள் மு.வரதராசன், அகிலன், க.நா.சுப்பிரமணியம், சுந்தரராமசாமி, நீல.பத்மநாதன், தி.ஜானகிராமன் போன்ற பின்வந்த நாவலாசிரியர்களிடத்தும் ஏற்படலாயின.

சோவியத்தின் இலக்கிய ஆக்கங்களும், பொதுவுடமைக் கோட்பாடுகளும் தமிழ் நாவலாக்கப் புலக்காட்சியிலே மாற்றங்களை ஏற்படுத்தலாயின. இவ்வகையில் மூன்று பெரும் சோவியத்

நாவலாசிரியர்களின் செல்வாக்குகள் குறிப்பிடத்தக்கவை. ஒருவர் ரோல்ஸ்ரோய் இரண்டாமவர் டொஸ்ரோவ்ஸ்கி மூன்றாமவர் மாக்ஸிம் கோர்க்கி அவர்களின் ஆக்கங்கள் சோவியத் சமூகத்தின் முனைவுப்பாடுகளின் இயல்பை வெளிப்படுத்தின. "போரும் சமாதானமும்" (1866) மற்றும் "அனாகரினினா" (1877) முதலாம் ரோல்ஸ்ரோயின் நாவல்கள் மேட்டுக்குடியினரின் வாழ்க்கை முனைப்புக்களையும் சமூகத் துன்பியலையும் முறையே வெளிப்படுத்தின. டொஸ்ரோவ்ஸ்கியின் நாவல்கள் ஓரங்கட்டப்பட்ட மற்றும் எல்லை நிலையிலுள்ள பாட்டாளிகளின் வாழ்க்கையைச் சித்திரிப்பவையாய் அமைந்தன.

பாட்டாளிகளை நடுவனாகக் கொண்ட நாவல்களைப் புனைந்த மார்க்ஸிம் கோர்க்கியின் நாவற்புனைவின் செல்வாக்கு நடப்பியல் நாவல்களின் ஆக்கத்துக்கும், குறிக்கோள் கொண்ட இலக்கியப் புனைவுகளுக்குமுரிய உந்தல்களைத் தந்தன. ஒருபுறம் கலைச்சுவையேற்றமும் மறுபுறம் கற்பித்தலும் என நாவலின் பரிமாணங்கள் தமிழிலே முகிழ்த்தெழுவதற்குரிய கருத்தியல் விசை மேவிப் பாயலாயிற்று. அவற்றின் செல்வாக்குகளை கணேசலிங்கன், பெனடிக்பாலன், கே.டானியல், ஜெயகாந்தன் முதலியோரிடத்துக் காண முடியும்.

சமூகச் சுரண்டல் அல்லது பறிப்பு ஒற்றைப் பரிமாணம் கொண்டது அன்று. அது பல பரிமாணங்களையும் பல பக்க விளைவுகளையும் கொண்டது. சுரண்டல் அல்லது பறிப்பை ஒற்றைப் பரிமாணத்தில் மட்டும் நோக்கிய திறனாய்வாளரால் இன அடிப்படையிலான பறிப்பையும் சாதிய அடிப்படையிலான பறிப்பையும் பால்நிலைப் பறிப்பையும் விரித்துநோக்க முடியவில்லை.

இனநிலைப் பறிப்பு பால்நிலைப் பறிப்பு மற்றும் சாதிய நிலைப் பறிப்புக் கோலங்கள் பின்வந்த தமிழ் நாவல்களிலே எழுச்சி கொண்டன. பறிப்பு நிலையில் நோக்குடைய நாவல்களின் தோற்றம் எழுச்சிக்கொள்ளத் தவிர்க்க முடியாததாயிற்று.

தொகுத்து நோக்கும்பொழுது பின்வருவன தமிழ் நாவல் இலக்கிய ஆக்கங்களிலே செல்வாக்குகளை ஏற்படுத்தலாயின.

* ஆங்கிலக் கல்வியும் திறனாய்வு மரபுகளும்
* சமய விழிப்புணர்ச்சி
* காந்தியமும் இந்திய விடுதலை இயக்கமும்

* மார்க்சியமும் கட்டு நீக்கலும்
* திராவிட இயக்கம்
* தாய்மொழிக்கல்வி விரிவாக்கல்
* பிரதேச விழிப்புணர்வு
* சாதிய விழிப்புணர்வு
* பால்நிலை விழிப்புணர்வு
* பிராய்டிசம் உள்ளிட்ட உளவியலின் செல்வாக்கு
* இருத்தலியம் உள்ளிட்ட மெய்யியலின் செல்வாக்கு
* தேசிய இனப் போராட்டம்
* அறிவியலின் வளர்ச்சி

கல்வி விரிவாக்கமும், நடுத்தர வர்க்கத்தினரது வளர்ச்சியும், அச்சுப்புரட்சியும், நடுத்தர வர்க்கத்தினருக்குரிய உளப்பாங்குகளும் தமிழ்நாவல் வளர்ச்சிக்கு உரமூட்டின. நடுத்தர வர்க்கத்தினரின் அறிகை முறைமையில் தனிமனித நோக்கும், கைக்கு எட்டிய சீர்திருத்தங்களும் மேலோங்கி வளர்ந்தன. இதழியலின் வளர்ச்சியும், மத்திய தரப்பெண்களின் வாசிப்புப்பழக்க விரிவாக்கமும், "தொடர் கதை" என்ற இலக்கிய வடிவத்துக்கு உரமூட்டின. இந்த வடிவத்தை மிகநுட்பமாகப் பயன்படுத்தியவர்களுள் கல்கி அவர்களுக்குச் சிறப்பு உண்டு. மு.வரதராசன், அகிலன், சாண்டில்யன், செக்சிற்பியன், இராசம்கிருஷ்ணன், நா.பார்த்தசாரதி, தி.ஜானகிராமன் முதலியோர் மத்தியதர வர்க்கத்தின் குணாம்சத்துக்குரிய நாவல்களையே பெருமளவில் புனைந்தனர். சிதம்பர ரகுநாதன், சீன பாராதி, ஜெயகாந்தன், சு.சமுத்திரம் முதலிய தமிழகத்து நாவலாசிரியர்கள் சமூகத்தின் விளிம்புநிலை மாந்தர்களை நோக்கி நகர்ந்தனர். இந்தநகர்வின் உச்ச நிலையை கே.டானியல், பெனடிக்பாலன் முதலியோரிடத்துக் கண்டுகொள்ள முடியும்.

தேசிய இனப்போராட்டம் தலித் எழுச்சி, பால்நிலை எழுச்சி முதலியவை ஒடுக்குமுறையின் தளங்களை உடைப்பதைத் தொடர்ந்தும் ஏற்படுகின்றது. தேசிய இனப்போராட்டப் புனைவுகள் நடப்பியலோடும் தள அனுபவங்களோடும் நேரடியான இணைப்புக் கொண்டுள்ளமை அதன் கலை வலிமை ஆதாரங்களைப் பலப்படுத்தியுள்ளது. நாவல் என்ற கலை வடிவம் பெரும் கலைவெளியை உள்ள-

டக்கி நிற்பதனால் அது நடப்பியலின் தளத்தை விரிவாகக் காட்டக் கூடிய பெரும்பரப்பைத் தந்துவிடுகின்றது. சமூகவெளி எத்துணை பெரியதோ அத்துணை பெருவெளியோடு இணையும் கட்டுமான விரிவு நாவல் வடிவத்துக்கு உண்டு.

நாவல் என்ற பெருவெளியும் மார்க்சியம் என்ற பெருவெளியும் இணைந்து தமிழில் மாற்றுவகையான நாவல் இயக்கத்தைத் தோற்றுவித்தது. தொ.மு.சிதம்பர ரகுநாதனின் "பஞ்சும்பசியும்", இராஜம் கிருஷ்ணனின் "கரிப்பு மணிகள்" டி.செல்வராசின் "மலரும் சருகும்" சு.சமுத்திரத்தின் "புதிய திரிபுரங்கள்" ஜெயகாந்தனின் "மூங்கில் காட்டுநிலா" ஜசக் அருமைராஜின் "கல்லறைகள்" முதலியவை மாற்று வகையாக அமையலாயின. மாற்றுவகை நாவல்களை இலங்கையின் சமூகவெளியோடு செ.கணேசலிங்கன், டானியல், பெனடிக்பாலன் செ.யோகநாதன் முதலியோர் ஒன்றிணைத்தனர்.

வாழ்க்கை வெளியும் நாவல் வெளியும் ஒன்றிணைந்துள்ளமையால் பொய்ம்மையும் போலியும் நாவல் வடிவத்திலே ஒன்றிணைந்து நிற்றல் கடினமாகி விடுகின்றது. இந்நிலையானது சமூக நோக்குடையோருக்கு நாவல் ஓர் அனுகூலமான கலைவடிவமாகி விடுகின்றது. மார்க்சிய நோக்குடைய நாவல்கள் மேலெழுச்சி கொள்வதற்கும் அதுவே பலமாக அமைந்து விடுகின்றது.

மேலை உலகில் வளர்ச்சி பெற்றுவரும் புதிய புலக்காட்சிக் கோலங்களைப் புலம்பெயர் வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாவல்கள் முன்வைக்கத் தொடங்கியுள்ளன. "உலக மயமாதல்" நாவலின் தளத்தை விரிவுபடுத்தி வரும்வேளை தெளிவான கருத்தியலின் முக்கியத்துவம் மேலும் எழுச்சிகொள்ளத் தொடங்கியுள்ளது.

★★★

03

சிறுகதையின் கோட்பாட்டு வளர்ச்சி



புனைகதை மிகத் தொன்மை யான இலக்கிய வடிவம். ஆனால் சிறுகதை ஐரோப்பாவில் நிகழ்ந்த சமூக மாற்றங்களின் தளத்திலே மேலெழுந்த வடிவம். ஐரோப்பா விலே தோற்றம் பெற்ற தொழிற் புரட்சியும், நகரவாக்கமும், புது விதமான பறிப்புக்களை ஏற்படுத் திய சொத்துரிமை வளர்ச்சியும், அந்நியமாகிய மனித உணர்வுக ளும் என்றவாறான புதிய அனுப வங்களின் தெறிப்புக்களினாலே தோற்றம் பெற்ற இலக்கிய வடிவ மாகச் சிறுகதை கட்டமைப்புப் பெற்றது.

"புனையம்" *(Fiction)* அல்லது புனைகதை என்ற எண்ணக்கரு இலத்தீன் மொழியிலிருந்து தோற் றம் பெற்றது. புத்தாக்கம் செய்யப் பட்டது, அல்லது உருவாக்கம் செய்யப்பட்டது. *(Fabricated)* என்ற பொருள் தழுவியதாக அந்த எண் ணக்கரு ஆக்கம் பெற்றது.

கதைப் புனைவு பலபரிமாணங் களை உள்ளடக்கியது. அவற்றுள் முதலாவதாக இடம்பெறுவதை கதையின் வினைப்பாட்டுக்குரிய காலமும், வெளியுமாகும். ஆங்கி லத் திறனாய்வு மரபில் அது "நிகழ்வெளி" *(Setting)* என்று குறிப்பிடப்படும். நிகழ்வெளி கிராமமாகவோ, நகரமாகவோ, தெருவாகவோ, நிறுவனமாக வோ, அசையும் வண்டியாகவோ அல்லது கற்பனை நிகழ்வெளி

யாகவோ இருக்கலாம். நடப்பியற் புனைகதைகளிலே நிகழ்வெளி கூர்ந்த அவதானிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது.

புனைகதையின் அடுத்த சிறப்பார்ந்த பரிமாணமாக அமைவது "நிகழ் ஒழுங்கு" *(Plot)* எதிர்பார்க்கும் விளைவுகளை எட்டக் கூடியவாறு நிகழ்ச்சிகளைத் கதைச்சார்புடன் ஒழுங்கமைத்தலை *(Arrangement of Events)* இந்த எண்ணக்கரு புலப்படுத்துகின்றது. பெரும் புனையங்கள் அல்லது நாவல்கள் ஒரு பிரதான நிகழ் ஒழுங்கையும் அதனோடிணைந்த பல துணை நிகழ் ஒழுங்குகளையும் கொண்டிருக்கும். நிகழ் ஒழுங்குகள் காலத் தொடர்ச்சிகளோடு அல்லது வரலாற்று வளர்ச்சியோடு தொடர்புடையதாக இருக்கலாம். அல்லது காலத் தொடர்ச்சிகளை மீறியும் அமையலாம்.

நிகழ்ஒழுங்கு சிக்கலானதாகவோ, உச்சம் நோக்கிய எழுவினைப்பாடு *(Risingaction)* கொண்டதாகவோ, திடீரென்ற முடிவைக் காட்டி எதிர்பார்ப்பையும் ஆவலையும் தூண்டி நிற்பதாகவோ அமையலாம். எதிர்விசைகளால் கதையின் நிகழ்போக்கு மாற்றமடைதல் மேலைப் புலத்திறனாய்வு மரபிலே "நெருக்கடி" *(Crisis)* என்று குறிப்பிடப்படும் அதனை நிகழ் ஒழுங்கின் விளைவு என்றும் குறிப்பிடுவர்.

புனைகதையின் மிக முக்கியமான பரிமாணமாக அமைவது "கதைப்பொருள்" *(Theme)* ஆகும். இது அறிபொருள் என்றும் குறிப்பிடப்படும். கதைப்பொருள் அல்லது அறிபொருள் ஆசிரியரின் உளப்பாங்கையும் கண்ணோட்டத்தையும், கருத்தியலையும் தாங்கி நிற்கும். அவ்வாறான தாங்கி நிற்றல் வெளிப்படையாகவோ, மறைபொருளாகவோ, மௌனித்து நிற்றலாகவோ அமையலாம். திறனாய்வாளர் அறிபொருளை "ஆய்வெழுகை"க்கு *(Thesis)* ஒப்புமையாகக் கூறுதல் உண்டு.

புனைகதையின் சிறப்பார்ந்த பரிமாணமாகப் பாத்திர வார்ப்பு இடம்பெறுகின்றது. பாத்திரங்கள் வழியாக நடத்தைகளும், வினைப்பாடுகளும் உணர்வோட்டங்களும் கருத்தியலும் வெளிப்படையாகவோ உள்ளமைந்த வகையிலோ முன்வைக்கப்படுகின்றன. பாத்திரங்களைப் பற்றி ஆராயும் மேலைப்புல ஆய்வாளர் "தட்டையான" *(Flat)* பாத்திரங்கள் என்ற எண்ணக்கருவையும் முன்வைத்துள்ளனர். ஓரிரு உறுபண்புக் கூறுகளைக் *(Traits)* கொண்ட பாத்திரங்கள் இரு பரிமாணப் பாத்திரங்கள் அல்லது தட்டையான பாத்திரங்கள் என்று குறிப்பிடப்படும்.

சிறிய புனைகதைகளின் எழுத்துவடிவ ஆக்கம் கி.மு.2700 அளவில் எகிப்திலே தோற்றம் பெற்றது. "மாயச் செயற்காரனின் கதைகள்" என்ற தலைப்பில் அது தொகுக்கப்பட்டது. புனை கதை-களுக்கும் மாயச் செயலுக்கும் *(Magic)* உள்ள இடைத்தொடர்பு-களை அது துல்லியமாக வெளிப்படுத்தியது. ஹோமர் எழுதிய "ஒடிசி"யும் பல புனைகதைகளில் நொய்ந்துபோன தொகுப்பாக அமைந்தது.

சமூக வளர்ச்சி எளிதிலிருந்து சிக்கலை நோக்கிய தொடராக அமைந்தமையும், மேலைப்புலத்தின் கிராமிய வாழ்வில் ஏற்பட்ட அதிர்வுகளும் அறைகூவல்களும் இடைக்காலத்துச் சிறுகதை வளர்ச்-சிக்கு விசையூட்டின. கி.பி.1350ஆம் ஆண்டளவிலே தொகுக்கப்-பட்ட "திகழ் கெஸ்தா ரொமனோரம்" *(The Gesta Romanorum)* என்பதில் இருநூறு சிறிய புனைகதைகள் இடம்பெற்றிருந்தன. புனைகதைகளின் வழியாக ஒழுக்கம் வலியுறுத்தல் அவற்றின் ஆழ்ந்த நோக்கமாக உட்பொதிந்திருந்தது.

சமூக மாற்றம் மனித நடத்தைகளிலே வேறுபாடுகளைத் தோற்-றுவித்தல் தவிர்க்க முடியாததாகும். அந்நிலையில் அறன்வலியுறுத்தல் என்பது கதாசிரியர்களின் கருத்தியலோடு ஒன்றித்திருப்பது.

நவீன சிறுகதை வடிவம் எழுச்சிகொள்வதற்கு ஐரோப்பிய சமூக நிலவரங்கள் விசையூட்டின. கைத்தொழிற் புரட்சியின் வழியாக எழுந்த சமூக அவலங்கள், நகர வாழ்க்கையின் பரிதவிப்பு, குடும்ப உடைவுகள், நொருங்குண்ட மனித உணர்வுகள் முதலியவை சிறு-கதையாக்கங்களுக்குரிய வாய்ப்பான தளங்களாயின. அதன் கலை வடிவ முன்னெடுப்பு எட்கர் அலன் போ அவர்களால் மேற்கொள்-ளப்பட்டது. அவலமான வாழ்க்கை முறையால் மனித கவனஈர்பின் நீட்சி சுருங்கிவிட்டதாக அவர் கருதினார். அவ்வாறான சுருங்கிய கவன ஈர்ப்புக்கு ஈடுகொடுக்கக்கூடிய கலை இணைவும் இறுக்கமும் கொண்ட ஆக்கமாக நவீன சிறுகதையை முன்நிறுத்தினார்.

முன்னர் இடம்பெற்ற மரபு வழிப்புனைகதைகளிலே இடம்-பெறாத புதிய புதிய பரிமாணங்களை புதிய சிறுகதைகள் உட்-கொண்டு மேலெழுந்தன. தனிமனித உளவியல், அன்னியமயமாகும் உளவியற் கோலங்கள், பிறழ்வு உளவியல் *(Abormal Psychology)* மரபுவழி விழுமியங்களின் வீழ்ச்சி, புலனாய்வு முதலியவைற்றை உள்ளடக்கிய நவீன சிறுகதையாக்கம் எழுச்சி கொள்ளலாயிற்று.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து வளர்ச்சி பெறத் தொடங்கிய மனப்பதிவியல் (Impressionism) கோட்பாடும் நவீன சிறுகதைகளிலே செல்வாக்குகளை ஏற்படுத்தலாயிற்று. வாழ்க்கைப் பண்புகளுக்கு அழுத்தங்கொடுத்தல் அக்கோட்பாட்டில் ஆழ்ந்து வலியுறுத்தப்பட்டது. வாழ்வின் அழுத்தமான பதிவுகளுக்கு முன்னுரிமை தருதல் நவீன சிறுகதைகளிலே முன்னெடுக்கப்பட்டது. வாழ்க்கையின் நேரடி அனுபவங்கள் தெறித்துக்காட்டலுக்கு உட்படுத்தப்பட்டன. சமூகத்தைத் தட்டையாக நோக்காது ஊடறுத்து நோக்குதல் எழுச்சி கொள்ளலாயிற்று.

மேலையுலகில் வளர்ச்சிபெறத் தொடங்கிய மார்க்சியவாதம் நவீன சிறுகதைப் புனைவின் பரிமாணங்களை மேலும் வலுப்படுத்தியது. சிறுகதையை வாழ்க்கையிலிருந்து சிதறிய ஒரு துண்டாக மட்டும் நோக்காது சமூக முரண்பாடுகளின் அலகாகவும் செறிவாகவும் ஆழ்ந்த ஊடுருவலாகவும் தரிசிக்கும் புலக்காட்சியை மார்க்சியக் கருத்தியல் வழங்கியது.

மார்க்சியக் கருத்தியலின் செல்வாக்கு வாழ்க்கைக் கோலங்களைத் திட்பநுட்பமாக அணுகும் தரிசனத்துக்கு வலுவூட்டியது. முன்னர் பாத்திராத மனிதப் பரிமாணங்களின் வெளிப்பாட்டுக்கு அக்கருத்தியல் விசையளித்தது. பிரஞ்சு எழுத்தாளர் பல் ஸாக் (Balzac) அன்டன் செக்கோவ், நிக்கோலாய், கோகொல் முதலானோர் அவ்வகை ஆக்கங்களை முன்நிறுத்தினர். மார்க்சியக் கருத்தியலை மூன்றாம் உலகநாட்டு எழுத்தாளர் தத்தம் பண்பாட்டுப் பின்புலங்களுக்கு ஏற்றவாறு பிரயோகப்படுத்தி நவீன சிறுகதையாக்கும் முயற்சிகளில் ஈடுபடலாயினர்.

நவீன சிறுகதையாக்கங்களிற் குறியீட்டுவாதம், உளப்பகுப்புவாதம், இருப்பியம் முதலாம் கோட்பாடுகளும் தீவிர செல்வாக்குகளை ஏற்படுத்தலாயின. குறியீடுகள் வழியான கருத்துப் புலப்பாடுகளையும், சமூகப் புலப்பாடுகளையும் முன்னெடுப்பதற்குத் தக்க கலைவடிவமாக நவீன சிறுகதை மேலுயர்த்தப்பட்டது. குறியீடுகள் வழியான கருத்தாடல்களும் ஆழ்ந்த உளப்பதிவுகளும் நவீன சிறுகதைகள் வாயிலாக எட்டப்பட்டன. நவீன சிறுகதையின் கட்டுச்செட்டான அமைப்பின் காரணமாக பாத்திரங்கள் மட்டுமன்றி கதையே ஒட்டுமொத்தமான குறியீடாகிவிடும் கலைப்பண்பு தோற்றம் பெறுகின்றது.

ஆழ்மனம் அல்லது நனவிலி மனத்தின் கிளறல்களை அடி-யொற்றிய நவீன சிறுகதையாக்கங்கள் மேலெழலாயின. உளப்பகுப்பு வாதத்தையும் பிராய்டின் ஆய்வுகளையும் ஒற்றைப் பரிமாணத்தில் நோக்கி, முற்றிலும் பாலியல் அடைப்புக்குள் அக்கருத்தியலை உள்-வாங்கி நவீன சிறுகதைகள் புனையும் முயற்சிகளும் முன்னெடுக்கப்-பட்டன. தமிழில் இதனை மிகவும் சிலாகித்துப் பயன்படுத்தியோர் வரிசையில் எஸ்.பொன்னுத்துரை சிறப்பிடம் பெறுகின்றார்.

இருப்பிய வாதத்தை உள்வாங்கும் புனைவுகளே "ஆழம்" மிக்கவை என்ற போலிக்காட்சிகளும் நவீன சிறுகதை ஆய்வுகளில் முன்வகைப்படுதல் உண்டு. உலகில் நிகழ்ந்துவரும் பன்முகமாகிய பறிப்பையும் *(Exploitation)* உயிர் அவலங்களையும் முதன்மைப்-படுத்தியமை இருப்பியத்தின் பலமாயிற்று. உலகையும் மனிதரையும் அர்த்தமற்றவையாயும் இழப்பின் வடிவங்களாகவும் இருப்பியம் காண்கின்றது. சாராம்சமற்ற மனிதவாழ்வின் எதிரொலிப்புக்களாக, நம்பிக்கை வரட்சியின் வெளிவீச்சுக்களாக இருப்பியநெறி வயப்பட்ட நவீன சிறுகதைகள் அமைந்தன. புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோலன் முதலியோரது சிறுகதைகளில் இருப்பியத்தின் செல்வாக்கைச் சிறிதளவேனும் கண்டுகொள்ள முடியும். இந்தியாவின் சமய மெய்-யியலில் ஊடுருவி நின்று "மாயை"க் கருத்தியல் சிலகோணங்களில் இருப்பியத்தின் எல்லைகளைத் தொட்டிருத்தல், சமூக விரக்தி தழுவி எழுந்த நவீன இந்திச் சிறுகதையாக்கங்களுக்கு விசையூட்டியது.

கைவிடப்பட்ட மனிதநிலை, அர்த்தமற்ற வாழ்க்கை, போலி-யின் உன்னதங்கள் முதலியவற்றின் சமூகவேர்களை இருப்பியத்தி-னாலே தரிசிக்க முடியாமற் போய்விட்டது. இருப்பிய வேரிலிருந்து தோற்றம்பெற்ற அபத்தச் *(Absurd)* சிறுகதைகள் அல்லது மேற்கூறிய கருத்தை மீளவலியுறுத்துகின்றன.

மனித இருப்பின் அபத்தப் பரிமாணங்களை முன்னிலைப்-படுத்தி தோமஸ்மான், பிரான்ஸ் கவ்கா, சார்த்தர், அல்பேட் கமஸ் முதலியோர் நம்பிக்கை வீட்சியியற் *(Pessimissim)* சிறுகதைகளைப் புனைந்தனர். பதகளிப்பு, மனமுறிவு, கவலை, ஆதரவின்மை, தாழ்வுணர்ச்சி, மேலாதிக்க அழுத்தங்கள் முதலியவை அவர்களின் சிறுகதைகளிலே இழையோடிய பகுதிகளாகவுள்ளன. சார்த்தர் எழுதிய "திகழ் சுவர்" *(The Wall)* என்ற படைப்பும், கமஸ் எழுதிய "திகழ் பிறழ்நிலைப் பெண்" *(The Adulterous Woman)* என்ற படைப்பும் இத்துறையின் உன்னதங்களாகக் கொள்ளப்படுகின்றன.

நவீன சிறுகதை வளர்ச்சியிலே செல்வாக்கை ஏற்படுத்திய பிறிதொரு கோட்பாடாக "அருவ வெளிப்பாட்டியல்" *(Abstract Expressionism)* அமைந்துள்ளது நனவு மனத்தின் உணர்வுகளையும், நனவிலி மனத்தின் உணர்வுகளையும் இணைத்தலும், பொருத்துதலும் அர்த்தமுள்ள தொகுப்பாக அவற்றை அமைத்தலும் அருவ வெளிப்பாட்டியல் சிறுகதைகளிலே முன்னெடுக்கப்பட்டன. ஒடுங்கி மறைந்து விசையுடனிருக்கும் ஆழ்மனக் கோலங்களை நனவு மனத்தின் வீச்சுக்குள் அகப்படுத்தும் முயற்சி உளப்பகுப்பு உளவியலின் நவீன நீட்சி என்றே குறிப்பிடுதல் வேண்டும் நடப்பியலைக் காட்டுதலோடு மட்டும் நின்றுவிடாது ஆழ்மனத்து அன்னியப்பாட்டையும் தொடர்புபடுத்துதலாய் அவ்வகைச் சிறுகதைகள் அமைந்தன. ஜக்கோவ்லின்டு அவர்கள் எழுதிய "இரவின் வழியான பயணம்", தொமாசோ லண்டோல்பி எழுதிய "திருமண இரவு" டொனால்ட் பார்த்திகெம் எழுதிய "தங்கத்தின் ஒரு பொழிவு" முதலியவை இக்கருத்தியலை அடியொற்றி எழுந்த உன்னதமான படைப்புக்களாகத் திறனாய்வாளரின் கவனத்தை ஈர்த்துள்ளன.

★★★

04

புனைகதையும் சமூகச் சித்திரிப்புக் கருத்தியலும்



சமூகச் சித்திரிப்பே புனை கதை களின் தளமாக இருத்தல் உலக ளாவிய ஒரு பொதுப் பண்பு. தெரிந்தெடுக்கப்படும் சமூகக் களம் சமகாலம் தழுவியதாக இருக்கலாம், அல்லது கடந்த காலமாக இருக்கலாம் அல்லது எதிர்காலம் பற்றியதாக இருக்க லாம். கற்பனா நிலையை அடி யொற்றிய சமூகச் சித்திரிப்பு அல் லது எங்காவது இடம்பெற முடி யாது எட்டப்பட முடியாத (Utopia) சமூகச் சித்திரிப்புத் தழுவிய கருத்தியலின் வளர்ச்சியும், புனை வுகளின் வளர்ச்சியும், தனியுரி மையின் வளர்ச்சியோடும் அதனை அடியொற்றிய அரசுகளின் வளர்ச்சியோடும் எழுச்சி பெற லாயிற்று. பிளேட் டோவின் (கி.மு.427-347) இலட் சிய அரசு பற்றிய "குடியரசு" நூலின் ஆக் கம் மேற்குறிப்பிட்ட பண்பை நேரடியாக வெளிப்படுத்தும் தனிச் சொத்துரிமையின் குரூர மான வளர்ச்சியிலிருந்து மக்க ளைப் பாதுகாக்க நுண்மதியா ளர் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்ற கருத்து தோற் றம் பெற்றது.

இலட்சியப் பாங்கான அரசு இலட்சிய சமூகம் பற்றிய கருத் துக்கள், தமிழ் மற்றும் இந்தியா வின் தொன்மையான இலக்கி யங்களிலே பரவலாகக் காணப் படுகின்றன. கருத்தியல் நிலை யில் தொடர்ச்சியானதும் அடைய

முடியாததுமான அந்த மரபின் வெளிக்கிளம்பலாகவே மகாத்மா காந்தியின் "சர்வோதம்" அமைந்தது.

ஐரோப்பிய சிந்தனை மரபில் "அடைய முடியாத" அத்தகைய சமூகவியல்பு பற்றிய சிந்தனைகள் செயின் சிமொன் (1760-1852) சார்ல்ஸ் போறியர், (1772-1837) றெபேட் ஓவன் (1771-1858) முதலியோரிடத்து மேலும் வீரியத்துடன் எழுந்து வளரலாயிற்று. தாம் வாழ்தும், கண்டறிந்தும் கொண்டதுமான சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளும், அவற்றின் பாதிப்புக்களும், தனிச் சொத்துரிமையின் தளங்களில் இருந்து தோற்றம்பெற்ற சமூக அநீதிகளும் பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து எழுச்சிபெறத் தொடங்கிய சமூகப் புனைகதைகளிலே பரவலாக இடம்பெறத் தொடங்கின.

மனிதர் இயல்பாகவே நல்லவர்கள் என்பதும் அந்த நல்லியல்புகளின் உச்சங்கள் எட்டப்பட முடியும் என்ற போலிப் புனைவுகள் வளர்ந்தன. நடைமுறையில் எட்டப்பட முடியாத இலட்சிய சிந்தனைகள் கவர்ச்சியூட்டும் வகையில் முன்வைக்கப்பட்டன. சொத்துடையோரையும், சொத்துக்கள் அற்றோரையும் ஒரே தளத்திலும் ஒரே அணுகுமுறையிலும் நோக்கியமை அடைவு நிலைகளை எட்ட முடியாதவையாக்கின.

இலட்சிய வகையிலான நீதியை நிலைநிறுத்த சமூகத்திலே காணப்படும் சொத்துரிமை ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் அவற்றின் வழியாகத் தேசிய செல்வம் பெருக்கமடையுமென்றும், வேலையின்மை ஒழிக்கப்பட்டுவிடுமென்றும் ஐரிஸ் நாட்டவரான வில்லியம் தோம்சன் (1775-1833) முன்மொழிந்தார். தோமஸ் கொட்ஸ்கின் (1783-1869) என்பார் ஒருவரது உழைப்பால் உருவாக்கப்படும் உற்பத்தி அவருக்கே வழங்கப்படல் வேண்டுமென்றும், ஆனால் அவர்களுக்கு வழங்கப்படும் ஒதுக்கீடு போட்டியினால் தீர்மானிக்கப்படல் வேண்டும் என வலியுறுத்தினார். ஐரோப்பாவிலே தீவிரமாக வளர்ச்சிபெறத் தொடங்கிய முதலாளியத்தின் தாக்கங்கள், சமூக சிந்தனையாளர்களிடத்தும் இலக்கிய ஆசிரியர்களிடத்தும் சமூகத்தைவிட்டு ஒதுங்கிச்செல்ல முடியாத நிலையைத் தோற்றுவித்தன.

பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்த எழுத்தாளராகிய பிரயறி ஜோசப் புரோடன் (1809-1865) "அனைத்துச் சொத்துக்களும் கொள்ளையிடலால் உருவாக்கப்பட்டவை" என்ற ஆவேசக்குரலை முன்வைத்தார். அந்நிலையில் முரண்பாடுகளையும், துருப்பாடுகளையும் இணங்கச்

செய்வதற்கான எழுத்தாக்க நடவடிக்கைகளும் தோற்றம்பெற்றன. உருவாக்கப்படும் அனைத்து உற்பத்திப் பொருள்களும் தொழிலாளருக்கும் முதலாளிகளுக்கும் நன்மையும் மகிழ்ச்சியையும் வழங்கும் என்று வலியுறுத்திய சார்ல்ஸ் போறியர் அதன் உள்ளமைந்த பறிப்பையும் சுரண்டலையும் விபரிக்கத் தவறிவிட்டார். புதிய புதிய உற்பத்தி நுட்பவியல்களை விஞ்ஞானிகளும், கைத்தொழில் முதலாளிகளும் தோற்றுவிப்பதன் வாயிலாக வறியவர்கள் உள்ளிட்ட அனைவரும் நன்மை அடைவார்கள் என்று செயின் சிமோன் வலியுறுத்தினார். இவையனைத்தும் நடைமுறையில் எட்டப்பட முடியாத கானல்நீராகவே காணப்பட்டன.

இதே காலப்பகுதியில், அதாவது பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் சமூகம் பற்றிய இவ்வாறான சிந்தனைகள் மூன்றாம் உலகநாடுகளில் பரந்து மேலெழ முடியாதிருந்தமை இறுகிய நிலமானிய விழுமியங்களுடனும், மேலைப்புல ஆட்சியினரால் உருவாக்கப்பட்ட மேற்பதிந்த கருத்தியலுடனும், தொடர்புபட்டிருந்தது.

ஆங்கிலக் கல்வி வழியான அறிவூட்டம் பெற்ற இந்திய மற்றும் தமிழக சிந்தனையாளர்களிடத்து ரொபோட் ஓவனின் (1771-1859) கருத்துக்கள் செல்வாக்குகளை ஏற்படுத்தின. அவரது கருத்துக்களும், அடையப்பட முடியாத இலட்சியப் பாங்கானவையாய்ப் பெருமளவிலே காணப்பட்டன.

வேலையற்றோருக்கு வேலை வழங்கும் பொருட்டு "கூட்டுறவுக் கிராமங்கள்" என்ற அமைப்பை அவர் முன்மொழிந்தார். அவரது கோரிக்கை அரசினாலும், கைத்தொழில் நிலையங்களின் சொந்தக்காரராலும் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அந்நிலையிலே தொழிலாளர்களை உள்ளடக்கிய கூட்டுறவு இயக்கத்தை அவர் ஆரம்பித்தார். போட்டிச் செயற்பாடுகளின் பிரதிகூலங்களை விளக்கிய அவர் அதற்கு மாற்றீடாகக் கூட்டுறவுச் செயற்பாடுகளை வலியுறுத்தினார். நடைமுறை மயப்படாத வெறும் இலட்சியத்தில் ஊறிய அவரது கருத்துக்களையும் அவற்றின் தொடர்ச்சியாக எழுந்த கருத்தியலையும் ஆய்வாளர்கள் "நீடிக்க முடியா எட்டா வாதம்" *(Black Wood Utopias)* என்றவாறு விளக்கினர்.

கார்ல்மார்க்சின் திட்டவட்டமானதும், தீவிரத்தன்மை கொண்டதுமான சோசலிசத்தை எதிர்ப்பவர்களும் நிராகரிப்பவர்களும் ரெபேட் ஓவனை அடியொற்றிய கருத்தியற் குடைக்குள் தம்மை

ஒன்றுபடுத்திக் கொண்டனர். ரெபோட் ஓவனின் அடைய முடியா இலட்சியக் கருத்தியல் காந்தியத்திலும் செல்வாக்கை ஏற்படுத்தியது. கூட்டுறவை அடியொற்றிய கிராமிய மீள் ஒழுங்கு காந்தியத்தாலும் உள்ளடக்கப்படலாயிற்று.

இந்திய விடுதலைப்போராட்டம் இந்திய தேசிய முதலாளியத்தின் கருத்தியலோடு நேரடியாகத் தொடர்புபட்டிருந்தது. அக்கருத்தியலைக் காந்தியநெறி மிகப்பக்குவமாக முன்னெடுத்துப் பொதுமக்களின் ஈடுபாட்டைப் பெருக்கமடையச் செய்தது. இந்திய உள்ளூர் முதலாளியப் பண்புகளோடு இணைந்து செல்லும் வகையில், அரசியல் விடுதலை, பொருளாதார விடுதலை, பெண் விடுதலை, சீர்திருத்தம், கல்வி, நடத்தைகள் முதலியவற்றை வலியுறுத்தும் சமூக நாவல்கள் சுதந்திரப் போராட்ட காலத்திலே தோற்றம்பெற்றன. தனிமனித இயல்புகளை இந்தியப் பொருளாதார வழியாக உருவாக்க வேண்டிய பொறுப்பு முன்னெடுக்கப்பட்டது. அவ்வழியில் குடும்பங்களின் பொறுப்புள்ள பங்களிப்பை வழங்கும் உளப்பாங்கைக் கட்டியெழுப்பல், சமூகத்திலே நிகழும் அநீதிகளைக் கண்டு பொங்கும் உளப்பாங்கு கொண்ட உறுதியைக் கட்டியெழுப்பல் போன்றவை அக்காலத்துச் சமூக நாவல்களிலும், சிறுகதைகளிலும் காணப்பட்ட பொதுவாய்ப்பாடுகளாக அமைந்தன. அவ்வகையிலான புனைவுகளின் தொடக்க நிலைகளை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால நாவல்களிலே காணலாம். எடுத்துக்காட்டுகளாக நடேச சாஸ்திரி எழுதிய "தீனதயாளு", எம்.எஸ்.கிருஷ்ணசாமி அய்யர் எழுதிய "கூலியின் வேலை" முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

கிராமோதயம், மீண்டும் கிராமங்களுக்குத் திரும்புதல் முதலிய காந்தியச் சிந்தனைகளிலே தமிழகத்துச் சமூக நாவல்கள் தோய்ந்தெழலாயின. சங்கராம் மற்றும் சண்முக சுந்தரம் முதலியோரின் ஆக்கங்கள் கிராமியப் பண்புகளின் மீள வலியுறுத்தல்களாக அமைந்தன.

கூர்மையான சமூகப்பார்வையை முன்னெடுக்க முடியாது தினறும் நிலைகொண்ட புனைகதையாக்கங்களைத் தமிழகத்தில் நிலவிய மேலோட்டமான சீர்திருத்தக் கருத்துக்கள் தோற்றுவித்தன. இதற்கு வகை மாதிரியான ஓர் எடுத்துக்காட்டாக ஜெகசிற்பியனின் "கிளிஞ்சல் கோபுரம்" என்ற ஆக்கத்தைக் குறிப்பிடலாம் தொழிலாளரின் கடுமையான உழைப்பை அந்தப் புனைவின் வழியாக வலியுறுத்திய அவர் இந்தியச் சமூகத்தில் ஆழ்ந்து ஊடுருவி நின்ற

உழைப்பின் பறிப்பையும், பறிப்பின் தளமாகிய தனிச் சொத்துரிமை என்ற மூலாதாரத்திலிருந்து எழும் அவலங்களையும் சித்திரிக்கத் தவறியமை குறிப்பிடத்தக்கது. அதாவது அவலங்களின் அடி ஆதாரங்களைக் காட்டாது விடுதலும், தனிமனித ஒற்றைப் பரிமாண முயற்சியால் இலக்கு எட்டப்பட முடியுமென்ற கற்பனை இலட்சியங்களின் கூறுகளுமே படைப்புக்களில் ஊடுருவி நின்றன.

இந்தியச் சமூகவியல்பைச் சீர்திருத்த நோக்கிலே தீவிரப்படுத்திய எழுத்தாளர் வரிசையில் இந்திர பார்த்த சாரதி சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். அநீதிகளின் நுண்ணிய கூறுகள் அவரது ஆக்கங்களிலே வெளிவந்தனவாயினும், அவற்றிலிருந்து மீண்டெழும் நீட்சியின் எல்லைகளை எட்ட முடியாத வகையிலே நாவல்கள் அமைந்துள்ளன. இருப்பியத்தின் தாக்கமே இந்திரா பார்த்தசாரதியின் ஆக்கங்களில் ஆழ்ந்துள்ளது. ஜயகாந்தனது ஆரம்பகாலத்துப் புனைவுகளுக்கும் பிற்காலத்துப் புனைவுகளுக்குமிடையேயுள்ள இடைவெளி மார்க்சிய நழுவல் அனுபவங்களையே மீள வலியுறுத்துகின்றன.

சிதம்ப ரகுநாதன், செல்வராஜி, இளங்கீரன், கணேசலிங்கன், டானியல், பொன்னீலன், பெனடிக்பாலன், செ.யோகநாதன் என்றவாறு நீண்டு செல்லும், மார்க்சியவழி நின்று புனைகதையாக்கம் செய்வோர் பட்டியலினூடே சமூகம் பற்றிய பன்மைநிலைகள் படைப்பு அலகுகளாக மேலெழுகின்றன. சாதிய - ஒடுக்குமுறை, இனஒடுக்குமுறை பண் ஒடுக்குமுறை என்ற தளங்களினூடே மார்க்சியக் கண்ணோட்டத்தின் எழுகை சுட்டிக்காட்டப்படத்தக்க பண்பாகவுள்ளது. மார்க்சியம் ஒற்றைப்பரிமாணம் மட்டும் கொண்டது அன்று என்பதை மார்க்சிய வழியான படைப்புக்கள் வெளிப்படுத்துகின்றன.

இன ஒடுக்குமுறையின் அவலங்களும், புலம்பெயர் வாழ்வின் நெருடல்களும் தமிழ் நாவலின் படைப்புக்குரிய வலிமையான தளங்களைத் தந்துள்ளன. அத்தளங்களிலிருந்து உலகத்தரத்துக்கு ஒப்பான படைப்புக்கள் எழவேண்டியுள்ளன.

05

புனைகதையும் படிம உலகமும்



புனைகதைகள் வழியாக மன வெளியில் அல்லது உளவெளி யிற் படிமங்கள் உலாவ விடப்படு கின்றன. நடப்பியலின் மீள் உற்பத்தியாகவே அவை உரு வாக்கம் பெறுகின்றன. படிமங் களை சமூகத்தின் தொடர்பு களை அறுத்து சுயாதீனமாக உலா வருகின்ற என்ற பின்ன வீனத்துவவாதிகளின் கருத்து வேர்களை அறியாது விளைவு களை நோக்கும் கருத்தாடலா கவே அமைகின்றது.

நடப்பியலின் தெறிப்பாக உரு வாக்கப்படும் பாத்திரப் படிமங் கள் கதைப்புனைவில் சுயாதீன மாக இயக்கம் பெறுகின்றன என்று கட்டவிழ்ப்பு நிலையிற் கூறப்படுகின்றது. வாசகரின் மனக்கோலங்களுக்கு ஏற்றவாறு அவை கட்டுமை *(Construct)* செய்யப்படும் பொழுது வேறு பாடுகளைப் பெறக்கூடிய உளவி யற் சாத்தியப்பாடுகள் தோற்றம் பெறுமாயினும் பாத்திரங்களின் நடுவன்போக்கு இயங்கிய வண் ணமேயிருக்கும். அதாவது, பாத் திர ஆளுமையும் சமூக இயல்பும் அதன்வழி எழும் படிமவாக்க மும் நேர்தொடர்புகளையும் நேர் இணைப்புக்களையும் கொண் டவை.

இச்சந்தர்ப்பத்திலே தூய படிமம் *(Pure Image)* தூயபடிமம் அல் லாதவை என்ற வேறுபாடுகளை விளங்கிக் கொள்ளல் முக்கிய

மானது. நடப்பியலுடன் நேரடியாக இணைந்தப் படிமங்கள் தூய படிமங்களாகின்றன. நடப்பியல் தழுவாத "நீந்தற் படிமங்கள்" கட்டுப்பாடுகளை மீறி நீந்தக்கூடிய இயல்பைச் சிறிதளவேனும் கொண்டிருக்கும் என்பதை நிராகரிக்க முடியாது. நடப்பியலில் இருந்து விடுபட்டபடி மக்கள் கைநழுவிய பாவைகள்தான். அவை ஆழங்களோடு இணையாத அல்லது வேர் கொள்ளாத புனைவுகளின் வழிப்பட்டவையாயிருத்தல் தவிர்க்க முடியாதது. அதீத கற்பனையின் வழியாக உருவாக்கப்படும் படிமங்களை இதற்கு உதாரணப்படுத்தலாம்.

புனைகதைகளில் வரும் படிமங்களை விளங்கிக்கொள்வதற்கு செறிவு *(Intensity)* அறிபொருள் *(Meaning)* ஆகிய இரு எண்ணக்கருக்கள் துணைசெய்கின்றன. இவற்றை அடியொற்றியே சமூக யதார்த்தத்தைப் புனையும் படைப்புக்கள் மேலெழுகின்றன. சமூக யதார்த்தத்தை அடிநிலையாகக் கொண்ட படிமங்கள் செறிவுமிக்குடையனவாகவும் அறிபொருள் ஆழங்களைக் கொண்டனவாகவும் காணப்படும். சமூக யதார்த்தத்தைத் திரிபுபடுத்தும் புனைவுகள் வழி எழும் படிமங்கள் செறிவும், அறிபொருள் மேம்பாடு கொண்டவையாயும் காட்டப்படுதல் ஒரு மேலோட்டமான விளைவாகவே இருக்க முடியும். பட்டு அனுபவித்தவரால் எழுதப்படும் புனைவுகளுக்கும் பார்வையாளராகவும், சமூக மேலோங்கிய நிலையில் நின்றும் எழுதுவோரின் புனைவுகளுக்குமுள்ள வேறுபாடுகளை மேற்கூறிய தளங்களில் நின்று விளக்க முடியும். சமூகத்தோடு ஒட்டாத படிமங்கள் பலநிலைத் திரிபுக்காட்சிகளை ஏற்படுத்தவல்லலை.

படிமங்கள் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு "உறுபாவனை" *(Simulation)* என்ற எண்ணக்கரு துணை செய்வதாக அமையும். சமூக நடப்பியலைத் தெறித்துக்காட்டும் புனைவுகளில் இடம்பெறும் படிமங்கள் வினையெழுச்சியை *(Emancipation)* உருவாக்கவல்ல விசை கொண்டவையாய் இருக்கும். சிந்தனையிலும் செயற்பாடுகளிலும் ஒடுக்குமுறைக்கு எதிரான வினைப்படலை வளர்ப்பதற்கும் அவை விசையளிக்கும். நடப்பியல் பாத்திரங்களின் விளைவுகளும் விசைகளும் படிமங்களில் ஏற்றப்படும் பொழுது படிமவழியான விளைவூட்டல் முன்னெடுக்கப்படுகின்றது.

படைபாற்றலின் நீட்சி படிமங்களாக உருவெடுக்கின்றது. அந்த நீட்சி கட்டுப்பாடுகள் அற்ற நீட்சியாகிவிடாதா என்ற வினா எழுப்பப்படுதல் உண்டு. பின்னவீனத்துவவாதிகள் அதனைக் கட்டுப்படுத்த

முடியாத நீட்சியாகவே கருதுகின்றனர். அதனை அடியொற்றி மார்க்சிய நோக்கினுக்கும் பின்னவீனத்துவத்திற்குமிடையே தொடர் விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. தொழில்நுட்பவியலின் வளர்ச்சி கட்டுப்பாடுகளை மீறிச் சென்று கொண்டிருத்தலைப் படிமங்களின் பெருக்கத்துக்கு ஒப்புமையாகக் கூறும் பின்னவீனத்துவ முன்மொழிவுகளும் காணப்படுகின்றன. தொழில்நுட்பவியற் பிரவாகத்தின் பின்புலத்திலே பெரும் முதலாளியம் நிலைபேறு கொண்டிருத்தலை மறுக்கமுடியாது. அவை முதலாளியத்தின் கட்டுப்பாடுகளின் கீழ் இயங்குகின்றனவேயன்றி தன்னிச்சையாகத் தொழிற்படவில்லை.

இலக்கியங்களில் உருவாக்கப்படும் படிமம் "மொழிவழிப் படிமம்" என்றும் குறிப்பிடப்படும். நேரக்காட்சியின்றி மொழி வழியாகவே மனச் சித்திரம் உருவாக்கப்படுகின்றது. நனவு மனத்தின் அல்லது உணர்வு மனத்தின் பிரதான தொழிற்பாடுகளுள் ஒன்றாக "படிமவாக்கம்" இடம்பெறுகின்றது என்ற கருத்தை வில்கெம் வுண்ட் *(Wilhelm Wundt, 1832-1920)* வலியுறுத்திய பின்னர் இலக்கிய ஆய்வுகளில் இந்த எண்ணக்கரு சிறப்பிடம் பெறத் தொடங்கியது. படிம வகைகள் பின்வருமாறு சுட்டிக்காட்டப்படுகின்றன.

(1) துல்லியநிலைப் படிமம் *(Eidetic Image)*

(2) நேர் எழுபடிமம் *(Hess Image)*

(3) கனவுச் சாயற்படிமம் *(Hypnopomic Image)*

(4) இரண்டாம் நிலைப் படிமம் *(Purkinje Image)*

(5) நனவிலிப் படிமம் *(Unconsuious Image)*

புனைகதைகள் நேர்நிலையாகவும் நேரில் முறையிலும் மறைவாகவும் மேற்குறித்த வகையான படிமங்களை உருவாக்கவல்லவை. மிகவும் துல்லியமான தெளிவான, அச்சொட்டான வகையிலே காட்சிகளை உள்வாங்கி அச்சொட்டாக மனக்காட்சியை உருவாக்கிக் கொள்வதனால் தோற்றம் பெறும் காட்சி "துல்லிய நிலைப் படிமம்" எனப்படும். காட்சிகள் படிப்படியாக வளர்ந்து செல்லும் நிலையின் மூன்றாம் கட்டத்திலே தோற்றம் பெறுவது "நேர் எழுபடிமம்" ஆகும். கண்வழித் தொடர்பாடலை அடிப்படையாகக் கொண்டே இது விளக்கப்படுகின்றது. புனைவுகள் எழுத்து வழியாகக் கண் வழிக்காட்சிகளை இணைத்து நிற்கும். கதை வளர்ச்சியின்போது குறித்த ஆளுமை தொடர்பான மனப்படிமங்கள் தொடர்ச்சியான கட்டுமை வளர்ச்சியை ஈட்டிய வண்ணமிருக்கும்.

கனவுகளுக்கு ஒப்புமையானதும் கருகலானதுமான மனப் பாடங்கள் கனவுச் சாயற்படிமங்கள் எனப்படும்.

முதலாம் நிலைப்படிம வாக்கத்தைத் தொடர்ந்து மேலும் தெளிவு நிலையிலே தோற்றம்பெறுவது இரண்டாம் நிலைப் படிம-மாகும். மனத்திலே முதற்கண் தோன்றும் படிமம் மேலும் கிடைக்-கப்பெறும் அனுபவ நீட்சியினால் தொடர்ந்து விருத்தியடைந்த வண்ணமிருக்கும். புனைகதையின் வளர்ச்சி அந்தச் செயற்பாட்டைத் தொடர்ந்து இயக்கிய வண்ணமிருக்கும் அந்த நீட்சி நேர்த்தெறிப்பில் முடிவடையலாம் அல்லது எதிர்த் தெறிப்பில் முடிவடையும். அதாவது ஒரு கதாபாத்திரம் பற்றிய நல்லெண்ணம் மனப்படத்திலே தொடர்ந்து வளர்ந்து செல்லல் நேர்த் தெறிப்பாகும். ஆரம்பத்தில் நல்லியல்பின-ராகத் தோற்றம் பெற்ற ஒரு பாத்திரம் பின்னர் எதிர் இயல்பினராகத் தோற்றம் பெறுதல் எதிர்த் தெறிப்பாகின்றது. கலைச் சிந்தனை மனப்-பாடங்கள் அல்லது படிமங்கள் வாயிலாகவே இயக்கப்படும்.

ஆழ்மனத்திலே உதைப்புடன் அழுத்தி வைக்கப்படும் படிமம் "நனவிலிப்படிமம்" ஆகின்றது. அதிக வலிமையும் செறிவும் கொண்ட படிமமாக அது அமையும் நிஜ வாழ்வில் ஒடுக்கி வைக்கப்பட்ட ஓர் ஆளுமையைப் புனைகதையிலே தரிசிக்கும் பொழுது ஆழ்மனப் படிமம் தொழிற்பாடு கொள்ளும்.

ஆரம்ப காலத்தைய உளப்பகுப்பு - உளவியல் ஆய்வாளர்கள் பாலியலை அடியொற்றியே ஆழ்மனப் படிமங்களை விளக்கலா-யினர். அண்மைக் காலத்தைய ஆய்வுகளில் அந்த ஆய்வு மேலும் விரிவுபடுத்தப்படுகின்றது. எத்தகைய தீவிர ஒடுக்கு முறைகளுக்கும் உள்ளாகும் பொழுதும் ஆழ்மனப் படிமங்கள் தோற்றம்பெறும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும் என்ற விளக்கம் உளப்பகுப்பு ஆய்வின் நீட்சியாக அமைகின்றது.

மனத்திலே தோற்றம்பெறும் காட்சிகள் ஏனோதானோ என்று தன்னெழுச்சியாகவோ சுயாதீனமாகவோ தோற்றம் பெறுதல் இல்லை. படிமங்கள் ஒவ்வொன்றும் சமூக இருப்பின் நேர் நீட்சியா-கவோ பெயர்ந்த நீட்சியாகவோ தோற்றம் பெறுதலை உளவியல் ஆய்வுகள் துல்லியமாகக் குறிப்பிடுகின்றன. சிறப்பாக உளப்பகுப்-பியல் ஆய்வாளர்கள் சமூக இருப்புக்கும் படிம ஆக்கங்களுக்கு-முள்ள தொடர்புகளைக் "கனவுகளைப் பகுத்தாராய்தல்" வழியாக வெளிப்படுத்தியுள்ளனர். இவ்வகையில் படிம ஆக்கம் தொடர்பாக உளப்பகுப்பு இயலுக்கும் மார்க்சிய ஆய்வுகளுக்குமிடையே குறிப்பிடத்தக்க சந்திப்புப் புள்ளிகள் காணப்படுகின்றன.

படிமவாக்கத்தில் மொழியின் பங்குபற்றி ஆராய்ந்த அமைப்பியலாளர் அதன் தொழிற்பாடுகளை பின்வரும் மூன்று நிலைகளுக்குள் சுருக்கி விடுகின்றனர்.

(1) மொழி தனக்குரிய தன்னிலை அல்லது சுயநிலையைத் தவிர்ந்த புறப்பாங்கினைச் சுட்டுதல் இல்லை.

(2) மொழி கருத்தை அல்லது உறுபொருளை உற்பத்தி செய்கின்றதேயன்றி தெறித்தல் *(Reflect)* இல்லை.

(3) தனித்துவத்தை *(Individualuty)* மொழி வெளிப்படுத்துதல் இல்லை.

மேற்கூறிய கருத்துக்கள் பின்னமைப்பியலிலும் நீண்டு செல்கின்றன. இவையனைத்தும் எதிர் அடிப்படையிலான *(Antifoundational)* கண்ணோட்டங்களாகவே அமைகின்றன. மொழி தனக்குரிய மட்டுப்பாடுகளைக் கொண்டதாக இருப்பினும் அது முற்றிலும் சமூகத்திலிருந்து விடுபட்ட "அறிந்த பட்டமாக"த் தொழிற்படுதல் இல்லை.

படிமவாக்கம் அழகியலாக்கத்தின் ஒரு பரிமாணமாகின்றது. புனைகதையாளர் குறித்த பாத்திரத்தை வாசகரின் உளப்படிமங்களாக நிலை மாற்றும்பொழுது பொறிமுறையான அச்சுப்பிரதி *(Copy)*யாக மட்டம் கட்டமைப்புச் செய்துவிடுதல் இல்லை. அவற்றைக் கலைச் செறிவுள்ளவையாக நிலைமாற்றம் செய்தல் ஆக்கச் செயல்முறையுடன் இணைந்த அறிகைத் தொழிற்பாடாக அமைந்து விடுகின்றது.

சந்தர்ப்பங்களுக்கு இயைந்த கருத்துப் பொலிவையும் கருத்தேற்றங்களையும் கொண்ட ஆக்கச் செயற்பாடானது அழகியலேற்றத்துக்குக் கைகொடுக்கும். வாசகரின் உணர்வு இருப்பை செப்பனிடும் கருத்தேற்றங்களைக் கலையழகு கொண்டபடி படிமவாக்கங்கள் கொண்டிருக்கும்.

படிம ஆக்கள் வழியாக நிகழ்த்தப்படும் கருத்து வினைப்பாடே *(Discourse)* திறனாய்வாக மேலெழுகின்றது. அதனை மேலும் விரிவாகக் குறிப்பிடுவதானால் கதைவழி உருவாக்கப்படும் படிமங்களைச் சுற்றியே கதைத்திறனாய்வும் மதிப்பீடுகளும் முனைப்புப் பெறுகின்றன.

பாத்திரங்களின் ஆக்கத்தை கருத்துள்ள வகையில் ஒழுங்கமைக்கும் கோடலாக *(Code)* படிமங்கள் அமைகின்றன. படிமங்களை ஆழ்ந்து நோக்காது புனைகதைக்குள் ஆழ்ந்து நுழைய முடியாது என்பதை மனங்கொள்ளல் வேண்டும். கோடற் குலைப்பு *(Decoding)* நிலையிற் குறுக்கீடுகள் நிகழுமாயினும் பாத்திரத்தின் அடிப்படைக் கட்டமைப்புத் தொடர்ச்சியை மேலோங்கச் செய்து குறுக்கீடுகளை வலுவிழக்கச் செய்தல் புனைகதையாளரின் மொழித் திறனிலே தங்கியுள்ளது.

கற்பனை வளத்துக்கும் படிமவாக்கத்துக்குமிடையே நேர்த் தொடர்புகள் காணப்படுகின்றன. கற்பனையினதும் படிமவாக்கங்களினதும் பிரயோக நிலையிலே கலையாக்கங்களும் கண்டுபிடிப்புக்களும் தோற்றம் பெறுகின்றன. பிறழ்நிலை உளவியல் கனவுப் படிமங்கள் மீது ஆழ்ந்த கவனம் செலுத்துகின்றது. கனவுப் படிமங்கள் சமூக இருப்பின் நெருக்குவாரங்களின் அழுத்தக் குமுறல்களாயிருத்தலைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

★★★

06

புனைவும் காண்பிய ஆக்கமும்



புனைவின் வழியான காண்பியப்படுத்தல் *(Visualisation)* என்ற செயற்பாடு திறனாய்வாளரின் கவனத்தை ஈர்த்து வருகின்றது. கதைத்துவக் காட்சிப்படுத்தல் புனைவின் கலைப்பரிமாணத்தை மேலோங்கச் செய்வதற்குத் துணை நிற்கின்றது. நவீன அறிகை உளவியலிற் பேசப்படும் "காண் பொருளாக்கல்" *(Concept Mapping)* என்பதும் காட்சி வடிவான தெளிவூட்டலை வலியுறுத்துகின்றது. புனை கதைகளைக் கேட்கும் பொழுதும் வாசிக்கும் பொழுதும் ஒவ்வொருவரும் தத்தமது உள அமைப்புக்கேற்றவாறு காட்சிகளை மனத்திலே கட்டமைத்துக் கொள்கின்றனர். அவ்வாறான கட்டமைப்பைக் கதைப் பொருளுடன் இணைத்து ஏற்றம் பெறச் செய்வதற்கான சொற் கோப்பு முக்கியமானதாகும்.

புனைகதை என்பது கேட்போரின் அல்லது படிப்போரின் உள்ளத்திலே அவிழ்த்து விடப்படும் காண்பிய ஆக்கத்தின் வழியாக மேலெழுகின்றது. சொற்களால் உள்ளத்திலே காண்பியங்கள் உருவாக்கப்பட்டாலும், சொற்களைக் காட்டிலும் காண்பியங்களே உள்ளத்திலே பதித்து வைத்தலிற் *(Retention)* கூடிய வலுவும் வாழ்வும் தரும் மேன்மை நிலைகளிற் காணப்படுகின்றன.

புனைகதை என்பது சொல்வழியான தொடர்பு மட்டுமன்றி சொல் வழியான காண்பிய உருவாக்கல் தொடர்புமாகின்றது. சிறுகதையும் நாவலும் ஈடுபாட்டுடன் வாசிக்கத் தக்கதாக *(Read-able)* இருப்பதற்குரிய சிறப்புக் காரணிகளுள் ஒன்றாக அவை மனத்திலே உருவாக்கி நிற்கும் காண்பியத் தரிசனங்களாகும்.

கதை மாந்தரின் பெயர்களே குறிப்பிட்ட பண்பாட்டுச் சூழலில் இருந்து முகிழ்த்தெழும் ஆளுமைக் காண்பியங்களை உருவாக்கி-விடும் ஆற்றல் கொண்டவை. டானியலுடைய நாவல்களில் இந்த நுட்பம் செப்பமாகக் கையாளப்பட்டுள்ளமையைக் காணலாம். சாதியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளுமைக் கோலத்தினர் "பெயர்கள்" வழியாகக் காண்பியமாக்கப்படுகின்றனர். தமிழக மரபில் சாதிய அடையாளம் பெயர்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் நேர்ச்சுட்டாக அமைகின்றது.

கதையை எடுத்துரைக்கும் முறைமை வாசகர்களிடத்து வெறும் எழுத்துவடிவத் தொடர்பாடல் என்ற நிலையையும் கடந்து காண்-பியத் தொடர்களாக அல்லது காண்பிய அலைகளின் தொடர்ச்சி-யாக அமைந்து விடுகின்றன. சுஜாதாவின் "என் இனிய இந்திரா" என்ற நாவலில் இடம்பெற்றுள்ள வித்தியாசமான காண்பியத் தொடர் ஆய்வாளரால் அவ்வப்போது சுட்டிக்காட்டப்படுதல் உண்டு. எடுத்துக்காட்டு:

"நிலாவுக்கு இப்போது இதயத்துடிப்பு அதிகரித்தது. பவுன் கலரில் இதயம் தனியாக தடக்தடக்கென்று சத்தமாக இரச்சலிட்டது. பிழம்பாக அதற்குள் ஒரு சந்தோஷம் ஒதுக்கிக்கொண்டு பிதுங்கினாற் போல வெளிக்காட்டியது"

இச்சந்தர்ப்பத்தில் காண்பிய ஆக்கங்களுக்கும் புனைவு உந்த-லுடன் இணைந்த அரசியலுக்கும் அல்லது கருத்தியலுக்குமுள்ள, தொடர்புகளை ஆழ்ந்து நோக்குதல் வேண்டும். சுஜாத்தாவின் மேற்-குறிப்பிட்ட காண்பிய ஆக்கம் அவரிடத்து ஊறிநிற்கும் நவ உளக்-கவர்ச்சி வாதத்தின் *(Neoromaticism)* தெறிப்பு என்பது தெற்றெனப் புலப்படுகின்றது. மரபுவழித் திறனாய்வுகளிலே குறிப்பிடப்படும் "சொற்சித்திரம்" என்ற எண்ணக்கருவிலும் "காண்பியமாக்கல்" என்பது வேறுபட்டது. காண்பியமாக்கல் பல பரிமாணங்களை உள்ளடக்கிய செயற்பாடாகும். ஆழ்மனத்தூண்டல்கள், வாசகருக்-குரிய உளக்கட்டமைப்பு, நூலியத்தின் வழி எழுகின்ற பொருள்-கோடல், நூலியத்தின் கட்டவிழ்ப்பு, அதன் வழியான உளப்படிம

உருவாக்கல் முதலிய பல பண்புகளை உள்ளடக்கி நிற்கின்றது. காட்சியின் பிரதிநிதித்துவப்படுத்தலையும் மீறி கற்பனை தழுவிய உருக்கொடுத்தலை அது குறிப்பிடுகின்றது.

உவமித்தல் உருவகப்படுத்தல் வருணித்தல் முதலியவை உளக்கட்டமைப்பிலே நிகழ்த்தப்படும் காண்பிய ஆக்கங்களுக்கு இடையூறுகளாகவும் குறுக்கீடுகளாகவும் அமைந்துவிடுதல் உண்டு. வேண்டாத விரயங்களை அவை புனைகதைகளிலே ஏற்படுத்திவிடுதனால் கவிதையின் அத்தகைய கோலங்களைப் புனைகதையாளர் தவிர்த்து விடுதல் உண்டு.

நவீன நாவலாசிரியர்கள், கவிதை வடிவிலான வர்ணனைகளைக் கைவிடுதல் ஒருவகையிலே சினிமாவின் செல்வாக்கு என்றும் குறிப்பிடப்படுகின்றது.

புனைகதைகளின் வழியாக உருவாக்கப்படும் ஒரு சிறப்பார்ந்த ஆக்கப்பரிமாணம் "அசையும் காண்பியக் காட்சிகளை" உருவாக்குதலாகும். சுற்றிவளைக்காது நேரடிப் புனைவாக அசையும் காண்பியத்தை உருவாக்கும் சி.சு.செல்லப்பாவின் "ஒரே ஒரு வசனப் புனைவு" ஒன்று வருமாறு.

"மதுரை ஜங்ஷன் பிளாட்பாரத்தை விட்டு என்ஜின் முன்சக்கரங்களுக்கிடையே நீராவியை வெளியே கக்கிக்கொண்டும் புகைக் குழாய் வழியே புகையை ஊதிக் கொண்டும் தன் ஊது குழாய் வழியே விரைவில் அடித்துக்கொண்டும் மெதுநடையாகப் புறப்பட்டு, நீண்ட பிளாட்பாரத்தை பின்தள்ளிவிட்டு ஸ்டேஷன் எல்லையைக் கடந்தும் சற்று சுறுசுறுப்பாக வேகம் எடுத்து தடதட சத்தத்துடன் கிளைத் தண்டவாளம் மாறி மெயின் தண்டவாளத்தின் மீது ஓடி மதுரை நகரின் எல்லையைத் தாண்டி இருபுறத்துகத் தாழை வரிசைகளிடையே இறைச்சலிட்டுக் கொண்டு சென்றது" (சுதந்திர தாகம் - அத்- 8)

காண்பிய ஆக்கத்திறன் சமூகவியல் கோலத்தோடும், புவியியல் வளத்தோடும் ஒன்றிணைத்துத் தருதல்தான் அந்த ஒன்றிணைப்பின் பின்பலம் ஆகின்றது. டானியலுடைய நாவல்களிலே பரவலாகக் காணப்படுதல் ஒரு சிறப்புப்பண்பு. வகை மாதிரிக்குப் பின்வரும் பந்தியைக் குறிப்பிடலாம்.

"ஒடியல் பிட்டு மணங்குணமாக இருந்ததனால் சற்று அதிகமாகவே சாப்பிட்டுவிட்டான். சாப்பிடும்போது பூட்டிப் பெட்டைக்கும்

மனைவி சின்னிக்கும் எடுத்து வைக்கப்பட்டிருக்கும் என்ற நம்பிக்கை அவனுக்கு சாப்பிட்டு முடிந்ததும் தான் பூட்டிக்கும் தனக்குமாகச் சின்னி அடுத்த நீத்துப் பெட்டியை உலையில் வைத்ததை - அவசர அவசரமாக மாவைக் குழைத்ததை அவன் அவதானித்தான். மனதுக்குள் ஒரு சின்ன உதைப்பு (தண்ணீர்)

சாதிய முரண்நிலைக் காண்பியங்களை உருவாக்கும் டானியலின் எழுத்துவார்ப்புக்குப் பின்வரும் உதாரணத்தைக் குறிப்பிடலாம்.

"சரியான சாயக்காரனால் சாயமிடப்பட்டு, தகுதியான காத்திரமான கட்டாடியின் நாட்டுக்கு நடுவே துயில் போன்ற வெளுப்புடன் கரையோரம் சாயம் பளிச்சிட கரைக்கம்பிக் கோடிடப்பட்ட எழுத்து வேட்டியை மடித்துக் கட்டி, பரமாஸ் சால்வையை தோளில் அள்ளிப் போட்டு முன் பிறைவிட்டு வெட்டப்பட்ட பின் மயிரை அள்ளி அழகாக முடிப்பிட்டு இராசகோலத்தில் தம் பாப்பிள்ளையார் போகும் தொலுக்கினை நன்னியன் பார்க்கவில்லை" (கானல்) காண்பியல் ஆக்கத்தைச் சமூகவியற் கருத்தியலை அடியொற்றி எழுத்துருவாக்கும் செயற்பாட்டினை மேலே காணக்கூடியதாகவுள்ளது.

கட்டடக்கலையின் வளர்ச்சி, சிற்பம், ஓவியம், திரைப்படம், நிழற்படம் முதலாம் துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியும் அவை தொடர்பான உணர்வுகளும் புனைகதை வழியான காண்பியச் சித்திரிப்பிலே செல்வாக்கை ஏற்படுத்தி வருகின்றன. அவற்றின் வழியாக எழுச்சி கொண்ட ஒரு பிரதான எண்ணக்கரு "ஆழம்" *(Depth)* பற்றியதாகும். ஆழத்தின் வழியாகக் காண்பிய உயிர்ப்பூட்டலை நடப்பியல் தளத்தில் உருவாக்கிக்கொள்ளும் பொருட்டு திரைப்பட இயக்குனர் குறிப்பிட்ட களங்களுக்குச் சென்று படப்பிடிப்பை மேற்கொள்ளும் மரபு தோற்றம்பெற்றது. புனைகதை ஆசிரியர்களும் குறிப்பிட்ட களங்களுக்குச் சென்று நேரடியான காட்சிகளைக் கண்டும், தகவல்களை நேரடியாகத் திரட்டியும் ஆக்கங்களை மேற்கொள்ளல் மேலையுலகில் மாத்திரமன்றி தமிழ்ப் புனைகதை அசிரியர்களிடத்தும் காணப்படுகின்றது.

"இந்தப் படைப்பை உருவாக்குவதற்கான உண்மைகளை அறிய மதுரை மாவட்டப் பகுதிகளின் நான் களப் பணி மேற்கொண்ட போது, பல நண்பர்கள், இளைஞர்கள் பெண்கள் எனக்குத் தகவல்கள் தந்து உதவினார்கள்" (ராஜம் கிருஷ்ணன் "மண்ணகத்துப் பூந்துளிகள்" முன்னுரை)

சினிமா புனைவுகளின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை சா.கந்தசாமி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். (நவீன தமிழ்ச் சிறுகதைகள், சாகித்திய அக்காதெமி முன்னுரை.2000)

"சினிமா வந்ததும் எழுத்தின் எழுச்சி என்பது மேலும் மேலும் வசீகரம் பெற்றது. சினிமா என்பது எத்தனைதான் பாமரத்தன்மையாக இருந்தாலும் அது எழுத்தை மேலும் கூர்ம்மைப்படுத்தியது. வர்ணனைகளை அப்புறப்படுத்தியது. நல்ல எழுத்து என்பதை அதிகமாக அது மக்களுக்குக் கொண்டு போகவில்லை என்று குறை சொன்னாலும் கூட, படைப்பு எழுத்தாளனின் எழுத்தையே அது மாற்றியது. சினிமா படைப்பு இலக்கியத்திற்கு இந்த நூற்றாண்டில் வழங்கிய விருது என்றே இதனைக் குறிப்பிட வேண்டும்."

புனைவு நிலையில் ஓர் ஊடகம் பிறிதோர் ஊடகத்தின் மீது செல்வாக்குச் செலுத்துதல் தவிர்க்க முடியாத செயற்பாடாகும். சமூகம் தனிக்கூறுகளாக அன்றி ஒன்றுடன் மற்றையது இடைவினைகளை விளைவிக்கும் இணைக் கூறுகளாகவே தொழிற்பட்ட வண்ணமுள்ளது. சமூக இருப்பிலிருந்து மேலெழும் ஆக்க வடிவங்களும் இடைவினைகளையும் செல்வாக்கு உள்ளீடுகளையும் கொண்டிருத்தல் குறிப்பிடத்தக்கதே.

காண்பியம் என்பது வாழ்வாதார இருப்பின் கண்வழி எழுச்சியாகின்றது. "மரத்தில் மறைந்தது மாமதயானை" என்ற தொடர் காண்பிய ஆக்கத்தின் பிறிதொரு பரிமாணத்தைச் சுட்டிக்காட்டிய மரபுவழி அனுபவம் ஆயிற்று.

★★★

07

வரலாற்றுப் புனையங்கள்



ஐரோப்பிய மக்கள் வாழ்க்கையைப் பலமுறை உலுப்பிய போர்களும் அவற்றின் கொடு முடிகளாக அமைந்த முதலாம், இரண்டாம், உலகப் போர்களும், வரலாற்று நாவல்களை வளர்ப்பதற்கான விசைகளாக அமைந்தன. ஐரோப்பிய மக்களின் வாழ்வியல் இருப்பு வரலாற்றுப் பிரக்ஞையை இயல்பாக ஊட்டி வந்தது. உயிரினங்களின் வரலாறு பற்றிய சார்ல்ஸ் டாவினுடைய ஆய்வுகளும், சமூக வரலாறு பற்றிய கார்ல் மார்க்சின் ஆய்வுகளும் வரலாற் றுணர்வின் அறிகை வெளிவீச்சுக்களாக அமைந்தன.

ஏற்கனவே மக்கள் மனங்களில் ஆழ்ந்து பதிந்திருந்த தொன்மப் படிவுகளும், காலத்துக்குக் காலம் நிகழ்ந்து வந்த புலப்பெயர்ச்சி நினைவுகளும், வரலாற்று நாவல்கள் எழுவதற்கு மேலும் விசையூட்டின. ஐரோப்பிய பல்கலைக் கழகக் கல்வியில் வரலாறு ஒரு சிறப்பான பாடத்துறையாக வளர்ந்து வந்தது. பாடசாலைகளிலும் வரலாற்றுப் பாடம் ஒரு முக்கிய கூறாக இடம்பெற்று வந்தது. இவையணைத்தும் வரலாறு பற்றிய பிரக்ஞையைச் செறிவூட்டி வந்தன.

ஐரோப்பாவில் வளர்ச்சி பெற்று வந்த கலை வரலாறு தொடர்பான உணர்வும் வரலாற்றுப் புனைவுகளுக்கும் புலக்காட்சிக்கும் உற்சாகமூட்டி வந்தன.

தமிழில் வரலாற்று நாவல்களை புனைவோருக்கு வால்டர் ஸ்கொட் எழுதிய ஆங்கில வரலாற்று நாவல்கள் ஒருவகையில் மாதிரிப் படிமங்களாக அமைந்தன. இந்திய சுதந்திரப் போராட்ட காலங்களில் இந்திய வரலாறு, தமிழக வரலாறு முதலானவற்றின் மீள்நோக்கல் வளர்ச்சியடையலாயிற்று. சேரசோழ பாண்டிய அரசுகள், பற்றிய அகவய உணர்வுகளும், இந்திய விடுதலை உணர்வுகளும், கல்வி கற்றவர்கள் வரித்துக்கொண்ட ஆதர்ஸக் கருத்தியலும், "சிவகாமியின் சபதம்", "பொன்னியின் செல்வன்", "பார்த்தீபன் கனவு" முதலாம் நாவல்களின் ஆக்கங்களுக்கு வழிகோலின.

கல்கியைத் தொடர்ந்து அகிலன், கோவி.மணிசேகரன், இலட்சுமி நாராயணன், விக்கிரமன், தென்னரசு, சாண்டில்யன், தெ.ப.பெருமாள், கி.அரங்கராசன், கு.இராசவேலு, நல்ல பெருமாள், ந.பார்த்தசாரதி, நாரணதுரைக்கண்ணன் செங்கை ஆழியான் கே.எஸ்.ஆனந்தன் முதலியோர் வரலாற்று நாவல்களைப் புனையலாயினர்.

வரலாற்று நாவலாக்கம், வரலாறு பற்றிய அறிகையுடனும், ஆக்கமுனைப்புடனும் இணைந்த செயற்பாடாகின்றது. மேலெழுந்த வாரியான வரலாற்றறிவுடன் வரலாற்று நாவல்களைப் புனையும் பொழுது பல்வேறு அபத்தங்களுக்கு இடமளித்துவிடும். மேலும் வரலாற்றின் இயங்கியலைப் புரிந்துகொள்ளாது புனைவு முயற்சியை மேற்கொள்ளுதலும் "சோடைபோகும்" நிலைக்கு இட்டுச் சென்றுவிடும். குறிப்பிட்ட வரலாற்றுக் காலகட்டம் பற்றிய சமூகநிலை பற்றியும், பொருண்மிய இயல்பு பற்றியும் அறிந்துகொள்ளாது வரலாற்று நாவல்களைப் புனைய முயலுதல் மனோரதியப் பாங்கின் வருடலாகவே மாறிவிடும்.

சமூக வரலாறு பற்றிய தெளிவை ஏற்படுத்துவதற்கு பலப்பல பாத்திரங்களை நாவல்களிலே எடுத்தாளல் முக்கியமானது. அவ்வாறு பல பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் பொழுதுதான் சமூகம் பற்றிய காட்சியைப் பல கோணங்களிலிருந்து விளக்க முடியும். அதேவேளை பாத்திரங்களோடு இணைந்த சமூகத்தின் முரண்விசைகளை இணைக்கும் பொழுதுதான் சமூகக் கோலத்தைப் புனைவினூடாகக் கொண்டு வரமுடியும்.

வரலாற்று நாவல்களின் பிறிதொரு பரிமாணம் குறிப்பிட்ட காலகட்டங்களில் நிலவிய புலம்பெயர்தலோடு இணைந்த வரலாற்று

நாவல்களின் தோற்றம் முன்னைய தமிழ் வரலாற்று நாவல்களின் பிரிகோட்டினைக் கடந்து நிற்கின்றது. தமிழகத்துள் நிகழ்ந்த வரவுப் புலம் பெயர்வுகள், பெருந்தோட்டப் பொருளாதார நடவடிக்கைகள் காரணமாகத் தமிழ் மக்களிடையே இடம்பெற்ற புலப்பெயர்வு, இலங்கையின் உள்நாட்டுப் போர்கள் காரணமாக ஏற்பட்ட புலப்-பெயர்வுடன், தொடர்புடைய வரலாற்று நாவல்கள், முன்னைய வர-லாற்று நாவல்களின் ஆதர்ஸங்களிலிருந்து விடுபட்டு நடப்பியலின் அழுத்தங்களுடன் இணைந்து உருவாக்கம் பெறலாயின.

கி.ராஜநாராயணன் எழுதிய "கோபல்ல கிராமம்" நாவலில் ஆந்திர நாட்டிலிருந்து தமிழகத்துக்கு வந்த கம்மவார் இனத்தைச் சேர்ந்த மங்கத் தாயாரு அம்மாவின் குடும்பம் கோயில் பட்டிப் பகு-தியில் குடியேறிய சமூக வரலாற்றுச் சித்திரிப்பும், நடப்பியலுடன் இணைந்த சுவையேற்றமும் இடம்பெற்றுள்ளன. ஆற்றுகை மற்றும் காண்பியக் கலைகளுடன் கதை மாந்தர்களை இணைத்து சமூகம் + கதை மாந்தர் + கலை இயல்பு முதலியவற்றைப் புனைதலாகும்.

கல்கியின் சிவகாமியின் சபதத்தில் நிலப்பிரபுத்துவம் மற்றும் தொன்மையான வர்த்தகத்துடன் இணைந்த அரசு, சிவகாமி, பரத-நாட்டியம் ஆகியவற்றுக்கிடையேயுள்ள இணைப்புக்கள் அறிந்தோ அறியாமலோ வெளிவந்துளளன. கல்வி வாழ்ந்த காலம் கிருஷ்ண-ணையராலும் ருக்மிணி அருண்டேல் அவர்களினாலும் சதிராக இருந்த தமிழகத்துச் செவ்வியல் ஆடல் "பரதநடனம்" என்ற மகுடத்துடன் மீட்டெடுக்கப்பட்ட காலப்பகுதியாகும். அத்தகைய சமகாலக் கலை மீட்பின் விசைகள் கல்கியின் மீது ஏற்படுத்திய செல்வாக்கினை சிவகாமியின் சபதம் ஒருவகையிலே வெளிப்படுத்தியுள்ளது.

ஜீவாத்மா பரமாத்மாவை ஆடல் வழியே தேடல் என்ற மேனி-லையாக்கத்தின் மீள வலியுறுத்தலை பரத நாட்டியத்தை மீட்டெடுத்-தோர் மேற்கொண்ட அண்மைநிலைச் செல்வாக்குகள் கல்கியை ஆட்கொண்டன. அவர் "முன்னம் அவளுடைய நாமம் கேட்டாள்" என்ற தேவாரத்தைப் பாடும்பொழுது மாமல்லனை நினைத்து அபி-நயம் பிடித்த சிவகாமி பின்னர் அவளின் மனம் மாற்றமடைந்து இறைவனை நினைந்து அபிநயம் பிடித்தாள் என்று கல்கி குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களது வரலாற்றுப் புலக்காட்சி அரசுகளை அடிப்படை-யாகக் கொண்ட காட்சியாக நிலைநிறுத்தப்பட்டு வந்த நிலையில் சமூக வரலாறு, பண்பாட்டு வரலாறு, கலை வரலாறு பற்றிய

பிரக்ஞைகள் ஒப்பீட்டளவில் குன்றிய நிலையில் இருந்து வந்துள்ளது. இந்நிலையில் பெரும்பாலான தமிழ் வரலாற்றுப் புனையங்கள் அரசர்களையும் அரச குடும்பங்களையும் நடுவனாகக் கொண்டே மேலெழுச்சி கொண்டன. அரசர்களின் மேலெழுச்சிகளால் சமூக வாழ்க்கை மேலெழுச்சிகொள்ளும் என்ற புலக்காட்சியும் புனைவும் ஆக்கங்களில் வலுவூன்றி நின்றன.

பின்வருவன தமிழ் வரலாற்று நாவல்களின் புனைவுத் தூண்டல்களாயின.

* இந்திய விடுதலைப் போரின் அனுபவங்கள்
* பண்பாட்டு மறுமலர்ச்சியின் விசைகள்
* தமிழ்மக்கள் வாழ்வின் மீள்நோக்கல்
* காந்தியத்தின் அருட்சி
* தனிமனித வாதம்
* அரசு பற்றிய நடப்பியல் தழுவாத கற்பனைகள்
* புனைவுச் சுவையூட்டலை வருவிக்கும் திருப்பங்கள்
* பழைமை மீது கொண்ட அதீத நயப்பு.
* தேசிய இன எழுச்சி


நீல பத்மநாபனின் பள்ளிகொண்ட புரமும் ஒருவகையில் வரலாற்றுக் கூறுகளை உள்ளடக்கிய நாவலாகவே அமைகின்றது. திருவனந்தபுரம் நரகம் பற்றிய நுண்ணிய விபரணங்களும், வரலாற்றுச் சுவடுகளின் குறிப்புக்களும் இடம்பெறும் ஒரு வேறுபட்ட வகையான வரலாற்று நாவலாக பள்ளி கொண்டபுரம் அமைந்துள்ளது. ஏமாற்றம், துன்பம், கழிவிரக்கம் கொண்ட அனுபவங்களை உள்ளடக்கிய ஒருவகை மாற்று நாவலாக அது அமைந்துள்ளது.

வரலாற்று நாவல் என்ற கலை அனுபவத்தின் வழியாக வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளப்பட வேண்டியவற்றை அழகியல்வழியாக உந்திவிடும் செயற்பாடுகள் தமிழ் வரலாற்று நாவல்களில் வறிதாகவே உள்ளன.

★★★

08

அறிவியற் புனையங்கள்



நடப்புநிலை சார்ந்த அறிவியல் அல்லது கற்பனை அறிவியல் சார்ந்த கலையாக்கமாக அறிவியற் புனைகதைகள் *(Science Fiction)* தோற்றம் பெற்றுள்ளன. அறிவியல் என்பது சமூகத்தளத்தில் நிகழும் அறிகைசார்ந்த ஆக்கமாகின்றது. இயற்கையோடு மனிதர் நிகழ்த்தும் போராட்டங்களும், சமூக முரண்பாடுகளை அடியொற்றிய விசைகளும் அறிவியல் அறிவையும் ஆய்வுகளையும் விசைகொள்ளச் செய்து வருகின்றன. அறிவியலை அடிப்படையாகக் கொண்ட பறிப்பு முறைமையும் *(Exploitation)* தொடர்ந்தவண்ணமுள்ளன. இந்நிலையில் அறிவியலின் கனங்காத்திரமான செயற்பாடுகள், மலினமான செயற்பாடுகள், எதிர்மறையான செயற்பாடுகள் மனிதர் மீதும் சமூகத்தின் மீதும் ஏறபடுத்தும் தாக்கங்களை கலைத்துவநுட்பங்களும், புனைய நுட்பங்களும் கலந்து ஆக்குதல் அறிவியற் புனைக் கதைகளாகின்றன.

அறிவியற் புனை கதைகளின் ஒழுங்குபடுத்தப்பட்ட வளர்ச்சி 1920ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்படுகின்றது. அதற்கான முயற்சிகளை "ஹியுகோ" *(Hugo)* வெளியீட்டார்கள் மேற்கொள்ளத் தொடங்கியதுடன் 1953ஆம் ஆண்டிலிருந்து அறிவியற் புனையங்களுக்குப் பரிசு கொடுக்கும் திட்டத்தையும் ஆரம்பித்தனர்.

மனித வாழ்விலே அறிவியற் சிந்தனைகளினதும், வெளிப்பாடுகளினதும் தாக்கங்கள் கைத்தொழிற் புரட்சியிலிருந்து விசை கொள்ளலாயின. எழுத்தாளர்களும் கலைஞர்களும் அக்காலத்திலிருந்தே அறிவியலின் தாக்கங்களை ஆழ்ந்து மனங்கொள்ளத் தொடங்கிவிட்டனர். ஆயினும் கைத்தொழிற் புரட்சிக்கு முன்னதாகவே அறிவியலை அடியொற்றிய கற்பனைகள் முகிழ்த்தெழத் தொடங்கிவிட்டன. பூர்வீக அறிவியற் சிந்தனைகளை அடியொற்றி நட்சத்திரங்களுக்கும் கோள்களுக்கும் பறந்துசெல்லல் பற்றிய புனைகதைகள் வழக்கிலிருந்தன. இரசவாதம் தழுவிய வித்தனைகளை அடியொற்றிய கதைகள் புனையப்பட்டன. ஆயினும் திட்டமிட்டு அச்சுவடிவில் அறிவியற் புனைகதைகளை ஆக்குதலும் வெளியிடுதலும் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே எழுச்சி கொள்ளலாயின.

சமூக வளர்ச்சியை அடியொற்றி அறிவியல் அறிவு வளர்ச்சிடைய, கலையாக்கங்களிலும் அவற்றின் ஊடுருவல்கள் ஏற்படலாயின. அறிவியற் புனைகதை என்ற தனித்த வடிவம் தோற்றம்பெறாவிடிலும் தொன்மையான நாட்டார் கதைகளிலும், காவியங்களிலும் பூர்வீக அறிவியற் சிந்தனைகளின் நுண்ணிய இழைகள் காணப்படுகின்றன. இரும்பின் உபயோகத்தால் ஏற்பட்ட விளைவுகளும், சில்லின் கண்டுபிடிப்பினால் ஏற்பட்ட பிரயோக விஞ்ஞான சிந்தனைகளும் கதையாக்கங்களிலே செல்வாக்குச் செலுத்தலாயின.

அறிவியற் புனைகதைகள் உலக இலக்கியங்களிலே இடம் பெறுவதற்குரிய உந்து விசையை 1726ஆம் ஆண்டில் வெளிவந்த "கலிவரின் சுற்றுலாக்கள்" *(Gullivers Travels)* என்ற புனையம் ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து விஞ்ஞானப் புனைகதையாக்கத்துக்குரிய விசையை மேரி டபிள்யு ஷெல்லி எழுதிய "பிராங்கஸ்ரின்" அல்லது புதிய முன்னெழுச்சி என்ற ஆக்கம் ஏற்படுத்தியது. 1818ஆம் ஆண்டில் அந்த ஆக்கம் வெளிவந்தது. அந்தப் பெரும் பங்களிப்பை அடியொற்றி அவருக்கு "அறிவியற் புனைகதைகளின் தாய்" என்ற சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது. அறிவியலை அடியொற்றிய புத்தாக்கப் புனைவு நுட்பங்களை அவர் அறிமுகப்படுத்தினார்.

தமிழ் மரபில் வளர்ச்சிபெற்ற கட்டுமான அறிவியற் சிந்தனைகள் நாட்டார் புனைகதையாக்கங்களிலே செல்வாக்குச் செலுத்தலாயின. சோழப் பெருமன்னர் காலத்தில் இடம்பெற்ற தஞ்சைப் பெரிய கோயில் உட்பட்ட பெருங்கட்டுமான சிந்தனைகள், மற்றும் கப்பல் கட்டும் அறிவியற் சிந்தனைகள் முதலியவற்றை அடியொற்றிய நாட்டார் கதைகள் தோற்றம்பெற்றன.

அவ்வாறே தமிழகத்தில் வளர்ச்சிபெற்ற மருத்துவ அறிவியல் சிந்தனைகளை அடியொற்றிய புனைகதைகளும் தோற்றம் பெறலாயின. சிலவகையான குளிகைகளை உண்டு ஆகாயத்தில் பறத்தல், குளிகைகள் வாயிலாக பூதர்களை (பெரும் உடல்கொண்டவர்களை) உருவாக்கி விநோதங்கள் புனைதல் முதலானவை நாட்டார் கதைகளிலே இடம்பெறலாயின.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அறிவியல் துறையில் நிகழ்ந்த இரண்டு பெரும் நிகழ்ச்சிகள் ஷெல்லியின் அறிவியற் புனைகதையாக்கங்களுக்கு மேலும் தூண்டுதல் வழங்கின. அதாவது கல்வினுடைய மின்னியற் கண்டுபிடிப்பும் உயிர்த்துளாவல் (Vivisection) அறிவியற் செயற்பாடுகளும் புதிய புதிய புலக்காட்சிகளைத் தோற்றுவித்தன. அவற்றைத் தொடர்ந்து அறிவியற் புனைகதையாக்கங்களிலே அச்சமூட்டும் விநோதங்களை உருவாக்கும் புனைவுகள் முன்னெடுக்கப்படலாயின. அச்சப் புனைவுகள் படிப்படியாக திரைப்படங்களிலும் செல்வாக்கை ஏற்படுத்தின. அவை முதலாளிய சினிமாவுக்கு உவப்பானவையாய் அமைந்தன.

உலக அறிவியற் புனைகதையாக்கத்துக்குரிய முயற்சிகளை முன்னோக்கி நகர்த்தியவர்களுள் எட்கர் அலன் போவின் ஆக்கங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவருடைய எழுத்தாக்கங்கள் அறிவியற் புனைகதைகள் என்ற முழுமையான வடிவத்துக்கு உள்ளமையாவிடிலும் வளமான ஆக்கத்துக்குரிய தொழில்நுட்பவியல் விபரண முறைமைகளை அறிமுகம் செய்வதாய் அமைந்தன. அவரின் செல்வாக்கினுக்கு உட்பட்ட யூலிஸ் வேர்னி அவர்கள் அறிவியற் புனைகதைக்குரிய வடிவத்தை மேலும் ஆக்கம்பெறச் செய்தார். சமகாலத்தைய பல அறிவியற் கண்டுபிடிப்புக்களை 1863ஆம் ஆண்டில் அவர் எழுதிய புனைகளிலே கற்பனையாகப் புனைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் தழுவிய சஞ்சிகைகளிலே அவரது ஆக்கங்கள் வெளிவந்து பெருந்தொகையான வாசகர்களிடத்துக் கவர்ச்சியை உருவாக்கத் தொடங்கின. அறிவியற் புனைகதைகள் வாயிலான நகைச்சுவை ஆக்கங்களும் அவரால் முன்னெடுக்கப்பட்டன. "விசித்திரமான நகைச்சுவை" (Droll Humour) என்ற கலைப்பண்பை வளர்த்தெடுப்பதற்கும் அவர் அறிவியற் புனைகதையாக்கங்களை நெறிப்படுத்தினார். அவரது அறிவியல் நாவல்கள் அனைத்துலகப் புகழை ஈட்டத் தொடங்கியதுடன் பின்னர் திரைப்படங்களாகவும் ஆக்கம் பெற்றன. "அறிவியல் உளக்கவர்ச்சிவாதம்" (Scientific Ro-

mance) அவரது புனையங்களிலே மேலோங்கிய பண்பாகக் காணப்பட்டது.

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த அல்பேட் ரொபிடா அறிவியற் புனையங்களுக்குப் பிறிதொரு பரிமாணத்தை வழங்கினார். அறிவியற் புனையத்தளத்திலே அவர் மகிழ்ச்சியூட்டும் கேலிச் சித்திரங்களை உருவாக்கலானார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி அவருடைய கேலிச் சித்திரங்கள் இருபதாம் நூற்றாண்டில் இடம்பெற்ற அறிவியல், யதார்த்தங்களை முன்கூட்டியே நகைச்சுவையுடன் சுட்டிக்காட்டின.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து வளர்ச்சி பெறத் தொடங்கிய தலையிடாமை முதலாளியம் தொடர்பான கருத்துக்கள் சமூகத்தின் மேல் தளத்தினருக்கு உவப்பானதாக அமைந்தது. தலையிடாமைச் சிந்தனைகளை அடியொற்றிய அறிவியற் புனைவுகளிலும் அதன் செல்வாக்குகள் இழையோடின. அறிவியற் கண்டுபிடிப்புக்களை மனிதத் தலையீடுகள் இன்றித் தன்னிச்சையாக இயங்கவிட்டால் யாது நிகழும் என்ற கற்பனை ஊகங்கள் தழுவிய புனைவுகளும் வளர்ச்சிபெறலாயின.

ஐரோப்பாவில் நிகழ்ந்த கல்வி வளர்ச்சியும், அறிவியற் கண்டுபிடிப்புக்களும் தொடர்பாடல் எழுச்சியும் செல்வத்தின் அனுகூலங்களைப் பகிர்ந்து கொள்வதிலே காணப்பட்ட சனமற்ற பரவலும் பல்வேறு முரண்பாடுகளைச் சமூகத்திலே தோற்றுவித்தன. அவை மாறுபாடான புலக்காட்சிகளுக்கும் கற்பனைகளுக்கும் தூண்டுதலளித்தன. அவற்றின் செல்வாக்கினுக்கு உட்பட்ட பல அறிவியற் புனைகதையாக்கங்கள் வளர்ச்சிபெறத் தொடங்கின. அந்த வகையில் வியப்பூட்டும் பல ஆக்கங்களை எச்.ஜி.வெல்ஸ் அவர்கள் எழுதி வெளியிட்டார். அவற்றில் "நேரப்பொறி" "கட்புலனாகா மனிதன்" "உலகங்களின் போர்" முதலிய ஆக்கங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

அறிவியற் புனைகதை ஆசிரியர் வரிசையிலே வில்லியம் மொறிஸ் தனித்துவமானவர். சமூக மாற்றங்கள் வழியே முகிழ்த்தெழும் அறிவியல் வளர்ச்சியையும் அதனோடு இணைந்த கற்பனைகளையும் பொதுவுடைமை நோக்கில் அவர் புனையலானார். அவர் பயன்படுத்திய மொழிக்கோலங்களும் எழுநடையும் (Style) கவர்ச்சிமிக்கனவாய் அமைந்தன.

இருபதாம் நூற்றாண்டில் வளர்ச்சிபெறத் தொடங்கிய வாசகர் எண்ணிக்கைப் பெருக்கமும், மரக்கூழில் இருந்து குறைந்த செலவிலே அச்சுத்தாள்களைத் தயாரிக்கும் முயற்சியும் வேக இயக்க அச்சுப் பொறிகளின் கண்டுபிடிப்பும் நூல் மற்றும் பருவ இதழ்களின் பெருக்கத்துக்கு இட்டுச்சென்றன. வாசிப்புப் பிரிய அட்டவணையிற் புனைகதை வாசித்தல் முதலிடத்தைப் பெறத்தொடங்கியது. அறிவியற் புனைகதைகளில் இடம்பெறும் அதிர்ச்சிப் புனைவுகள் கட்டிளைஞர்களிடத்தே பெரும் செல்வாக்கை ஏற்படுத்தின. அந்த ஆர்வத்தையும் வாசிப்புச் சந்தையையும் 1920ஆம் ஆண்டிலிருந்து ஹியுகோ வெளியீட்டாளர்கள் வினைத்திறனுடன் பயன்படுத்தலாயினர். அறிவியற் புனைகதை நூல்களின் பெருக்கமும் பருவ இதழ்களின் பெருக்கமும் மேலெழலாயின. 1934ஆம் ஆண்டளவில் ஐக்கிய அமெகரிக்காவில் அவற்றுக்குரிய வாசகர் வட்டங்களும் தோற்றம்பெற்றன. அத்துறையில் ஆக்கங்களை மேற்கொள்ளும் இளம் எழுத்தாளர்களும் தோற்றம் பெற்றனர்.

அறிவியற் புனைகதையாக்கங்களை மார்க்சிய சமூகவியற் கண்ணோட்டத்துடனும், அதிக கற்பனை வளத்துடனும் புனைவதில் சோவியத் எழுத்தாளர்கள் ஆற்றல் மிக்க பங்களிப்பைச் செய்யலாயினர். "சோவியத் அறிவியற் புனைகதை முறைமை" என்ற தொடரை மேலைப்புலத் திறனாய்வாளர் பயன்படுத்தியமை அதன் முக்கியத்துவத்தை மீள வலியுறுத்துகின்றது. 1924ஆம் ஆண்டில் சோவியத்தில் வெளியிடப்பட்ட அறிவியற் புனையம் தழுவிய எலித்தா *(Aelita)* என்ற மௌனத்திரைப்படத்தை ஒரு "மீநிலை ஆக்கம்" *(Master Piece)* என ஆய்வாளர் குறிப்பிடுவர். எலிக்சே டால்ஸ்டா வெளியிட்ட ஒரு நாவலைத் தழுவி அந்தத் திரைப்படம் உருவாக்கப்பட்டது. மிகுந்த கலைப்பண்பும் கற்பனையாக்கமும் கொண்டதாக அந்தத் திரைப்படம் அமைந்தது. ஒடுக்கு முறைக்கு எதிரான உணர்வுகளை மிகுந்த கலை நுட்பங்களுடன் சித்திரிப்பதாகவும் அமைந்தது.

அணுக்குண்டின் கண்டுபிடிப்பைத் (1945) தொடர்ந்தும் சோவியத்தின் செயற்கைக்கோள் விண்வெளிக்கு அனுப்பபட்டமையைத் (1957) தொடர்ந்தும் அறிவியற் புனைகதையாக்கங்களிலே மேலும் வளர்ச்சி நிலைகள் ஏற்படலாயின.

கட்டிளைஞர்களுக்குக் கவர்ச்சியூட்டும் வகையிலே பிறகோள்களையும் அங்குள்ளவர்களுடன் போரிட்டு அவர்களை வெல்லும் வகையிலான ஒரு வகையில் "உறுவாய்பாடு" தழுவிய திரைப்படங்களும் *(Formulic Films)* அறிவியற் புனையங்களும் மேற்குலகில்

மட்டுமன்றி சிறப்பாக ஜப்பானிலும் வளர்ச்சி பெறலாயின. போரூக்கம், வன்னடத்தை முதலிய உணர்வுகளை அந்தப் புனைவுகள் பெருமளவிலே தூண்டிய வண்ணமிருந்தன. உறுவாய்ப்பாடுகளின் அடிப்படையான ஆக்கங்கள் நீடித்து நிலைக்கக் கூடியவை அன்று. இந்நிலையில் பிரித்தானியாவையும், ஐக்கிய அமெரிக்காவையும் சேர்ந்த அறிவியற் புனைகதை ஆசிரியர்கள் "புதிய அலை" *(New wave)* இயக்கத்தை ஆரம்பித்தனர். மைகேல் மூர்கொக், ஹார்லான் எலிசன் ஆகியோர் புதிய அலையை ஆரம்பித்தவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள்.

கீழைத்தேய சமயங்களை அடியொற்றிய கற்பனைகள், சிந்தனையை மாற்றுவழிப்படுத்தும் குளிகைகள் பற்றிய புனைவுகள் முதலியவற்றை உள்ளடக்கிய எழுநடைப் பரிசோதனைகளைக் கொண்டவையாக புதிய அலை ஆக்கங்கள் அமைந்தன. அவற்றின் அடிப்படையில் "மென் அறிவியற் புனைகதை" *(Soft-S.F)* என்பது தோற்றம் பெறலாயிற்று. அறிவியற் பிரயோகத்தின் சமூக விளைவுகள் புனைகதையாக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டன. இதற்கு மாறுபாடானது "வன் அறிவியற் புனைகதை" *(Hard,S.F)* என்பதாகும். "தொழில் நுட்பம் தொழில் நுட்பத்துக்காக" என்ற கருத்தியல் வன்அறிவியற் புனைவுகளில் வலியுறுத்தப்பட்டது.

அறிவியற் புனையங்கள் பல்வேறு வயது மட்டத்தினரிடத்தும், பல்வேறு இயல்புடையோரிடத்தும் சுவைநிலைச் செல்வாக்குகளை ஏற்படுத்தத் தொடங்கியமையால் ஹொலிவூட் திரைப்படத் தயாரிப்பாளர்களும், தொலைக்காட்சித் தயாரிப்பாளரும் அத்துறையில் தீவிர ஈடுபாடு காட்டலாயினர். அறிவியற் புனையத் திரைப்படங்கள் உச்ச நிலையான வசூலையும் எட்டத்தொடங்கின.

கணிப்பொறிகளின் வளர்ச்சியும், செயற்கை நுண்மதியாக்கங்களும் அறிவியற் புனைகதை ஆக்கங்களிலே புதிய பரிமாணங்களை ஏற்படுத்தலாயின. அவற்றின் செல்வாக்குகளினால் "பொறி மனிதர்" *(Robot)* தொடர்பான சாகசங்களை அடியொற்றிய புனைவுகள் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. பொறி மனிதரை அடியொற்றிய ஆக்கங்களைப் புனைத்தவர்களுள் ஐசாக் அசிமோவ் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்.

கணவன் மனைவி போன்ற வாழ்க்கைத் துணைவர்களாக இருந்து தொழிற்பட்டு மனித உணர்வுகளுடன் தொடர்புபடுத்தியும் மனித இடைவினைகளுடன் தொடர்புபடுத்தியும் பொறி மனிதர் தொடர்பான கற்பனைப் புனைவுகள் இடம்பெறத் தொடங்கின.

உயர்நிலையான தொழில்நுட்ப வளர்ச்சி சமூகத்திலும் மனித வாழ்க்கையிலும் ஏற்படுத்திவரும் செல்வாக்குகளை நுணுகி ஆராய்ந்த லியோ மார்க்ஸ் என்பார் "தொழில்நுட்பவியல் சார்ந்த மேன்மையம்" *(Technological Sublime)* என்ற பொருண்மை கொண்ட தொடரை அறிமுகப்படுத்தினார். நடைமுறை வாழ்க்கையில் ஊடுருவிய தொழில்நுட்பவியற் செயற்பாடுகளின் தளத்திலிருந்து புதிய புதிய கற்பனைகள் தோற்றம் பெறலாயின. "நேரப் பொறி", "கோள்களுக்கிடையேயான விண்கலன் போக்குவரத்து" மனித ஒப்புமைப் பொறி *(Androids)* போன்ற புதிய புனைவு எண்ணக்கருக்கள் தோற்றம் பெற்றன.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து தீவிர வளர்ச்சிகொள்ளத் தொடங்கிய உயிர்நுட்பவியல் மனித வாழ்வில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. உயிர்நுட்பவியல் மற்றும் மரபணுப் பொறியியல் முதலாம் துறைகளை அடியொற்றிய புனைகதைகள் வளர்ச்சியடையத் தொடங்கின. பெரும் விலங்குகளை உருவாக்கி சாகசங்கள் செய்தல், மீ மனிதனை *(Super man)* உருவாக்கி நேர் மற்றும் எதிர் வினைப்பாடுகளைச் செய்வித்தல், தொடர்பான புனைவுகள் ஆக்கம் பெறத் தொடங்கியவேளை அவை திரைப்படத் துறையினருக்கு வசூல் வாய்ப்புக்களை விரிவாக்கின.

அறிவியற் புனைகதைகளின் சிறப்பாக விண்கலங்களையும் செயற்கைக் கோள்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களின் வளர்ச்சிக்கு ஆர்தர் சி கிளார்க் அவர்களின் பங்களிப்பு சிறப்பாகச் சுட்டிக்காட்டப்படத்தக்கது. அறிவியற் பட்டதாரியான கிளார்க் அவர்கள் பிரித்தானி ஊடுகோள் கழகத்தின் உறுப்பினராக இருந்து கோள்கள் பற்றிய விருப்புடை ஆய்வுகளில் ஈடுபட்ட அனுபவமும், வான்படையில் ராடர் இயக்குனராகவும் போதனாசிரியராகவும் இருந்து பெற்ற அனுபவமும் வான்வெளிப் புனையங்களை உருவாக்குதற்குரிய வளமான முன்னறிகைகளாக அமைந்தன. உலகப்புகழ்பெற்ற பின்வரும் அறிவியல் நாவல்களை அவர் எழுதினார்.

(1) வானத்தின் தீவுகள் *(1952)*

(2) புவி வெளிச்சம் *(1955)*

(3) சந்திரத் தூசின் வீழ்ச்சி *(1961)*

(4) சுவர்க்கத்தின் ஊற்றுப்பெருக்கு *(1999)*

கிளார்க் எழுதிய ஒடிசி இரண்டு (1982) என்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட திரைப்படம் கலை நிலையிலும் வசூல் நிலையிலும் உச்சங்களை எட்டியது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகியவற்றின் வளர்ச்சி மனித ஆற்றலின் நீட்சியாகும். ஆகவே மனிதரையும் மனித இருப்பைத் தீர்மானிக்கும் சமூகத்தையும் விட்டு அறிவியலையோ, தொழில்நுட்பவியலையோ தனித்த ஒரு செயற்பாடாகவோ அல்லது அன்னியமாகிய செயற்பாடாகவோ கொள்ளமுடியாது.

பெரும் முதலாளிய நிறுவனங்கள் அறிவியலையும், தொழில்நுட்பவியலையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் ஒழுங்கமைத்து பரந்த அளவு பறிப்பையும் சுரண்டலையும் மேற்கொண்டு வருதலை மறந்துவிட முடியாது. இந்நிலையில் இருமைப்பாங்கான அல்லது முரண்பாடான சிந்தனைகளை அடியொற்றிய அறிவியற் புனைகதையாக்கங்கள் உருவாக்கப்படுகின்றன. அதாவது சமூகம் பற்றிய உணர்வை மழுங்கடிப்பதற்கான ஆக்கங்கள் ஒருபுறமும் சமூகச் சிந்தனைகளை மேலும் கூர்மைப்படுத்துவதற்கான தெறிப்புக்களை உருவாக்கவல்ல ஆக்கங்கள் மறுபுறமான எழுச்சிகள் தோற்றம் பெறத் தொடங்கியுள்ளன.

குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அறிவியற்புனைவு நாவலோ சிறுகதையோ தமிழ்மொழியில் ஆக்கம் பெறவில்லை என்பது புனைகதைத் துறையில் பின்தங்கிய நிலையை அல்லது பிரச்சினைக்குரிய நிலையையே எடுத்துக்காட்டுகின்றது.

சுஜாதாவின் சொர்க்கத்தீவு தமிழில் உருவான முதல் அறிவியல் நாவலாகக் கொள்ளப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து மேலும் பல அறிவியல் நாவல்களை அவர் வெளியிட்டார். அவர் அடிச்சுவட்டில் சஞ்சீவன், கல்வி கோபாலகிருஷ்ணன், இரா.மணிகண்டன், கே.என். இராமச்சந்திரன் முதலியோர் அறிவியல் சார்ந்த புனைவுகளில் ஈடுபட்டனர்.

அறிவியலை உயர்நிலைகளிலே கற்றுத்தேர்ந்த புனைகதையாளர்கள் தமிழில் காணப்படுகின்றனராயினும் பெரும் அறிவியற் புனையங்களை மேற்கொள்ளாதிருத்தல் புனைகதையை மிகக் குறுகிய ஒற்றைப் பரிமாணத்திலே நோக்கியமையின் விளைவாகக் கருதலாம். புனைகதையை ஆய்வுக்கு உட்படுத்திய திறனாய்வாளரும் உலக இலக்கியப் பரப்பில் மேலோங்கி நிற்கும் இவ்வடிவம் பற்றி மௌனித்து நின்றமையும் வியப்பைத் தருகின்றது. இத்துறை-

யில் ஓரளவாயினும் கால்பதித்தவராக சுஜாதாவைக் குறிப்பிடலாம்.

"ஆங்கிலத்தின் சயன்ஸ் பிக்ஷன் எழுதுவது தனி இலக்கிய வகையாக வளர்ந்துள்ளது" என்ற குறிப்பிடும் சுஜாத்தா கணினிப் பொறியியலாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கினார். கணினி என்ற சொல்லையும் அவரே பயன்படுத்தியதாகச் சொல்லப்படுகின்றது. கணினி பற்றியும் அதன் பயன்பாடு பற்றியும் தமிழிலே பல கட்டுரைகளை அவர் எழுதினார் சுமார் நூறுக்கு மேற்பட்ட நாவல்களையும் இருநூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும் அவர் எழுதினார். அவரிடத்திருந்த கணினி அறிவின் செல்வாக்கு புனைகதை ஆக்கக் கட்டமைப்பிலும், திருப்பங்களிலும், பாத்திர இடைவினைகளிலும் பெரும் செல்வாக்கினை ஏற்படுத்தின. ஆயினும், அறிவியற் பின்புலமும் ஆக்கத்திறனும் மிக்க அவரால் உலக தரத்தோடு நிமிர்ந்து நிற்கக் கூடிய ஒரு அறிவியல் நாவலை உருவாக்க முடியாமற் போனமை ஆழ்ந்து நோக்கப்பட வேண்டிய குறிப்பாகவுள்ளது. தமிழகத்தின் மாமூலான எழுத்தாக்க நியமங்களின் வலைப்பின்னல் அவரைக் கட்டுப்படுத்தியிருக்கலாம்.


இலங்கையில் அறிவியல் விந்தைகளை அடிப்படையாகக் கொண்ட கவிதை ஆக்கங்களை இ.முருகையன் மற்றும் இ.சிவானந்தன் ஆகியோர் மேற்கொண்டனர். நந்தி, கோகிலா மகேந்திரன், சாந்தன், சுதாராஜ் முதலியோரின் புனைவுகளில் அறிவியலின் செல்வாக்குகள் இழையோடி நின்றாலும், அறிவியல் நாவல் என்ற பெரும் பரப்பை நோக்கி அவர்களால் நகர முடியவில்லை. எமது திறனாய்வு மரபிற் காணப்பெற்ற இடைவெளியும் இதற்குக் காரணமாகும். திறனாய்வாளர் இத்துறையின் முக்கியத்துவம் பற்றிய வெளிச்சத்தைக் காட்டவில்லை. மறுபுறம் சோசலிச யதார்த்தம் என்பதை ஒற்றைப் பரிமாணத்தில் நோக்கியமையும் இந்த இடைவெளியை ஏற்படுத்தியது.

உலகமயமாக்கலின் சமகால விளைவுகள் அறிவியற் கல்விக்கும், அறிவியற் புனையங்களுக்கும் விசையூட்டி வருகின்றன. பள்ளிக்கலைத திட்டத்தில் அறிவியலும், கணிதமும் முக்கிய பாடங்களாகச் சேர்க்கப்பட்டு வருகின்றன. அறிவியலை மக்கள் மயப்படுத்தும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான "அறிவியற் பரவல்" நிகழும்வேளை அறிவியற் புனைவுகள் மேலும் எழுச்சிகொள்ளும் நிலை வளர்ச்சியடைகின்றது. அந்நிலையில் அறிவியலின் பரவலுக்கும் தனிச்சொத்துரிமையின் இலாபநோக்கினுக்குமுள்ள முரண்பாடுகளை ஆழ்ந்து நோக்க வேண்டியுள்ளது.

★★★

09

நகைச்சுவைப் புனையங்கள்



சிரிப்பு என்ற தெறிவினைப் படுத்தலுடன் இணைந்த வகையில் அறிகைச் செயற்பாடுகளை நகைச்சுவை தழுவிய புனையங்கள் உருவாக்குகின்றன. உள நெருக்குவாரங்களை விடுவிக்க வல்ல தூண்டியாக இருத்தல் நகைச்சுவைக்குரிய சிறப்புப் பண்பு. உடல் நிலையிலும் உள நிலையிலும் அது துலங்கல்களை வருவிக்கின்றது. உடற்கூற்று நிலையில் நகைச்சுவையுடன் இணைந்த செயற்பாடாகிய சிரித்தலின் உடற்கூறுகளுள் ஒன்றாக வன்னெழுச்சி *(Aggression)* அமைந்துள்ளதாக உளவியலாளர் குறிப்பிடுவர். உடலில் எழும் அருட்சியும், குருதிச்சுற்றோட்ட விரைவும், கண்களில் நீர்துளித்தலும் வன்னெழுச்சியின் இயல்புகளாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. வன்னெழுச்சி நிகழும் வேளை அது உள நெருக்குவாரங்களையும் தணித்துவிட உதவுதல் ஒருவித முரணுரை என்றும் குறிப்பிடப்படுகின்றது.

சமூக இருப்பிலிருந்தும், இருப்பின்வழி எழும் இடைவினைகளில் இருந்தும் நகைச்சுவை முகிழ்தெழுவதால் தொன்மையான நாட்டார் இலக்கியங்களிலும் தொல்சீர் இலக்கிய ஆக்கங்களிலும் அது இடம்பெறத் தொடங்கிவிட்டது. தருக்க நிலையில் நகைச்சுவை தொடர்பான பின்வரும் கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

(1) மேலாதிக்கக் கோட்பாடுகள்

(2) இணைப்புப் பிறழ்வுக் கோட்பாடுகள்

(3) நெருக்குவார விடுவிப்புக் கோட்பாடுகள்.

(1) தம்மை உயர்வாகவும் ஏனையோரைத் தாழ்வாகவும் பல நிலைகளிலே கருதும் பொழுது நகைச்சுவை பிறப்பதாக மேலாதிக்கக் கோட்பாடுகள் விளக்குகின்றன. எடுத்துக்காட்டாக சேற்றுநிலத்தில் சறுக்கி வீழ்பவனைக் கண்டு விழாதவன் சிரித்துக்கொள்கிறான். ஒருவித மேலாதிக்க எண்ணம் நகைச்சுவையின் ஆழ்ந்த தளத்தில் நிற்றலை இக்கோட்பாடு விளக்குகின்றது. இக்கோட்பாட்டை தோமஸ்கொப்ஸ் (1588-1679) தொடக்கி வைத்தார்.

(2) தாழ்வுநிலை நோக்கிலிருந்து இணைப்புப் பிறழ்வுக் கோட்பாடுகள் (Incongruity Theories) வேறுபட்டு நிற்கின்றன. இரண்டு பண்புக் கூறுகளின் முரண் நிலைகளிலிருந்தும் அவை இணைவதால் உருவாகும் நிறைவிலிருந்தும் நகைச்சுவை எழுவதாக இக்கோட்பாட்டாளர் விளக்குவர். எதிர்பார்ப்பு மனமுறிவைத் தோற்றுவிக்கும் இணைப்புப் பிறழ்வை அடியொற்றி நகைச்சுவை தோற்றம் பெறுவதாக இமானுவல் கான்ற் (1724-1804) ஒரு சமயம் குறிப்பிட்டார். இக்கொள்கையை விளக்குவோர் "பொருத்தமானவற்றில் உள்ளடக்கிய பொருத்தமற்றவைகளே" நகைச்சுவையைத் தோற்றுவிப்பதாகக் குறிப்பிடுவர். நகைச்சுவையாக்கங்கள் சில சமயங்களில் அதீத பழைமைத் தழுவியதாகவும் சிலவேளைகளில் அதீத முற்போக்குத் தீவிரத் தன்மை கொண்டவையாயும் அமைந்து விடுகின்றன.

(3) உளவியல் நிலையில் நகைச்சுவை விளக்குவோர் அது மனத்தை நெருக்குவாரங்களில் இருந்தும் அழுத்தங்களில் இருந்தும் தற்காலிகமாக விடுவித்துவிடும் செயற்பாடு எனக் குறிப்பிடுகின்றனர். ஆழ்மனத்தின் அழுத்தங்களை வெளிவரவிடாது அமைந்த தணிக்கைச் சுவரை அது இடித்து விடுகின்றதென உளப்பகுப்பு உளவியலாளர் குறிப்பிடுவர்.

இமானுவெல் கான்ட் இது பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "மன இறுக்கம் நிரம்பிய எதிர்பார்ப்பு சடுதியாக ஒன்றும் இல்லாமை நோக்கி நிலைமாற்றம் பெறுதலே சிரிப்பு"

மெய்யியலாளர் மட்டுமன்றி மானிடவியலாளரும் சிரிப்பின் தளங்களை ஆராய்ந்துள்ளனர். ஆபிரிக்காவின் காலகரிப் பாலைவ-

னத்தின் தென்மேற்குப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் தொல்குடியினராக சான் *(The San)* மக்கள் விளங்குகின்றனர். மார்சல் தோமஸ் என்ற ஆய்வாளர் தாம் எழுதிய "வீடற்ற மக்கள்" *(1959)* என்ற நூலில் அவர்களிடத்தே சிரிப்பு நிகழும் சந்தர்ப்பங்களை விரிவாக ஆராய்ந்துள்ளார். அடிபட்ட விலங்கு தனது நோவை வெளிப்படுத்தலை மறைத்து தனது உடல் அசைவுகளை வெளிப்படுத்தியமை அந்தத் தொல்குடியினருக்கு சிரிப்பைத் தோற்றுவித்தது. நோவையும் துன்பத்தையும் மறைக்கப்படுதலில் இருந்து நகைச்சுவை தோற்றம் பெறுதல் தொல்குடியினரது அனுபவமாயிற்று. அதே கருத்து தொன்மையான கிரேக்கர்களிடத்தும் காணப்பெற்றது.

அருவருப்பிலிருந்தும் நிறைவற்ற முடமாகிய நிலையிலிருந்தும் சிரிப்பு தோற்றம் பெறுவதாக அரிஸ்ரோட்டில் குறிப்பிட்டார். பின்வந்த மெய்யியலாளர் வியப்பிலிருந்தும் சிரிப்பு தோற்றம் பெறலாம் எனவும் விளக்கினர்.

"எதிர் சமூகவியல்பு கொண்ட மனிதரைத் திருத்தும் வகையிலே சமூகம் மேற்கொள்ளும் தண்டனையே சிரிப்பு" என்று ஆய்வாளர் பேர்க்சன் ஒருசமயம் குறிப்பிட்டார். சூழ்ந்திருப்போரைத் திருத்தி எடுப்பதற்குரிய கருவியே சிரிப்பு என்ற கருத்தும் நெடிது நிலவி வருகின்றது.

சிரிப்பின் பொழுது தருக்க உணர்வும் காரணங் காணலும், அறக் கருத்துக்களும் பின்தள்ளப்பட்டுவிடுகின்றன என்றும், நேர் மனவெழுச்சியின் வெளிப்பாடே மேலோங்குகின்றது என்றும் உளவியலாளர் குறிப்பிடுவர். அறிகை நிலையிலிருந்து சிந்தனை நிலையிலிருந்தும் சிரிப்புத் தோற்றம் பெறுகின்றது என்றும் சிரிப்பு ஆரம்பித்ததும் அவை மறைந்து விடுகின்றன என்றும் கருதப்படுகின்றது. இவ்வாறாகப் பல பரிமாணங்கள் கொண்ட நகைச்சுவையானது கலை இலக்கியப் புனைவுகளின் தவிர்க்கவியலாப் பரிமாணமாகி விடுகின்றது. நடப்பியலே நகைப்பின் தளமாகவும் அமைகின்றது. கலை இலக்கிய ஆக்கங்களின் தளமாகவும் அமைகின்றது.

சொல்வழியானவை, உரையாடல் வகையானவை, பாத்திர வகையானவை, நிகழ்ச்சிகள் வழியானவை, நூலாசிரியர் கூற்று வாயிலானவை என்ற வகைகளிலே புனைகதைகளில் நகைச்சுவையாக்கம் இடம்பெறுகின்றது. உடன் எழும் நகைச்சுவை மற்றும் பராமரிக்கத்தக்க நகைச்சுவை *(Sustained Humour)* என்ற இருநிலைகளிலே நாவல்களில் நகைச்சுவையாக்கம் இடம்பெறுகின்றது.

ஒழுங்கமைந்த முறையிலே நகைச்சுவைப் பரிமாணங்களைக் கட்டமைத்துக் கொண்டு வந்த இறுதியில் உச்ச நகைச்சுவையாக்கத்திலே இடம்பெறும் பொதுவான செயற்பாடாகும். அதாவது, நகைச்சுவை சார்ந்த ஒரு விளைவை மட்டும் உருவாக்காது தொடர்ச்சியான பல சிறிய சிறிய உச்சங்களை உருவாக்குதல் பராமரிக்கத்தக்க நகைச்சுவையக்கத்தின் கலையாக்க நுட்பவியலாக அமைகின்றது. பிக்கார்சே நாவல்களின் *(Picaresque Novels)* இத்தகைய பண்பே பெருமளவிற் காணப்படுகின்றது.

தொன்மக் கதைகளிலே "ஒட்டு வேலைகளை" அடியொற்றிய நகைச்சுவையாக்க நுண்ணுபாயங்களும் மேற்கொள்ளப்பட்டன. மனிதரையும் விலங்குகளையும் இணைத்து ஒட்டி நகைச்சுவையுருவாக்கும் தொன்ம மரபுகளை அடியொற்றியே வால்ட் டிஸ்னியின் புனைவுகள் அமைந்தன. விலங்கு உருவத்தை இழக்காத மனித இயல்புகள் வாயிலாக அவரது நகைச்சுவைக் கலைப்படைப்புக்கள் உருவாக்கம் பெற்றன. மனிதத் தலையோடு எலியும், குதிரையும், பன்றியும் என்றவாறு அவர், உருவாக்கிய படைப்புக்களின் வேர்கள் தொன்மங்களிலே பரவி நின்றன.

ஆள்மாறாட்ட வகையாலும், சொல்சார்ந்த திரிபுக் காட்சிகளை உருவாக்குதல் வாயிலாகவும் நகைச்சுவையை ஏற்படுத்தும் முயற்சிகள் தொன்மையான இலக்கியங்களிற் காணப்படுகின்றன. சமகாலப் படைப்புக்களிலும் அவை இடம்பெறுகின்றன. பொருத்தமற்ற பழக்கவழக்கங்களினால் நகைச்சுவையேற்றம் செய்யும் தொன்மையான நுட்பவியல் இன்றும் வழக்கில் உள்ளது.

சமூகத்தில் நிகழ்ந்த தனிச்சொத்துரிமையின் வளர்ச்சி நகைச்சுவை ஆக்கங்களிலும் செல்வாக்குகளை ஏற்படுத்தலாயிற்று. மனித உருவங்களைத் திரிபுபடுத்தி எழுதியும் வரைந்தும் நகைச்சுவை ஆக்கும் முயற்சிகளுள் மேற்கொள்ளப்படலாயின. எதிர்மானிடப்படுத்தலுக்கு உட்பட்ட அத்தகையப் புனைவுகளை ஆய்வாளர் துன்பியல் நோக்கிலே பார்த்தனரேயன்றி நகைச்சுவை நோக்கிலே தரிசித்துக் கொள்ளவில்லை.

நகைச்சுவைப் புனைவு அதற்கென உரிய நுட்பவியல்களையும் உறுதனித்துவத்தையும் *(Originality)* கொண்டது. அவற்றோடு இணைந்த ஒரு சிறப்பார்ந்த பரிமாணம் மொழிச் சிக்கனமாகும். கட்டுச்செட்டாக நகைச்சுவையைக் கூறுதல் அதன் தரமேம்பாட்டுக்கு அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. விபரித்து வேண்டாத

விளக்கங்களைக் கொடுப்பதைக் காட்டிலும், முற்சுட்டிகளைக் *(Hints)* கொடுத்துப் புரியப்படுத்துதல் சிக்கனமான புனைவின் பிறி-தொரு பரிமாணமாகும். அதிக விபரிப்புக்களை மேற்கொள்ளும் பொழுது அது நகைச்சுவைச் செய்தியில் வேண்டாத தலையீடுகளை ஏற்படுத்திவிடும். நகைச்சுவையை அனுபவிப்பதற்குரிய தூண்டிக-ளாக மட்டும் சொற்கள் இடம்பெற வேண்டுமேயன்றி துலங்கல்க-ளாக மொழி இடம்பெறலாகாது. பிரச்சினை விடுவித்தல் என்ற உளத் தொழிற்பாட்டை உள்ளடக்கிய நகைச்சுவைகளே தரமேம்-பாடு கொண்டவையாகக் கருதப்படுகின்றன. அதாவது நகைச்சுவை-யைக் கண்டுகொள்வதற்குரிய கற்பனை முயற்சித் தூண்டற் புனைவுகளே கலையாக்கத்தைத் தரநிலையில் உயர்த்திவிட-வல்லவை.

அறிவியற் கண்டுபிடிப்புகளின் சிறப்பான பண்புக்கூறு முன்னர் அறிந்திராத ஒன்றை அறிமுகப்படுத்துதலாகும். இக்கருத்து சிறந்த நகைச்சுவைக்கும் பொருந்தும். அதாவது முன்னர் தரிசித்திராத ஒரு நகைச்சுவைச் சித்திரிப்பைத் தருதலே உயர்தர நகைச்சுவையாக்-கத்தின் பரிமாணமாகின்றது.

துன்பியல் எத்துணை ஆழமானதோ அத்துணை வலிமையும் ஆழமும் கொண்டதாக நகைச்சுவை அமைவதைப் பலர் அறிந்து-கொள்ளத் தவறி விடுகின்றனர். ஒருவரைத் துன்பத்துக்கு உள்ளாக்கு-தல் எளிதென்றும் (ஒரு சிறிய ஊசியே ஒருவரைத் துன்பத்துக்கு உள்ளாக்கப் போதுமானது) ஆனால் ஒருவரிடத்து மகிழ்ச்சியை உண்டாக்குதல் கடினமானது என்றும் உளவியலிலே பொதுவாகக் கருதப்படுகின்றது.

நகைச்சுவைப் புனையங்கள் தமிழர் கிராமிய மரபில் நெடிது நிலவி வந்துள்ளன. குறிப்பிட்ட புலங்களில் வாழும் மக்களின் வாழ்-நிலை அனுபவங்களை அடியொற்றி அவை முகிழ்த்தெழுந்தன. யாழ்ப்பாணத்துக் கிராமிய மரபில் அவை "ஆள் எழுப்பிக் கதைகள்" என அழைக்கப்பட்டன. தென்இந்திய மரபில் தென்னாலி இராமன் கதைகள் இவ்வகையில் சிறப்புப் பெற்றிருந்தன.

அச்சுப் பொறிப் புரட்சியோடும், தமிழகத்து அனுபவங்களோ-டும் இணைந்த வகையில் "பரமார்த்தகுரு கதைகள்" பரவலாக்கம் பெறலாயின. ஒருவகையில் மதம் பரப்பலோடு இணைந்த நகைச்-சுவை அனுபவங்களோடு அவை இணைந்திருந்தன.

மயூரம் வேதநாயகம் அவர்களும் தமது எழுத்தாக்கங்களோடு நகைச்சுவை உள்ளீடுகளையும் இணைத்துக் கொண்டார். அந்த மரபு தமிழகத்தில் தொடர்ந்த வண்ணமிருந்தது. ஆங்கிலக் கல்வியின் செல்வாக்கு காரணமாக மேலைப்புல நகைச்சுவையாக்கங்களின் செல்வாக்குகள் தமிழகத்திலே உள்நுழைந்தன. சிறப்பாக பேர்னாட் ஷாவின் நகைச்சுவையாக்கங்கள் குறிப்பிடத்தக்க செல்வாக்குகளை ஏற்படுத்தின.

கல்கி அவர்களின் எழுத்தாக்க எழுச்சியின் ஒரு பரிமாணமாக நகைச்சுவையாக்கங்கள் அமைந்தன. ஆனந்த விகடன் வார இதழ் தமிழ் வாசகரிடத்தே விரைந்து பரவியதற்கு அதனால் முன்னெடுக்கப்பட்ட நகைச்சுவையாக்கங்களே விசை கொடுத்தன. இன்றும் தமிழகத்து வார இதழ்களின் விற்பனை எழுச்சிக்கு நகைச்சுவையாக்கங்களே கைகொடுக்கின்றன.

இலங்கையின் மண்வாசனை தழுவிய நகைச்சுவைப் புனைவுகளை வளர்த்தெடுப்பதில் "சிரித்திரன்" சிவஞான சுந்தரத்தின் பங்கு தனித்துவம்மிக்கது. "சுவைத்திரள்" சஞ்சிகையும் இத்துறையில் பங்களிப்பைச் செய்து வருகின்றது. நகைச்சுவையை அடிப்படையாகக் கொண்டு இணுவிலில் இருந்து வெளிவந்த "கலகலப்பு" இதழும் இந்நாட்டின் மண்வாசனையை அடியொற்றிய புனைவுகளைத் தந்தது.

தமிழகத்தின் திரைப்படத்துறையின் வளர்ச்சிக்கு அன்று தொட்டு இன்றுவரை நகைச்சுவையே கைகொடுத்து வருகின்றது. புகழ்பூத்த தமிழ்ப் பேச்சாளர்களும், நகைச்சுவையை நம்பியே தொழிற்படுகின்றனர். பட்டிமன்றங்களின் கருப்பொருளைக் காட்டிலும் நகைச்சுவையின் மேலோங்கலே எழுச்சிக் கொண்டுள்ளது.

நகைச்சுவையை அடியொற்றிய சிறுகதைகள் மற்றும் நாவல்கள் தமிழில் நீட்சிக்கொண்டன. அவை பெரும்பாலும் "கிண்டல்" வகையான நகைச் சுவைகளாக அமைந்தனவேயன்றி "ஆழ்ந்த பராமரிப்பு" ஆக்கங்களாகப் பெருமளவில் இடம்பெறவில்லை.

நாவலாசிரியர் செங்கை ஆழியான் மற்றும் ரி.பாக்கியநாயகம் முதலியோர் இத்துறையில் ஈடுபாடு கொள்ளலாயினர். செங்கை ஆழியானின் "ஆச்சிபயணம் போகிறாள்" என்பது ஆச்சியின் அறியாமையும், தலைமுறை இடைவெளியும் அடிப்படையாகக் கொண்ட ஆக்கமாக அமைந்தது.


ஒப்பியல் வழிநோக்குவதானால் தமிழ் நாவலாசிரியர்களால் உலக தரத்துக்குரிய ஒரு நகைச்சுவை நாவலைத் தரமுடியாமலிருத்தல் மீளாய்வுக்குரியது.

இருபொருள்தரும் சிலேடை வாயிலான நகைச்சுவையாக்கம் தமிழ் மரபிலே நீண்டகாலமாக நீடித்து வந்துள்ளது. அவை எழுத்தறிவுடையோருக்கு மட்டும் உரியவையாக அமைந்திருந்தன. அவற்றுக்கு மாறுபட்ட முறையில் வாய்மொழி வழிக்கிராமிய இலக்கிய ஆக்கங்கள் அமைந்தன. அவை "மொழி செயல்வழி நுட்பங்கள்" வழியாகவே நகைச்சுவைத் தூண்டின் அவற்றின் தொடர்ச்சிகள் கிராமியக் கூத்துக்களில் "உடல் மொழிவழியான" நகைச்சுவை ஆக்கங்களாக வெளிவந்தன.

★★★

10

புவியியல் மற்றும் பண்பாட்டு அலகுகள் சார்ந்த புனைவுகள்



தமிழ் நாவல்களை ஆராய்ந்தோர் புவியியல் மற்றும் பண்பாட்டு அலகுகள் தழுவிய ஆக்கங்களை, "வட்டார நாவல்கள்" என வரையறை செய்தனர். ஒரு பெரும் பண்பாட்டிலே சிலவகைகளிலே தனித்துவமான பண்புகளை உள்ளடக்கிய சிறிய அலகுகள் இடம்பெறுதல் உண்டு. அவை பெரும் பண்பாட்டுப் பிணைப்பின் ஒன்றிணைந்த இயக்கத்துக்கு வளமானதாகவும் இயைபானதாகவும் இயங்கி பெரும்பண்பாட்டு அடையாளத்துக்குத் துணையாக இருக்கும். புவியியல் சார்ந்த இட நிலைய அமைப்பும் சில வகையான தனித்துவங்களுக்குக் கைகொடுத்த வண்ணமிருக்கும் இவையனைத்தையும் ஒருங்கிணைக்கும் பலம் மிக்க விசையாக மொழி அமைகின்றது. வட்டார வழக்குகள் மொழியின் செழுமைக்கும் ஒன்றிணைப் புக்கும் வலுவூட்டுகின்றன.

1966ஆம் ஆண்டிலே தமிழக்தில் நிகழ்ந்த எழுத்தாளர் சங்க விழாவிலே வட்டாரம் சார்ந்த புனைவுகளின் முக்கியத்துவம் பற்றி கு.அழகிரிசாமி அவர்கள் ஆற்றிய உரை இத்துறையில் மேலும் சிந்தனை அருட்டல்களைத் தமிழகத்தில் ஏற்படுத்தியது. பொதுவாக எல்லா எழுத்தாளர்களும் குறிப்பிட்ட புலங்களில் வாழ்வோரின் உணர்வுகளைத்

தெறித்துக்காட்டுவதாக அமையுமாயினும், அத்தெறிப்பின் பலமிக்க ஆழ்விசையாக "இருப்பு" *(Existence)* அமைந்து விடுகின்றது. பல பரிமாணங்களை உள்ளடக்கிய பரந்த பொருளாதார இருப்பும் அதனை அடியொற்றிய சமூக இருப்புமே வட்டார வேறுபாடுகளை ஒன்றிணைக்கும் பலம்மிக்க தளமாக அமைகின்றது.

மொழி, இன, மத வேறுபாடுகளைக் கடந்த பொருளாக இலக்கியம் இருப்பதனால், வட்டார இலக்கியம் என்ற எண்ணக்கரு போலியானது என்ற கருத்து "பிரபஞ்சன்" அவர்களால் முன்வைக்கப்பட்டது.

உணர்வுகள் ஒன்றிணைந்தவை, பரந்தவை ஆனால் அவற்றைச் சித்திரிக்கும் களம் அல்லது இடநிலையமே வேறுபாடு கொண்டது என்ற நிலையில் வட்டார இலக்கியத்தை முன்னிறுத்தும், கருத்து வினைப்பாடுகள் முக்கியத்துவம் பெறலாயின. உணர்வு நிலைப்பட்ட ஒன்றிணைப்புத்தான் இலக்கியத்தின் அகிலப் பண்புக்குரிய தளமாக அமைகின்றது. அந்நிலையில் வட்டாரம் என்ற சட்டகம் பின்னோக்கித் தள்ளப்பட்டு விடுகின்றது. மார்க்சிய நோக்கில் ஒடுக்கப்பட்டோரின் உணர்வுகள் அகிலப் பண்புடைய தோற்றப்பாட்டினையும், மண்வாசனை என்ற எண்ணக்கரு அந்த உணர்வுகளுக்கு அழகும் வலுவும் ஊட்டும் விசைகொள் பாங்கினையும் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

கதைப்புனைவின் ஒப்பனை அல்லது உறுகாட்சி *(Makeup)* பிரதேசச் சூழலோடு தொடர்புடையதாக அமையும். பாத்திரவார்ப்பின் மீதும், பாத்திர மொழியின் மீதும் பிரதேச இயல்பு நேரடியான செல்வாக்கை ஏற்படுத்தவல்லது. நாவலின் வினைப்பாடு சுட்டிக்காட்டப்படும் பிரதேசத்தளத்தோடு *(Locale)* நேரடி இணைப்புக் கொண்டது. நாவலைப் படிப்போரின் மனக் கற்பனைக்குரிய இயங்கு தளத்தைக் கதை நிகழும் புவியியற்புலம் உருவாக்கித் தரும். யாதார்த்தம் அல்லது நடப்பியலின் உருவாக்கத்தை புவியியற் களம் அல்லது அலகு *(Unit)* வலுவூட்டிய வண்ணமிருக்கும்.

1930ஆம் ஆண்டளவில் "பிரதேச நாவல்" *(Regional Novel)* அல்லது "வட்டார நாவல்" என்ற வடிவம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. வால்போல் என்பார் எழுதிய நாவல்களை அடியொற்றி அந்த எண்ணக்கரு அங்கீகாரத்துக்கு உள்ளாக்கப்பட்டது. ஆங்கில நாவல் மரபில் வட்டார நாவல் வடிவத்துக்கு மேலும் வலுவூட்டும் வகையில் சீலா கயி சிமித்தினுடைய படைப்புக்கள் அமைந்தன. சசெக்ஸ்

பிரதேசத்தின் மண்வாசனை அவரது நாவல்களில் எழுச்சி கொண்டது.

வட்டார நாவல் என்ற வடிவம் ஆங்கில நாவல் மரபில் மேலும் படிமலர்ச்சி அல்லது பரிணாம வளர்ச்சி கொள்ளலாயிற்று. புதிய நாவல்களை எழுத வேண்டும் என்பதற்காக ஆங்கில நாவலாசிரியரான கிரகாம் கிறீன் புதிய வட்டாரங்களுக்கு அல்லது புலங்களுக்குச் சென்று அங்கே வாழ்ந்து அனுபவித்து வட்டார நாவல்களைப் படைக்கலானார்.

வட்டார நாவல்கள் "பக்க விளைவுகளை"யும் உருவாக்கத் தொடங்கின. அந்நாவல்களைப் படித்தோர் குறிப்பிட்ட பிரதேசங்களுக்குச் சென்று அவற்றை நேரிலே கண்டறிய மேற்கொண்ட முயற்சி பிரித்தானியாவின் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கும் துணை செய்தது. இதற்குரிய ஒப்புமையைத் தமிழகத்திலும் காண முடியும். சமய இலக்கியங்களிலே சித்திரிக்கப்படும் மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலியவற்றை நேரடியாகத் தரிசிக்கும் பொருட்டு, சுற்றுலா (யாத்திரை) செய்யும் மரபு தொடர்ந்த வண்ணமுள்ளது.

வட்டார நாவல்களில் இடம்பெற்ற புனைவுகள் சுற்றுலா வழிகாட்டி நூல்களிலும் மேம்பட்டவையாக, பல்வேறு நுண் விபரங்களை உள்ளடக்கியவையாகக் காணப்பட்டன. ஜேம்ஸ் ஜொயிஸ் என்ற நாவலாசிரியர் மேற்கொண்ட டபிளின் நகரம் பற்றிய புனைவு அந்நகரம் பற்றிய வழிகாட்டி நூல்களைக் *(Guid Books)* காட்டிலும் பல வழிகளிலும் மேம்பாடு கொண்டதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பறிப்பும் சுரண்டலும் மிக்க சமுதாய இயல்பின் மீது வெறுப்புக் கொண்ட நாவலாசிரியர்கள் பறிப்பை மேற்கொண்டோர் மீது வெறுப்பைக் காட்டாது வாழ்விடங்கள் அல்லது பிரதேசங்கள் மீது வெறுப்பை வெளிப்படுத்தி நாவல்களைப் புனைந்தனர். எச்.ஜி. வெலஸ் மற்றும் ஹக்ஸ்லி முதலானோர் கற்பனா இடங்களைத் தமது எழுத்தாளர்களிலே சித்திரித்தனர். ஜே.ஆர்.ஆர்.ரொல்கின் என்பார் வாழும் உலகோடு வெறுப்புக் கொண்டு "மாற்றுலகம்" *(Alternative World)* என்ற சித்திரிப்பை மேற்கொண்டார்.

புகைதை ஒன்று இருக்குமானால் அதை உரைப்பவர் *(Narrator)* என்று ஒருவர் இருந்தே ஆகவேண்டும். கதையோட்டத்தின் நம்பிக்கையுள்ள உற்று நோக்குனராக நின்று கதை சொல்லல் மற்றும் நம்பிக்கையற்ற *(Unreliable)* உற்று நோக்குனராக நின்று கதை

சொல்லல் என்ற இரு நுட்பங்கள் உரைப்பு நிலையிலே பயன்படுத்தப்படுகின்றன. மேற்குறித்த இரு நிலைகளிலும் வட்டார இயல்புகளை நன்கு வெளிப்படுத்தலாம். ஆனால் நம்பிக்கையற்ற உற்றுநோக்கல் நிலையிலே கதை வளர்ச்சியும் கதையின் இயங்கு நிலைப்பரப்பும் நூலாசிரியர் கூறுவதைக் காட்டிலும் கூடிய விளக்கத்தைப் படிப்போருக்கு ஏற்படுத்தும் விசையுடன் புனைவு நுட்பங்கள் இடம்பெற்றிருக்கும்.

ஆங்கில நாவல் மரபிலே கிராமிய இயல்புகளைச் சுட்டும் நாவல்கள் *(Pastoral)* குறித்த பிரதேசத்தின் மீது ஆழ்ந்த உறுபற்றை வெளிப்படுத்தும் வகையிலும் உளக்கவர்ச்சிப் பண்பு *(Romanticism)* மேலோங்கும் வகையிலும் ஆக்கம்பெற்றன. வட்டார நாவல்களின் வளர்ச்சிக்கு இவ்வகைக் கிராமிய நாவல்களும் பொருத்தமான உந்து விசைகளை வழங்கின. ஆனால் இவ்வகை நாவல்கள் கிராமத்து மக்களின் அப்பாவித் தனத்தை மேம்படுத்திக் காட்டினவேயன்றி, கிராமத்து நிலமற்ற மற்றும் சொத்துக்கள் அற்ற குடியானவர்களின் ஏக்கங்களைக் காட்டத் தவறிவிட்டன. மேலும் நகரத்து நெருக்கீடுகளிலிருந்து தப்பும் உபாயமாகக் கிராமிய வாழ்வு சித்திரிக்கப்பட்டதேயன்றி அதற்கு மேலும் நகர முடியாத புள்ளிகளில் அந்நாவல்கள் நின்று விடுகின்றன.

உலகப் புவியியல் அறிவில் ஏற்பட்ட வளர்ச்சிகளும் "வட்டாரம்" பற்றிய எண்ணக்கருவுக்கு வலுவூட்டின. சிறப்பாக இத்துறையிலே பங்களிப்புச் செய்த உளவியலாளருள் பேராசிரியர் கார்ல் றிட்டர் *(Karl Ritter)* சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். வட்டாரங்களை அல்லது பிரதேசங்களை ஒப்பு நிலையில் நோக்கும் ஆய்வுகளை அவர் முன்னெடுத்தார். பிரதேசங்களுக்கிடையிலான "உள்ளார்ந்த தொடர்புகளின் இணைப்பு" அவர்களால் வலியுறுத்தப்பட்டது. மேலும் ஒவ்வொரு பிரதேசங்களுக்குமுரிய பொருண்மை கொண்ட தனித்துவத்தை கம்போல்ட் *(Humboldt)* வலியுறுத்தினார். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பிரதேச நிலைப்பட்ட ஆய்வுகளும் பிரதேசத் திட்டமிடற் செயற்பாடுகளும் மேலும் எழுச்சிகொள்ளத் தொடங்கின. அவை நாவல் ஆக்கங்களிலே செல்வாக்குகளை ஏற்படுத்தின.

நாடாளுமன்ற முறைமையை அடியொற்றிய ஆட்சி முறையின் வளர்ச்சி, வட்டாரம் அல்லது பிரதேசங்களின் முக்கியத்துவத்தைக் கூர்ம்மை அடையச் செய்தது. பிரதேச வாரியான பிரதிநிதித்துவத்தை

அடிப்படையாகக் கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்யப்படும் பொழுது, பிரதேச உணர்வு அரசியலாக்கப்பட்டது. வாக்குத் திரட்டும் நோக்குடன் "பிரதேச வாதம்" என்ற செயற்பாடு குறுகிய அரசியல் இலாபத்தோடு ஒன்றிணைக்கப்பட்டது. ஆனால் இந்தத் தோற்றப்பாட்டிலிருந்து வட்டார நாவல்கள் என்ற எண்ணக்கரு சிலவழிகளில் வேறுபட்டதாக அமைந்தது. இந்த வேறுபாடுகள் பெரும்பாலான எழுத்தாளர்களது சமூக இருப்பிலிருந்தே மேலெழுகின்றன. நாளாந்தம் பலநிலைகளிலும் பறிப்புக்கு உள்ளாகும் சமூகத் தளத்திலிருந்து பெரும்பாலான எழுத்தாளர்கள் தோற்றம் பெறுவதாலும், நாடாளுமன்ற ஆசனங்களிலிருந்து விலகியோராய் அவர்கள் இருப்பதனாலும் அவர்களின் புலக்காட்சி வேறுபாடு கொண்டதாக இருந்தது.

தமிழ் இலக்கியப் பரப்பில் வட்டாரம் தழுவிய கவிதைப் படைப்பை நாஞ்சில் நாட்டை அடிப்படையாகக் கொண்டு கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை அவர்கள் முன்னெடுத்தார். நாவல் வடிவில் ஆர்.சண்முகசுந்தரம் அவர்கள் கொங்குநாட்டை அடிப்படையாகக் கொண்டு "நாகம்மா"ளைப் புனைந்தார். கி.ராஜநாராயணன், தி.ஜானகிராமன், சின்னப்பாரதி முதலியோர் தாம் வாழ்ந்த புலங்களை அடியொற்றிய பெரும் புனைவுகளை முன்னெடுத்தனர்.

இலங்கையில் வாழ்விடங்களை அல்லது இடநிலையங்களை *(Locations)* அடிப்படையாகக் கொண்ட கவிதையாக்கங்களும் புனைகதைகளும் பரவலாகத் தோற்றம்பெற்றன. பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய "காதலி ஆற்றுப்படை" யாழ்ப்பாணத்து வடமராட்சி வட்டாரத்தின் பல்வேறு இயல்புகளை மானிடவியலும் இலக்கியமும் கலந்த நிலைகளிலே வெளிப்படுத்தியது. அவர் எழுதிய "ஈழத்து வாழ்வும் வளமும்" என்ற நூலிற் கட்டுரை இலக்கியம் தழுவிய வட்டாரச் சித்திரிப்புகள் மேலெழுந்துள்ளன. ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளுள் ஒருவராகிய இலங்கையர்கோனிடத்து யாழ்ப்பாணத்து வலிகாமத்து மண்வாசனை எழுச்சி கொண்டிருந்தது.

நாவல் வடிவிலே குறிப்பிட்டுக் கூறுவதானால் டானியலின் "பஞ்சமர்", செங்கை ஆழியானின் "வாடைக் காற்று", தெளிவத்தை ஜோசப்பின் "காலங்கள் சாவதில்லை", பாலமனோகரனின் "நிலக்கிளி" முதலிய சில எடுத்துக்காட்டுகள் அமைகின்றன.

நடப்பியல் அல்லது யதார்த்த நாவல்களைப் புனையும்பொழுது மண்வாசனையும் வட்டார இயல்புகளும் இயல்பாகவே வெளிவந்த வண்ணமிருக்கும். அந்நிலையில் "வட்டாரம்" என்ற நிலையில் மட்டும் நாவலை அடையாளப்படுத்திவிட முடியாது.

பிரான்சிலே தோற்றம் பெற்ற "எதிர்நாவல் இயக்கம்" *(Anti Novel Movement)* கதை, உரையாடல், மானிடப் பண்புகள், கதை நிகழ்புலம் முதலியவற்றை நிராகரிப்புக்கு உள்ளாக்கியது. நாவலின் வழியாக உருவாக்கப்படும் பாத்திர உருவாக்கமும் தள்ளுபடி செய்யப்பட்டது. பழைமை அல்லது மரபு வழியான புனைவு நுட்பங்கள் அனைத்தும் எதிர்நாவல் இயக்கத்தினரால் தள்ளுபடி செய்யப்பட்டன. பிரதான கதாபாத்திரத்துக்குப் பெயர்சூட்டுதலும் தவிர்த்துக் கொள்ளப்பட்டது. கதாபாத்திரங்களின் வினைப்பாடுகளும் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்பட்டன. தெருவும், தெருவோர வீடுகளும் கட்டங்களும், காதில் விழும் இசை ஒலிப்புக்களும் எழுச்சிபெற்றன. இவ்வாறான எதிர்நாவல் இயக்கம் முதலாளிய சமூகத்திலே வளர்ச்சிபெறத் தொடங்கிய மரபு வழியான நுகர்வுப் பொருட்களைத் தேடலும் நாடலுமாகிய தோற்றப்பாட்டினை நேரடியாகப் பிரதிபலித்தது. இந்த இயக்கம் மேலைப்புலத்து வட்டார நாவல்கள் பற்றிய கண்ணோட்டத்திலும் செல்வாக்குகளை ஏற்படுத்தியது. தமிழ் நாவலாக்கங்களிலும் அதன் செல்வாக்கு ஓரளவு இழையோடியது. ஒருவகையில் சுந்தர ராமசாமியின் புளியமரத்தின் கதையை ஒப்புமையாகக் கூறலாம்.

"அனைத்து நாவல்களும் ஒருவகையில் வட்டார நாவல்களே" என்ற நோக்கு "விரிந்த வட்டார நோக்கை" வலியுறுத்துவதாக அமைகின்றது. ஆனால் வட்டார நாவல்கள் குறித்த புலத்துக்குரிய மொழிக்கட்டுமானத்தையும், சமூக இயல்பையும், புவியியல் மற்றும் பண்பாட்டு நுண்ணலகுகளையும் புலப்படுத்தி நிற்றலை அடிப்படையாகக் கொண்டவை.

★★★

11

புனைவும் எழுநடையும்



புனைவில் ஈடுபாட்டையும், விளைவையும், தாக்கத்தையும் உண்டாக்கும் மொழிக்கட்டமைப்பாக "எழுநடை" *(Style)* விளங்குகின்றது. உரைநடையின் தனித்துவமும், கவிதையின் தனித்துவமும் எழுநடையால் உயிர்ப்பூட்டப்படுகின்றன. புனைவின் பொருளையும், அதனை மொழியாக உருக்கொடுத்தலையும் உள்ளடக்கிய முழுப் பொருளாக எழுநடை அமைகின்றது.

மொழி தொழிற்படும் சமூகக களத்தை நோக்காது, எழுநடையை அன்னியமாகிய மொழிப் பரிமாணத்திலே நோக்குதல் "ஒற்றைப் பரிமாண" ஆய்வு முறையாகிவிடும். மொழியின் பொதுமைப் பாட்டிலிருந்து, தனித்துவமானதாகவும், வேறுபட்டதாகவும், எழுநடை உருவாதல் குறிப்பிடத்தக்கது. அதன் தளம் பொதுவான சமூக அமைப்பின் கட்டமைப்பிலிருந்து மேலெழும் நுண்பாகச் செயல்முறைகளின் மொழி வெளிப்பாடுகளைச் சுமந்ததாகக் காணப்படும். இயற்கை பன்முகப் பண்புகளைத் தாங்கி நிற்றலும், சமூகம் பன்முக முரண்பாடுகளைத் தாங்கி நிற்றலும், மொழி பன்முகப் பண்புகளைத் தாங்கி நிற்றலும் ஒப்புமைக்கு உரியவை.

எழுநடை சமூகத் தொழிற்பாட்டுடன் இணைந்தது. தொடர் பாடலை வளமும் சுவையும்

உள்ளதாக்கும் ஒரு கலை முனைப்பாக அது அமைகின்றது. சொல்வழியான புலக்காட்சிக்கு (Perception)த் தனித்துவமானதும் மேலானதாகவும் அமையும் விசையை வழங்குவதாக எழுநடை அமைவதால் புனைவில் அதன் வகிபங்கு முக்கியமானதாகக் குறிப்பிடப்படுகின்றது. சாதாரண புலக்காட்சியைக் காட்டிலும் மேலான புலக்காட்சியை படிப்போர் உளங்கொள்வதற்கு எழுநடை துணை செய்கின்றது. ஓர் எடுத்துக்காட்டினால் இதனை விளக்கலாம்.

"தென்னை மரம் நிற்கின்றது" என்ற வசனத்தில் தென்னை மரத்துக்குரிய பொதுவான எண்ணக்கருவே கையளிப்புச் செய்யப்படுகின்றது. "தென்னை மரம் தலைவிரிகோலமாக நிற்கின்றது" என்று கூறும்பொழுது முன்னைய வசனத்தின் மட்டுப்பாடுகளைக் கடந்து செல்லும் அல்லது எல்லைகளை மீறிச் செல்லும் புலக்காட்சி உருவாக்கப்படுகின்றது.

ஒரே காட்சியைப் பல கோணங்களிலே பல பரிமாணங்களிலே காண்பதற்குரிய மொழியின் வகிபாகத்தை எழுநடை உருவாக்கிக் கொடுக்கின்றது. வாசகர் கதையை "வாசிப்போராக" மட்டும் தொழிற்படுதல் இல்லை. அவர்கள் குறித்த இலக்கியப் படைப்போடு இடைவினை கொள்வோராயும் இருக்கின்றனர். அவ்வாறான இடைவினை ஆக்கத்துக்குரிய புலக்காட்சி வளப்பாட்டிலே எழுநடையின் பண்பு முக்கியமானதாகும்.

சொற்களின் வரையறை கொண்ட நிலையை, வரையறை கடந்த பெருவெளிக்குத் தள்ளிவிடும் செயலை வாக்கிய அமைப்பும் எழுநடை வடிவங்களும் செய்வதனால் புனைவுக் கோலங்களுக்கு அவை பன்முக வலுவூட்டுகின்றன. சொற்கள் எண்ணக்கருக்களை (Concepts) தாங்கி நிற்கின்றன. அருவ வடிவிலான அல்லது உருவ வடிவிலான பொதுக்கூறுகளை உள்ளடக்கியதாக எண்ணக்கரு அமைகின்றது. ஒருபொருளை இன்னொரு பொருளில் இருந்து பிரித்தறியும் அறிகைத் தளத்தை எண்ணக்கரு உருவாக்கிக் கொடுக்கின்றது. கருத்துக்களின் உளப் பிரதிநிதித்துவப்படுத்தலாகும் எண்ணக்கருக்களின் "எடுத்தாளல்" எழுநடையியல் ஆக்கலிலே சிறப்பிடம் பெறுகின்றது.

எழுநடையை மேலும் நுணுகி ஆராய்வதற்கு எழுநடைப் புள்ளிவிபரவியல் (Stylostatistics) மற்றும் எழுநடைக்கணிகை (Stylometrics) முதலாம் அணுகுமுறைகள் நவீன ஆய்வுகளிலே பயன்படுத்தப்படுகின்றன. சொற்களின் பயன்பாட்டு மீடிறன்களை அடியொற்றிய

புறநிலையான கணிப்பீடுகள் புள்ளிவிபரவியல் நுட்பங்களை அடியொற்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பயன்படுத்தப்படும் சொற்களின் எண்ணிக்கை, ஒரேசொல் எத்தனை தடவை மீள மீளப் பயன்படுத்தப்படுகின்றது. வட்டாரப் பேச்சு மொழியின் பயன்பாட்டின் எண்ணிக்கை முதலியவற்றை புள்ளிவிபரவியல் அடிப்படைகளிலே தொகுத்து விளக்கும் வளர்ச்சி மொழியியலில் இடம்பெற்று வருகின்றது.

புனைகதையாக்கம் மொழிவழியான உறுவளம் *(Facilitation)* செய்தலோடு இணைந்தது. அவ்வாறான உறுவளச் செயற்பாட்டில் தனித்துவமானதும், கவர்ச்சியூட்டக் கூடியதுமான மொழிநடை முக்கியத்துவம் பெறுகின்றது. புனைகதையை வாசிப்போரும் கதை சொல்வோராய் மாறுவதற்குரிய "கட்டுமான நினைவை" *(Constructive Memory)* வளர்ப்பதற்குரிய விசையும் எழுநடையால் வழங்கப்படுகின்றது.

சமூகத்தளம், அறிகைத்தளம், எழுச்சித்தளம் ஆகியவற்றிலிருந்தும் ஆக்க மலர்ச்சியோடு இணைந்தும் எழுநடை தோற்றம் பெறுகின்றது. இவ்வாறான இணைப்புக்கள் எழுநடையை மொழித் தளத்திலிருந்து பிரிந்துசெல்ல முடியாத அமைப்பை ஏற்படுத்தி விடுகின்றது.

தமிழ் மொழியில் செய்யுள் வடிவிலான கதையுரைப்பு முறையும் வசன வழியான கதையுரைப்பு முறையும் நீண்ட வரலாற்றைக் கொண்டவை. உரைநடை வழியான கதையுரைப்பு முறைமை வாய்மொழி தழுவி வளர்ந்து வந்தது. அச்சுப் பொறியின் வளர்ச்சியோடு அச்சு வழியாகக் கதையுரைக்கும் படிமலர்ச்சி நிகழ்ந்தவேளை தோற்றம் பெற்ற எழுநடையை வீரமாமுனிவரின் பரமார்த்தகுரு கதையிலே காணமுடியும். வீரமாமுனிவரின் எழுநடை தனித்துவம் பெறுவதற்கு நாட்டார் எடுத்துரைப்பு முறையே விசையூட்டியது. கிராமிய எடுத்துரைப்பு முறையும் கிறீஸ்தவ மதபோதனை முறையும் ஒன்றிணைந்த தனித்துவம் அவரது எழுநடையிலே காணப்பட்டது.

தாண்டவராய முதலியாரின் புனைவு எழுநடையில் நீதிபதிக்குரிய எடுத்துரைப்பு முறையும் மொழி பெயர்ப்பின்போது மூலமொழி இலக்கு மொழி என்பவற்றுக்கிடையே காணப்படும் இடைவினைப்பாடுகளும் செல்வாக்குகளை ஏற்படுத்தின. 1826ஆம் ஆண்டில் அவர் மராத்திமொழியிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்த பஞ்சதந்திரக் கதைகளிலே காணமுடியும். விநோதரச மஞ்சரியை

எழுதிய வீராசாமி செட்டியாருடைய எழுநடைத் தனித்துவம் பேச்சு மொழிக் கையாளலை அடிப்படையாகக் கொண்டு மேலெழுகின்றது.

கோட்பாட்டு நிலையில் பார்க்கும் பொழுது பாரதியாரின் புனைவு எழுநடையில் உளக்கவர்ச்சியியலின் பண்புகள் மேலோங்கியிருத்தலைக் காணலாம். எளிமை, மனவெழுச்சிகளின் நேரடியான வெளிப்பாடு, பேச்சு வழக்குப் பண்பு, இயற்கை நயப்பு முதலியவை உளக்கவர்ச்சியியலின் நேரடியான தெறிப்புக்களாகவுள்ளன.

வ.வே.சு.ஐயரின் புனைவு எழுநடையின் தனித்துவம், எளிமை, இந்து மரபில் வளர்ச்சியடைந்த எடுத்துரைப்பு முறை, சமஸ்கிருத சொற்களின் எடுத்தாள்கை முதலியவற்றால் ஆக்கம் பெறுகின்றது. சமூக நெருக்குவாரங்களும், அழுத்தங்களும் பரிதவிப்பும் புனைவு எழுநடையில் எத்தகைய தாக்கங்களை விளைவிக்கவல்லவை என்பதை புதுமைப்பித்தன், கு.ப.ரா, ரகுநாதன், ஜெயகாந்தன், சு.சமுத்திரம், பொன்னீலன் முதலியோரது எழுநடையிலே தெளிவாகப் பளிச்சீடு கொள்கின்றன. புதிய தொடர்பாடல் முறைமையின் இயல்பும், புலமை ஆற்றல்களை மக்கள் மயப்படுத்தும் பொழுது எழும் படிமலர்ச்சி வியாபகமும் சுஜாதாவின் எழுநடை ஆக்கத்திலே விசை கொண்டு தொழிற்படுகின்றன. டானியல், தெணியான் முதலியோருடைய புனைவுகளில் இடம்பெறும் எழுநடைத் தனித்துவம் சாதியம் மற்றும் மார்க்சியம் தொடர்பான உரைநடை விசைகளால் உருவாக்கம் பெறுகின்றது. தேசிய இனப்பிரச்சினை தொடர்பான உரையாடல் சமகாலத்து எழுத்தாளர்களின் எழுநடையாக்கத்திலே நேரடியான செல்வாக்கை ஏற்படுத்தி வருகின்றது.

புனைகதைக்கும் எழுநடைக்குமுள்ள தொடர்புகளை ஆராய்தல் எழுநடை தொடர்பான கோட்பாட்டு உருவாக்கத்திலே முக்கியத்துவம் பெறுகின்ற சிறப்பார்ந்த பரிமாணமாகவுள்ளது. சமூகத்திலே இடம்பெறுகின்ற எண்ணிறைந்த வகையான முரண்பாடுகளின் மொழிசார்ந்த தெறிப்பாகவே புனைகதைகள் தோற்றம் பெறுகின்றன. முரண்பாடுகள் அற்ற நிலையிலே எந்த ஒரு புனைகதையும் தோற்றம் பெற முடியாது. முரண்பாடுகள் புனைகதையாக்கத்துக்கு விசைகள் வழங்குதல் போன்று எடுத்துரைப்பு முறைக்கும் எழுநடை ஆக்கத்துக்கும் விசைகளைக் கொடுக்கின்றன. பின்னவீனத்துவவாதிகள் சமூகத்தையும், நூலியத்தையும் *(Text)* பன்முகவியல் நோக்கிலே தரிசிப்பதற்கும் சமூகத்தின் பன்முகமான முரண்பாட்டுக் கோலங்களே உள்ளமைந்த விசைகளாக இருத்தலையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.


பன்முக முரண்பாடுகளின் மொழித் தெறிப்புக்கள் பன்முக ஒட்டுமை *(Hybrid)* வேலைகளுக்கு இட்டுச் செல்கையில் புதிய புதிய எழுநடை வகைகள் தோற்றம் பெறுகின்றன. எழுநடை பற்றிய ஆய்வு புனைகதைகளை விளங்கிக்கொள்வதற்கு மட்டுமன்றி சமூகத்தை விளங்கிக்கொள்வதற்கும் துணை செய்கின்றது. எழுநடைகள் சமூக இயல்பின் குறிகாட்டிகளாகவே அமையும்.

சமூக வழியாக உருவாக்கம் பெறும் "பல்லினத் தொகுப்பின் தனித்துவம்" என்ற வடிவத்தை எழுநடை சூடிக் கொள்கின்றது.

★★★

12

கற்பனையியல்



பிரபஞ்ச பெரு விருந்தில்
ஓயாது அலைந்தும்
இரை கிடைக்காத
காந்தப் பறவையோ கற்பனை

கலை இலக்கிய ஆக்கங்களுக்கு மட்டுமன்றி விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களுக்கும் ஊற்றாக அமையும் கற்பனை பற்றிய ஆய்வுகள் அண்மைக் காலமாகப் பலநிலைகளிலே எழுச்சி கொள்ளத் தொடங்கியுள்ளன.

"அறிவைக் காட்டிலும் முக்கியத்துவம் பெறுவது கற்பனையே" என்று அல்பேட் இன்ஸ்டின் ஒரு சமயம் குறிப்பிட்டார். கற்பனைகள் வழியாக உருவாக்கம் பெறும் கலைகளும் கண்டுபிடிப்புக்களும் அறிவுத் தேட்டத்தின் எல்லை கடந்த விரிவுக்கு விசையூட்டி வருகின்றன. இற்றைக்கு நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றம்பெற்ற தொன்மையான கருவிக் கையாட்சிக்கும் கருவிக் கண்டு பிடிப்புக்களுக்கும் ஆதி மனிதரின் கற்பனைகளே துணை நின்றவையாக அறிகை மானிடவியல் குறிப்பிடுகின்றது.

தொன்மையான சமூக வாழ்க்கையிலே கற்பனையின் பிரயோக நிலைக்கு அதீத முக்கியத்துவம் வழங்க வேண்டிய தேவையை வாழ்க்கைப் போராட்டங்கள் தூண்டின. அவற்றின் நடைமுறை விளைவுகளை தொன்மை

யான சடங்குகளும், கருவிகளும், வழிபாட்டு உருக்களும், தொல் கலைகளும் வெளிப்படுத்தலாயின.

கடந்து சென்ற பழைய அனுபவத் தொகுதிகளை அல்லது பட்டறிவு அலகுகளைப் புதிய புதிய இணைப்புக்கள் வழியாக முன்னர் காணப் பெறாத வடிவத்தைக் கொடுத்தல் "கற்பனை" என்று பொதுவாகக் குறிப்பிடப்படும். புது வடிவங்களோடு தொடர்புபடுத்திக் கற்பனை பேசப்படும் பொழுது, அதனை உருவாக்குவதற்குரிய வளமான புலமாக அமையும் முன்னைய அனுபவச் சுடுவடுகள் விதந்து நோக்கப்படுதல் இல்லை. அதனை மேலும் கூர்ம்மைப்படுத்திக் குறிப்பிடுவதானால், அனுபவங்களின் களமாக அமையும் சமூக இருப்புப் பற்றி நோக்காது கற்பனையைத் "தனித்த பொருளாக" கற்பிதம் செய்துகொள்ள முடியாது.

இயற்கையோடு நிகழ்த்திய தீவிர போராட்டத்தின் வழியாகத் திரண்டெழுந்த அனுபவங்களை அடியொற்றியே தொன்மையான சமூக வாழ்வின் கற்பனைகள் அமைந்தன. எடுத்துக்காட்டாக பெண்ணின் வளப்பெருக்க ஆற்றலையும் பசுவின் வாழ்வாதாரப் பயன்பாடுகளையும் இணைத்து மானிடப் பெண்ணின் தலையையும் பசுவின் உடலையும் கொண்ட காராம் பசுவை அல்லது கற்பகப் பசுவைக் கற்பனை செய்தார்கள். இவ்வாறாக மனித உடலையும் விலங்கு உடலையும் இணைத்தல், விலங்கு உடலையும் - விலங்கு உடலையும் இணைத்தல், இயற்கையையும் செயற்கையையும் இணைத்தல் என்ற இணைப்புக்கள் வழியாகத் தொன்மையான கற்பனைகள் முகிழ்த்தெழலாயின.

தொன்மையான வாழ்க்கை முறையில் மனித உடல் வலுவின் முக்கியத்துவம் நடைமுறை அனுபவங்களோடு எழுச்சி கொண்ட நிலையில் மனித உடலுக்குப் பல கைகளை உருவாக்குதல், பல தலைகளை உருவாக்குதல், மனிதக் கோலங்களைக் கொண்ட பெரும் வடிவங்களை (பூதங்களை) உருவாக்கிப் பார்த்தல் முதலிய கற்பனை வடிவங்கள் தோற்றம் பெற்றன. பலப்பெருக்கம், வளப்பெருக்கம், இயற்கை வலுக்களுக்கு மனித வடிவங்கள் கொடுத்தல் என்றவாறான கற்பனைத் தொழிற்பாடுகள் தொன்மையான சமூக வாழ்க்கையிலே சாதாரணமாக இடம்பெறலாயின.

சமூக வளர்ச்சியும், கல்வி வளர்ச்சியும், சமூக இருப்பின் இயல்புகளும் அவை உருவாக்கிய முரண்பாடுகளும் கற்பனையின் பன்-

முகமான இயல்புகளைத் தோற்றுவித்தன. அவற்றை அடியொற்றிக் கல்வியிலே கற்பனை தொடர்பான விளக்கங்கள் மேலெழுந்தன.

* கற்பனையை ஆக்க மலர்ச்சியாகக் காணல்.
* எழுகாட்சியாக *(Vision)* விளக்குதல்.
* அகவழி எழுத் தூண்டலாக *(Inspiration)* வரையறை செய்தல்.
* விநோத *(Fancy)* ஆற்றலாகத் தரிசித்தல்.
* அகத்தெழும் காட்சியாக *(Insight)* காணல்.
* தன்முனைப்பு ஆக்கமாக *(Originality)* குறிப்பிடல்.
* புத்தாக்கமாகச் *(Innovation)* சுட்டிக்காட்டல்.
* ஆக்க வளமாகச் *(Enterprise)* சுட்டுதல்.
* வளநிறை எழுச்சியாக *(Resourcefulness)* விபரித்தல்.
* புதிய கண்டறிதலாக *(Invention)* ஆட்சிப்படுத்தல்.
* எழுதிறன் *(Cleverness)* ஆற்றலாகக் கணிப்பிடல்.

மேற்கூறியவை கற்பனை பற்றிய நேர்முக விளக்கங்களாகவுள்ளன. அதாவது, கற்பனைப் பற்றி விதந்து பேசப்படும் பொருள்களாகவுள்ளன. அதேவேளை கற்பனை பற்றிய மாறுபட்ட விளக்கங்களும் உளவியலிலே அவ்வப்போது முன்வைக்கப்பட்டுள்ளன.

அதாவது கற்பனையை மாயைத் தோற்றமாகவும், கனவாகவும், நிழல் எழுச்சியாகவும், நடப்பியலில் இடம்பெறா வடிவம் என்றும், திரிபுக்காட்சி என்றும் விடுகாட்சியென்றும் *(Hallucination)* விளக்கும் மரபுகள் காணப்படுகின்றன.

கடந்தகால நினைவுகள் மீட்டெடுக்கப்படும் பொழுது அவற்றிலே கற்பனை கலந்துவிட முடியும் என உளவியலாளர் குறிப்பிடுவர். மேலும், சிறுவர்களது உளச் செயற்பாடு நிஜத்துக்கும் கற்பனைக்கும் வேறுபாடு காண முடியாத இயல்பினைக் கொண்டிருக்கும் என விளக்கப்படுகின்றது. கலைஞர்களது உளச் செயற்பாடுகளும் சில நிலைகளில் இவ்வகை இயல்பை எட்டுதல் உண்டு என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

கேத்திர கணிதம் கற்றலிலே கற்பனையின் இயல்பை அறிந்து கொள்வதற்குரிய பரிசோதனைகளும் உளவியலிலே மேற்கொள்ளப்-

பட்டன. கேத்திர கணித வடிவங்கள் சிலவற்றைக் கற்பித்துவிட்டு, மறுநாள் அவ்வடிவங்களை வரையுமாறு மாணவர் கேட்கப்பட்ட பொழுது, அவர்கள் தமது கற்பனையிலே தோன்றிய புதிய புதிய வடிவங்களை வரைந்தமை கண்டறியப்பட்டது.

கற்பனையை உருவாக்குவதற்கும் இயக்குவதற்கும் விரைந்து கட்டியெழுப்புதற்கும் படிமங்களும் *(Images)* குறிகளும் *(Signs)* துணையாகவுள்ளன.

கற்பனைக்கும் கருத்தியலுக்கும் பல்வேறு தொடர்புகளைக் காண முடியும். கற்பனை கட்டறதாயினும் அது கருத்தியலின் வழியே நெறிப்படுத்தப்படக் கூடியது. அங்கே கட்டற்ற பல்வேறு பன்முகப் பாங்கு கொண்ட "விரிசிந்தனை"யானது குறித்த இலக்கு நோக்கிக் குவியப்படுத்தப்படும் "குவிசிந்தனை"யாக நெறிப்படுத்தப்படுகின்றது. தொன்மையான அரசுகளின் வளர்ச்சியோடும் தனிச் சொத்துரிமையின் உறுதிப்பாட்டோடும் வளர்ச்சிபெறத் தொடங்கிய தொல்சீர்வாதம் அல்லது செவ்வியல் என்பது பெரும் கட்டுமான ஆக்கக் கற்பனைகளுடன் இணைந்திருந்தது. சமச்சீர்ம்மை, செம்மைப்பாடு கணித நெறிப்பட்ட கற்பனைகள் முதலியவற்றுடன் செவ்வியற் கற்பனைகள் தொடர்புபட்டிருந்தன. பேரரசுகளின் இலட்சியங்கள் வழிப்பட்டுக் கற்பனைகள் மேலெழுந்தன. கற்பனைகளின் "செம்மைப்பாடு" *(Perfection)* செவ்வியற் கலை வடிவங்களிலே வெளித்தோற்றம் பெற்றன. செவ்வியல் நெறிப்பட்ட கற்பனை "அறிவுடன் இணைந்த" கற்பனையாக வளர்ச்சியடைந்தது. "அலங்காரப்படுத்தல்" *(Decorative)* என்ற பண்பிலும் ஆழ்ந்து நின்றது. அகவயப்பாடுகளுக்கு எதிரானதும் தரத்தை மேம்பாடு அடையச் செய்யும் வகையிலும் செவ்வியல் தழுவிய கற்பனைகள் அமைந்தன. *Classical* என்ற எண்ணக்கரு இலத்தீன் மொழியில் "முதலாம் தரம்" என்பதைக் குறித்து நின்றமை குறிப்பிடத்தக்கது. மனவெழுச்சிகளை ஒழுங்குமுறைக்கும், கௌரவப்பாட்டுக்கும் உள்ளடக்கப்பட்டும் கற்பனைகள் செவ்வியல் நெறியில் மேலெழுச்சி பெறலாயின.

உளக்கவர்ச்சி *(Romantic)* நெறிதழுவிய கற்பனைகள் மேற்கூறியவற்றுக்கு மாறுபட்ட வகையில் அமைந்தன. உளக்கவர்ச்சியில் கற்பனைகள் மனவெழுச்சிகள், உணர்ச்சிகள், உறுபற்றுக்கள் *(Sentiments)* முதலியவற்றை முதன்மைப்படுத்தி மேலெழுச்சி கொள்கின்றன. அவற்றை அடியொற்றி இயற்கையின் நயப்புத் தழுவிய கற்-

பனைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. கற்பனைகளின் வெளிப்பாடுகள் எளிமை தழுவி மேலோங்கி நிற்கும் இயல்புடையன. தருக்கமற்ற, நியாயித்தலற்ற கற்பனைகளின் உன்னதங்களும் உளக்கவர்ச்சியியலில் இடம்பெற்று வருகின்றன. மனிதரதும் இயற்கையினதும் பன்முகப்பாடுகள் பற்றிய நோக்கு அங்கே மேலோங்கியிருத்தலையும் காணக் கூடியதாகவுள்ளது. உளக்கவர்ச்சியியலை ஆராயும் பொழுது ஒருவர் மேற்கொண்ட கற்பனையும் அதன் வெளிப்பாடும் பிறர் மீது செல்வாக்குச் செலுத்தி அவர்களின் கற்பனைக் கோலங்களை வளப்படுத்தியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, வேட்ஸ் வோர்த், ஷெல்லி, பைரன், கீட்ஸ் முதலியோரின் கற்பனைகள் பின்வந்த எழுத்தாளர் பலரிடத்துச் செல்வாக்குச் செலுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இங்கிதமான சொற்களும், தன்னிலை உணர்வுகள் மேலோங்கிய கனவுகளின் கற்பனைகளும், உளக்கவர்ச்சி சார்ந்த கற்பனைகளின் வெளிப்பாடுகளாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன. உளக்கவர்ச்சிக் கற்பனைகள் ஸ்கொட் அவர்களின் நாவல்களிலே செல்வாக்குச் செலுத்தியமை மட்டுமன்றி உயிரியல் புலத்திலே புரட்சிகரமான சிந்தனைகள் வளர்வதற்கும் தூண்டுதலளித்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. லாமார்க் மற்றும் டார்வின் முதலியோரின் உயிரியற் கோட்பாடுகள் உருவாதலுக்கும் வளர்வதற்கும் அவை துணை நின்றன. உண்மையின் அசையும் நிலை *(Truth in Motion)* உளக்கவர்ச்சிக் கற்பனைகளிலே மேலோங்கி நின்றது.

சர்ரியலிசம் *(Surrealism)* என்னும் நனவிலி நடப்பியற் கோட்பாடு கற்பனை எழுச்சியை நனவு மனத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க வேண்டுமெனக் குறிப்பிடுகின்றது. மரபு வழியான சமூகக் கட்டுப்பாடுகளிலிருந்தும் பிற அழுத்தங்களிலிருந்தும் கற்பனையும் அதன் வெளிப்பாடுகளும் விடுவிக்கப்படல் வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது. நனவிலி நடப்பியலை "மீ நடப்பியல்" *(Super - Reality)* என்றும் குறிப்பிட்டு அதன் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்துகின்றனர். இக்கருதியல் தொடர்பான கொள்கைப் பிரகடனம் 1924ஆம் ஆண்டில் அண்றேபேட்டன் அவர்களால் வெளியிடப்பட்டது. உளப்பகுப்பு உளவியலை அடியொற்றி எழுந்த இக்கோட்பாடு கனவுகளை அடியொற்றி எழும் கற்பனைகளுக்கும் சமூக அழுத்தங்களில் இருந்து விடுபட்ட கற்பனைகளுக்கும் முக்கியத்துவம் வழங்குகின்றது. பூர்விகச் சிந்தனைகள், தருக்க மறுப்பு, எதிர் நுண்மதிப்பாங்கு முதலியவற்றை அடியொற்றிய கற்பனைகளின்

ஆட்சி வலியுறுத்தப்படுகின்றது. புனைகதைகளை எழுதும்போது எத்தகைய கட்டுப்பாடுகளும் அழுத்தங்களும் இன்றி மனத்திலே வருவதை அப்படியே எழுதிவிட வேண்டும் என்றும் கற்பனைகளைத் தணிக்கைக்கு உட்படுத்தாது வெளிப்படுத்தல் வேண்டும் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது. வகை மாதிரிக்கு பேட்டனுடைய பின்வரும் வசனம் ஒன்றைக் குறிப்பிடலாம்.

"அங்குள்ள
ஒரு யன்னலால்
ஒரு மனிதன்
இரண்டு துண்டங்களாக
வெட்டப்பட்டுள்ளான்."

இங்கு "யன்னல்" என்ற குறியீட்டின் முக்கியத்துவம் சிறப்பாக வலியுறுத்தப்படுகின்றது. உள் மற்றும் வெளி ஆகிய இரண்டையும் யன்னல் பிரிக்கின்றது. அதேவேளை இணைத்தும் வைக்கின்றது. இவ்வாறான புதிர்களைக் கொண்ட நனவிலி நடப்பியற் கற்பனைகள் கலை இலக்கியத் துறைகளிலே தடம் பதித்தாலும் அரசியல் துறையிலே அது கால்கோள் கொள்ள முடியாமற் போனமைக் குறிப்பிடத்தக்கது.

இருப்பியக் கற்பனைகளும் புனைகதைகள் வாயிலாக வெளிவந்துள்ளன. தருக்கவியலால் அணுகப்பட முடியாததும் புறவயமான மொத்தத் தீர்வுகளால் எட்டப்பட முடியாததுமான மனிதப் பதகளிப்பை அடிப்படையாகக் கொண்ட கற்பனைகளின் முக்கியத்துவம் இருப்பியத்தினால் விளக்கப்படுகின்றது. பயம், பதகளிப்பு, குற்றவுணர்ச்சி, ஏக்கம் முதலானவை மனிதரின் அகவயக் கூறுகளாகின்றன. வாழ்க்கையின் பன்முக முரண்பாடுகளுக்கும் விசித்திரமான அங்கலாய்ப்புக்களுக்கும் உதைப்புமிக்க நெருக்கடிகளுக்கும் ஈடுகொடுக்கக் கூடிய ஆற்றல் கற்பனைகளுக்கும் இலக்கியங்களுக்கும் உண்டு. அவற்றுக்குரிய பலம் மனிதரின் அகவயப்பாங்கினாற் கிடைக்கப் பெறுகின்றது. உலகின் இருப்போடு இன்மையும் நிறைந்திருத்தலை கண்டறியும் பயணத்துக்கும் கற்பனைகள் துணை நிற்கின்றதென இருப்பியம் குறிப்பிடும்.

கற்பனை பற்றிய மார்க்சிய அணுகுமுறை தனித்துவமுடையது. முரண்பாடுகளின் மேலெழுகையாகவும், அதன் வழியே தோற்றம் பெறும் பயணிப்பாகவும் மார்க்சியம் கற்பனையைக் கருதுகின்றது. அறிவின் வளர்ச்சியும் அறிவின் எல்லைகளை மீறும் கற்பனைகளின்

வளர்ச்சியும் எதிர் எதிர் கூறுகள் ஒன்றையொன்று சந்திப்பதாலும் மோதுதலாலும் நிகழ்கின்றன.

நீண்ட நெடிய மனித உழைப்பின் வழியாகப் படிமலர்ச்சி கொண்ட மனித மூளையும் அதன்வழி உருவாக்கம் பெற்ற குறியீடுகளும் படிமங்களும் கற்பனையை உருவாக்குகின்றன. கற்பனையும் மனித உள உழைப்பின் வெளிப்பாடுதான். மனித உழைப்பு மனிதரின் இருப்பை நிலைமாற்றிக்கொள்ள உதவுகின்றது என்று கூறும்பொழுது, நிலைமாற்றக் கட்டமைப்புக்களையும் விசைகளையும் மேலோங்கச் செய்வதிலே கற்பனையின் பங்கும் முக்கியமானதாக அமைதலைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. உழைப்பு மனிதரின் சாராம்சம், அதில் ஈடுபடாமல் சமூகம் இயங்க முடியாது. சுரண்டல் மிக்க சமூக அமைப்பிலே மனிதரது உழைப்பு பறிப்புக்கு உள்ளாகும் போது அதனை அடியொற்றிய கற்பனைகளும், மீட்புக்குரிய கற்பனைகளும் மேலெழுகின்றன. இவ்வாறாகக் கற்பனையின் இயல்புகளை மார்க்சிய விளக்கம் முன்னெடுக்கின்றது.

குறிகளும் படிமங்களும் கற்பனையை முன்னெடுப்பதற்கும் வளர்த்து நீடித்துக் கொள்வதற்குமுரிய அடிநிலை அலகுகளாகின்றன. உருவ வழியான கையளிப்பு, அருவவழியான கையளிப்பு என்ற நிலைகளிலே அவை கடத்தப்படுகின்றன. பின்வருமாறு கற்பனையின் இயல்புகள் பாகுபடுத்தி விளக்கப்படுகின்றன.

(1) நிறை கற்பனை

(2) குறைநிலைக் கற்பனை

(3) பிரயோகக் கற்பனை

(4) வினைப்படும் கற்பனை

(5) ஆக்கக் கற்பனை

(6) அழிவுக் கற்பனை

(7) தொடர்பாடற் கற்பனை

(8) கலைக் கற்பனை

(9) அறிவியற் கற்பனை

சமூக நடப்பியற் கலைப் படைப்புக்களுக்குக் கற்பனைகள் ஒவ்வாதவை என்ற கருத்துத் தவறானதாகும். நடப்பியற் கலையாக்கங்கள் கலையழகு பெறுவதற்குக் கற்பனைகள் முக்கியமானவை. நடப்பியல்

எழுத்தாக்கங்கள் அல்லது யதார்த்த எழுத்தாக்கங்கள் என்பவை நிகழ்ச்சிகளின் நேரடியான சித்திரிப்புக்கள் அன்று. அவ்வாறான நேரடியான சித்திரிப்பு "ஆவணப்படுத்தல்" என்ற பொறிமுறைச் செயற்பாட்டுக்கு உட்பட்டது. ஆனால் சமூக நடப்பியல் எழுத்தாக்கங்கள் நிகழ்ச்சிகளின் தெறித்தலுடனும் *(Reflection)* நிகழ்ச்சிகளை அடியொற்றி மேவும் கற்பனைகளுடனும் தொடர்புடையன.

★★★

13

புனைகதையும் நுகர்வோர் சமூகமும்



பின்னைய முதலாளிய சமூகத்தின் தனிமனிதக் குவியத்தோடு ஒட்டிய "நுகர்வோர் நோக்கு" தனிமனித நெறிக்கு மேலும் வலுவூட்டத் தொடங்கியுள்ளது. தனிமனித நுகர்வுக் கோலங்களின் ஆலாபரணங்களை நிலை நிறுத்தும் கதைப் புனைவுகள் முன்னைய சிறுகதைகளிலும், நாவல்களிலும் காணப்படாத புதிய பண்புகளைத் தோற்றுவித்து வருகின்றன. தனிமனித நுகர்ச்சிகளுக்கு சமகாலத்திற் கொடுக்கப்படும் அதீத முக்கியத்துவம் மனித உறவுகளிலே பலவகையான சிக்கல்களைத் தோற்றுவிக்கத் தொடங்கியுள்ளது. இந்தச் சிக்கல் நிலை நெறிப்பட்ட நிலையிலும் நெறிப்படாத நிலையிலும் புதிய புனைவுகளை ஆக்கத் தூண்டுகின்றது.

தனிமனிதர் என்போர் சமூக இயல்பின் குறியீடுகளாகின்றனர். நுகர்வோர் சமூகத்தின் இயல்புகளின் வெளிப்பாடுகளை தனிமனிதர் மேற்கொள்ளும் வெளிப்படையானதும், தோன்றாநிலையானதுமான சமூக உறவுகள் வாயிலாகத் துல்லியமாக அறிந்து கொள்ள முடியும்.

இத்துறையில் மேலும் விளக்கத்தைப் பெறுவதற்கு நுகர்ச்சி, நுகர்ச்சியாளர், நுகர்ச்சியாண்மைவாதம் *(Consumerism)* ஆகிய எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்ளல் வேண்டும். தேவை

களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பொருள்களையும் சேவைகளையும் தெரிவு செய்தலும், திரட்டுதலும் பயன்படுத்தலும் நுகர்ச்சியாகின்றது. அச்செயலை மேற்கொள்வோர் நுகர்ச்சியாளராகின்றனர். நுகர்ச்சி என்பது பொருள்களைக் கொள்வனவு செய்யும் வலுவுடன் அல்லது கொள்வனவுத் திறனுடன் இணைந்தது. இந்நிலையிலே சமூகத்தின் பொருளியல் சார்ந்த அடுக்கமைப்புக்கும் கொள்வனவுத் திறனுக்கும் நேரடியான நெருங்கிய உறவு இருத்தலைக் காணலாம். இந்நிலையில் நுகர்ச்சியாளர் அனைவரையும் ஒரே தரத்திலும் ஒரே தளத்திலும் உள்ளடக்கிக்கொள்ள முடியாது. இதேவேளை "நுகர்ச்சியாளர் இறைமை" *(Consumer Sovereignty)* என்று முதலாளியப் பொருளியல் நிபுணர் முன்வைக்கும் கருத்து ஒருவித ஏமாற்றுக் கருத்தியலின் வெளிப்பாடுதான்.

முதலாளிய பொருண்மிய செயற்பாடுகளின் தீவிர பறிப்பையும் சுரண்டலையும் மறைத்து தனக்குரிய கவர்ச்சி முலாத்தைப் பூசுவதற்கு மேற்கொண்ட ஒரு நடவடிக்கையாகவே "நுகர்ச்சியாண்மை" வாதம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பொருள்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்யும் விருப்பையும், தகுதியையும் தராதரங்களையும் பாதுகாக்கும் நியாயப்பாட்டை அந்த எண்ணக்கரு உள்ளடக்கி நிற்கின்றது. அந்தக் கருத்தியலின் வளர்ச்சியின் பின்னர்தான், பொருள்களிலே கட்புலனாகா இரசாயன வழியானதும், மரபு அணுகு வழியானதும், உயர்நுட்ப வழியானதுமான ஏமாற்றுத் தனங்களும், நுகர்ச்சியாளரின் உடல் நலக்கேடுகளை உருவாக்குதலும் மேலோங்கி வருகின்றன.

நுகர்ச்சியை முதன்மைப்படுத்தும் சூழலில் சிறுகதைகளும் நாவல்களும் "நுகர்ச்சிப் பண்டங்களாக" மாற்றப்படுகின்றன. கைத்தொழிற்சாலைகளில் உருவாக்கப்படும் நுகர்ச்சிப் பண்டங்களின் நிலைக்கு சிறுகதை மற்றும் நாவலாக்கம் தள்ளப்படுகின்றது. ஆக்கமலர்ச்சியின் தரத்தைக் காட்டிலும், மலினமான நுகர்ச்சிக் கவர்ச்சி சராசரிய படைப்புக்களிலே மேலெழச் செய்யப்படுகின்றது. நடப்பு நிலைச் சமூகப் படிமங்கள் நுகர்ச்சித் தேவைக்கேற்றவாறு உருக்கொடுக்கப்படுகின்றன. நுகர்ச்சிக்குரிய படிமங்களை உருவாக்குவதற்கு எழுத்தாளர் தூண்டப்படும் நிலை மேலெழுகின்றது. நாவலின் தரத்தைக் காட்டிலும் அதன் விற்பனைப் பிரதிகளின் எண்ணிக்கையே மேலையுலகில் முதன்மைப்படுத்தப்படுகின்றது. பின்னைய முதலாளியம் உருவாக்கும் நுகர்ச்சி வலைப் பின்னலில் நாவலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. சிறுகதையும் நாவலும் அவற்றின்

இயல்பால் பொருண்மைக் கொள்ளப்படாது, பிறநாவல்களினதும் சிறுகதைகளினதும் "தொடர்பாடல்" நிர்ணயமாக்கப்படும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

நுகர்ச்சிப் பொருண்மிய நடவடிக்கையின் பிறிதொரு இலக்கு பொய்மையான தேவைகளை உருவாக்குதலாகும். அதன் நீட்சி புனைகதையாக்கல்களிலும் ஊடுருவிப் பொய்ம்மையான நிகழ்ச்சிகளின் ஆக்கங்களை மேலெழச் செய்யும் நடவடிக்கைகளைத் தூண்டி நிற்கின்றது. நுகர்ச்சியைக் கட்டுப்படுத்தவும் தூண்டவும் வல்ல செயற்பாடுகளை முதலாளியப் பொருளாதாரம் வெகு இலாவகமாகத் தொடர்ந்து முன்னெடுத்த வண்ணமுள்ளது.

கவர்ச்சியை ஊக்குவிக்கும் பொருண்மிய நடவடிக்கைகள் வாசகரைச் "செயலூக்கமற்றவர்களாக" மாற்றி விடுகின்றன. வாசகரை சமூகத் துலங்கலற்ற, வினைப்பாடற்ற நிலைக்கு மாற்றுதல் பின்னைய முதலாளியத்தின் உறுதிப்பாட்டுக்கு அவசியமானதாகின்றது. "விறுவிறுப்பாகப் படிக்கச் செய்தல்" (எடுத்துக்காட்டு புனிதன் - "கலா என் கிளாஜ் மேட்" நாவல்) ஒருவகையில் யதார்த்தத்தையும் மீறிய சுவைப்புக்கு இடமளித்து நுகர்ச்சிப் பாங்கினைத் தீவிரப்படுத்துகின்றது. மேலும் நுகர்ச்சியின் பிறிதொரு பரிமாணம் ஆங்கில வழியான தொடர்பாடலை அறிமுகப்படுத்தி வேறுபாட்டின் வழியாக *(Differentation)* நுகர்ச்சிப்பாங்கைத் தூண்டுதலும் பின்னைய முதலாளியத்தின் தொடர்பாடல் நுட்பவியலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஒருவகை மாதிரியான எடுத்துக்காட்டாக மேற்குறித்த புனிதனின் நாவலைக் குறிப்பிடலாம்.

தமிழகத்தின் சமூக இயல்பையும், அதன் தளத்திலும் இயல்பிலும் புரையோடிக் கிடக்கும் பிரச்சினைகளையும் புனையும் ஜெயகாந்தனும் "நுகர்ச்சி"ப் பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தலை அவ்வப்போது காண முடிகின்றது. "விஸ்கிப் பாட்டிலும் கையுமாகத் தள்ளாடியபடி நிற்கும் கங்கா"வை உருவாக்கிய ஜெயகாந்தன் ஒரு புறத்தே நுகர்ச்சிச் சுவைக்குத் தீனி போடுபவராயும் மறுபுறத்தில் இந்திய சமூகத்தின் புரையோடிய வடுக்களைச் சித்திரிப்பவராயும் விளங்குகின்றார்.

புதிது புதிதான நுட்பங்களை அறிமுகம் செய்வதன் வாயிலாகச் சுவைத் தூண்டலை உருவாக்குதலும் நுகர்ச்சி அலையின் வீச்சுக்கு உட்படுகின்றது. இரா.முருகன் எழுதிய "மூன்று விரல்" என்ற நாவல் மென்பொருள் துறையை மையமாக வைத்துத் தமிழில் உருவாக்கப்பட்ட முதலாவது நாவலாகின்றது.

புதிய கருத்தியல் அலைகளைத் தழுவி நாவல்களைத் தயாரித்தலும் ஒருவகையில் நுகர்வோரின் விருப்பங்களை நீண்டு கைப்பற்றும் செயற்பாடாகின்றது. எடுத்துக்காட்டாக ச.ராஜநாயகம் அவர்கள் எழுதிய "காலமற்ற காலம் என்றொரு நாவல்" பின்னவீனத்துவக் கருத்தியலை அடியொற்றி அமைந்தவாற்றைக் குறிப்பிடலாம். அந்நாவலின் வடிவமைப்பு இதழ்கோலமே *(Layout)* வித்தியாசமான தோரணமாக இருத்தலையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. நூலாசிரியர் காட்சித் தகவலியல் துறைப் பேராசிரியராக இருப்பதால் காண்பிய நுட்பங்களை "நாவல் அல்லா நாவலில்" பரவலாகப் பயன்படுத்தியுள்ளார். அதன் தொடக்கம் பின்வருமாறு அமைந்தமை வகை மாதிரி எடுத்துக்காட்டாகவுள்ளது.

"புதினத்தின் துவக்கத்தில் வருவதால் இது முதல் பகுதியாகத்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. துவக்கத்தைக் காட்டும் முதல் பகுதியாக இருக்கலாம். இறுதிக்குப் பின்வரும் மற்றொரு துவக்கத்தைக் காட்டும் முதல்பகுதியாக இருக்கலாம். முதலுக்கும் முடிவுக்கும் இடையில் ஏதேனுமோர் இடத்தில்வரும் ஏதேனுமொரு பகுதியாக இருக்கலாம். தெரியாத துவக்கத்தின் இறுதிப் பகுதியாக இருக்கலாம்... முடிவுக்குப் பின்னே முடிதலும் முதலுக்கு முன்னே முடிவும் சாத்தியமில்லை என்றால் மனித வாழ்வே சாத்தியமாகாது. *(ப 1-3)*

குறித்த ஒரு நாவலைப் பல நிலைகளில் வாசிக்க முடியும் என்ற கருத்து முன்வைப்பும் நுகர்ச்சிப் பாங்கின் முதன்மையை வலியுறுத்தி நிற்பது போன்ற தோற்றத்தைத் தருகின்றது. சுந்தரபாண்டியன் எழுதிய "அந்தி" நாவலுக்கு கோவை ஞானி எழுதிய சில குறிப்பில் பின்வருமாறு சுட்டப்பட்டுள்ளது. "இந்த நாவலை இரண்டு வகைகளில் நாம் வாசிக்க முடியும்.... இந்த நாவலுக்குள் நாட்டார் வழக்காற்றியல் கூறுகளைக் கண்டு வாசிப்பது ஒருமுறை. நவீனகால வாழ்க்கையை, வாழ்க்கைச் சிக்கலை கலைநயத்தோடு இந்த நாவல் வெளிப்படுத்துகிறது என்ற உணர்வோடு வாசிப்பது இன்னொரு முறை... ஒரு நல்ல வாசகர் இவ்விரு வகை உணர்வோடும் இந்த நாவலை வாசித்து இன்புற முடியும்."

நுகர்ச்சியின் குவியப்பாடு நவ பாலியலை *(Neo Sex)* நோக்கித் திரும்பியுள்ளது. புதிது புதிதான பாலியல் விகாரங்களையும், பாலியல் விலகல் நடத்தைகளையும், சித்திரிப்பதன் வாயிலாக புனைகதை வாசிப்பைத் தூண்டும் நுகர்ச்சிப்பாங்கு மேலை உலகில் உச்சங்களை எட்டத் தொடங்கியுள்ளது.

தமிழ் இலக்கியப் பரப்பிலும் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பாலியலை மேலும் பல தளங்களிலே அணுகும் நாவல்கள் தோற்றம் பெற்றன. அவற்றின் வழியான "உண்மை புகட்டலை" தமிழ் நாவலாசிரியர்கள் முன்னெடுத்தல் ஒருவகையில் தமிழ்ப் பண்பாட்டு மயப்படுத்தலாகின்றது. இந்த வகையில் இந்துமதியின் "பைசா நகரத்துக் கோபுரங்கள்" வாஸ்நதியின் "ஒரு சங்கமத்தைத் தேடி" லக்ஷ்மியின் "இருளில் தொலைந்த உண்மை" முதலிய நாவல்களைக் குறிப்பிடலாம். இந்நாவல்களின் மறுபக்கம் "நனவிலி மனவலுவின்" *(Unconscious Psychic Energy)* துள்ளலுக்கு இடமளிப்பதுதான். ஏற்கனவே இந்தத் துள்ளலுக்குரிய தூண்டல் இலங்கையில் எஸ்.பொ.வின் ஆக்கங்களில் இடம்பெற்றுள்ளமை வரலாற்றுப் பதிவுகளாகக் கழிந்துள்ளன.

எலத்திரன் சாதனங்களின் தொடர்பாடற் போட்டிகளினூடே "மீண்டும் வாசகரை அருட்டிவிடல்" என்ற செயற்பாட்டுக்கு "நவபாலியல்" நோக்கு மேலையுலகிலே கைகொடுத்துள்ளது. போலி மெய்ம்மை கொண்ட நவீன நாவல்களில் ஒடுக்குமுறை தொழில்நுட்பம் மிக நேர்த்தியாகக் கையாளப்படுகின்றது. ஏமாற்றுவிசைகளுக்கு உட்படாத நோய்க்கூறுகளைக் கொண்ட புனைவுகள், நடப்பியலை "தன்னிலை அழகியல்" வழியாகத் தகர்க்க முற்படுகின்றன. இந்த வகையில் "மீண்டும் இருப்பியம் நோக்கித் திரும்பல்" முன்மொழியப்படுகின்றது. சாரு நிவேதிதாவின் "எக்ஸிஸ் டென்ஷியலிசமும் பேன்ஸி பனியனும்" என்ற நாவல் (கனவுப்பட்டறை, 2005) குறிப்பிடத்தக்கது. சமூக வரலாற்றைப் போலியாகவும் மாயையாகவும் சுட்டும் பின்னவீனத்துவ உரையாடலால் மாறுபட்ட நிலையில் வெந்து தணிந்த வகையில் மீள் அழகு உயிர்ப்பூட்டப்படுகின்றது.

அழகியல் என்பது அதிகாரத்தினாற் கட்டமைப்புச் செய்யப்படும் வரம்பாக உள்ளது. அதிகாரக் கட்டமைப்பும், அதனை நிலைநிறுத்தும் நுகர்ச்சிப் பண்பாடும், சமூகக் கட்டமைப்பை உடைக்கும் விசைகளை மலினப்படுத்தும் புனைகதையாக்கங்களும் ஒன்றையொன்று தழுவி நிற்கின்றன. முடிவு நிலையை எட்டாத அல்லது நிலை மாற்றத்துக்கு உட்படாத செம்மையுறா இருப்புக்கும் *(Rawness)* நடப்பியலுக்குமிடையே வேறுபாடு காட்டப்படாத சித்திரிப்பும் அவற்றுடன் இணைந்து கொள்கின்றது. பாலியல் உக்கிரத்தின் படிமப்படுத்தல் நுகர்வோரின் தெரிவு உந்தலுடன் இணைக்கப்படுகின்றது.

★★★

14

ஆக்க மலர்ச்சிப் பதிவுகள்



ஆக்க மலர்ச்சி நுண்மதி' என்ற எண்ணக்கரு அண்மைக் காலத்தையக் கல்வியியல் ஆய்வுகளிலே விதந்து பேசப்படும் பொருளாகவுள்ளது. கலை இலக்கிய ஆக்கங்களுக்கு மட்டுமன்றி அறிவியல் ஆக்கங்களுக்கும் கண்டுபிடிப்புக்களுக்கும் ஆக்கமலர்ச்சி நுண்மதியே *(Creative Intelligence)* அறிகைத்தளமாக இருத்தலும் வலியுறுத்தப்படுகின்றது. நுண்மதியை முற்றிலும் ஒற்றைப் பரிமாணத்தில் நோக்கிய சிறில் பேட் என்பாரின் ஆய்வு முடிவுகள் தவறானவை என்றும் அபத்தமானவை என்றும் லெஸ்கி கியேர்ன்சோ போன்ற பின்வந்த ஆய்வாளர்களினால் அம்பலமாக்கப்பட்டது. *(Palmer, Ed, 2004)* நுண்மதியை காரணம் காணும் கணித அறிவுடன் தொடர்புபடுத்துதலும், பிறப்புடனும் மரபு வழிப்படுத்துதலுடன் தொடர்புபடுத்து தலும் ஒற்றைப் பரிமாண நோக்கைப் புலப்படுத்தும். அத்தகைய நோக்கினுக்குரிய எதிர் எழுச்சிகளாகவே, மனவெழுச்சி நுண்மதி, பல்துறை நுண்மதி, ஆக்கமலர்ச்சி நுண்மதி முதலானவை தோற்றம்பெற்றன. கற்பனை மற்றும் பகற்கனவு காணல் என்பவற்றிலும் மேம்பட்ட அல்லது மேலெழுச்சி கொண்ட வடிவமாக ஆக்கமலர்ச்சி அமைகின்றது. அதன் நடைமுறை விளைவுகளாக கலைப்படைப்

புக்கள், அறிவியற் கண்டுபிடிப்புக்கள் புதிய ஆக்க வடிவங்கள், அறிகை வடிவங்கள் முதலியவை தோற்றம் பெறுகின்றன.

முன்னர் அறிந்திராத ஒன்றை உருவாக்குதலும், பிறிதொன்றை நோக்கிய நகர்ச்சியாகவும், புதிய இணைப்புக்களின் உருவாக்கலாகவும், புதிய புலக்காட்சிகளின் மேலெழுச்சிகளாகவும், தனித்துவத்தின் பாய்ச்சல்களாகவும் ஆக்கமலர்ச்சி வெளிப்படுகின்றது. அது கட்டற்ற சிந்தனை அல்லது திறந்த சிந்தனை அல்லது விரிசிந்தனையின் தொழிற்பாடுகளோடு இணைந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. *(Mangal. S.K.2007)*

சிந்தனையின் தொழிற்பாடுகளோடு ஆக்க மலர்ச்சியை இணைத்து நோக்கும் அணுகுமுறைகள் உளவியலாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். அதன் முன்னோடி முயற்சிகளை மேற்கொண்டோர் வரிசையில் கில்போட் குறிப்பிடத்தக்கவர். கில்போட் விரிசிந்தனையுடன் தொடர்புபடுத்தி ஆக்க மலர்ச்சியை விளக்கினார். அந்நிலையில் குவிசிந்தனை மற்றும் விரிசிந்தனை ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் விளக்கப்பட்டன. குவிசிந்தனை நெடுங்கோட்டு நிலைப்பட்டது. தருக்கபூர்வமானது. ஒரே ஒரு சரியான விடையை மட்டும் நோக்கி நகர்ந்து செல்வது, புலமை அறிவோடு தொடர்புபட்டது. விரிசிந்தனை பல பரிமாணங்களைக் கொண்டது, விநோதமானது, ஆக்குபவரே அத்துறையில் முன்னோடியாக இருக்கும் பண்புகளைக் கொண்டது. கில்போட்டின் கருத்துக்களை அடியொற்றி எட்வேட் டிபோனோ நெடுங்கோட்டுச் சிந்தனை மற்றும் பக்கவாட்டுச் *(Lateral)* சிந்தனை என்ற அணுகுமுறைகளை முன்வைத்தார். ஒரே பொருளில் ஆழ்ந்து சிந்தித்து ஊடுருவிச் செல்லல் நெடுங்கோட்டுச் சிந்தனையாகின்றது. வெவ்வேறு வழிகளிலே சிந்தனையை இயக்கிச் செல்லலும் பல்வேறு விடைகளை நோக்கி நகர்தலும் பக்கவாட்டுச் சிந்தனையுடன் தொடர்புடையது.

பெரும்பாலான உளவியல் ஆய்வாளர் ஆக்கத்திறனை நுண்மதியுடன் இணைந்த கூறாகவே கருதினர். ஆனால் றொபேட் ஜே.இஸ்ரேன் போர்க் அதனை நுண்மதியிலிருந்து வேறுபட்டதாகக் கருதினார். *(Alder, H 2006)* பின்வரும் பரிமாணங்களில் அந்த வேறுபாடு மேலெழுகின்றது.

* மரபுகளுக்கு மாறுபட்ட வகையில் சிந்தனைகளும், வினைப்பாடுகளும் இடம்பெறுதல்.
* அழகியற் சுவையோடு இணைந்திருத்தல்.

* அதிக நெகிழ்ச்சிப் பாங்கைக் கொண்டிருத்தல்.
* தெளிவின்மையைப் *(Ambiguity)* பொறுத்துக்கொள்ளல் அல்லது சகித்துக்கொள்ளல்.
* மேலாதிக்க அறிகைத் தடங்களை வினாவுக்கு உள்ளாக்குதல்.

சிந்திக்கும் பொழுதும், கற்பனை செய்யும் பொழுதும், ஆக்கமலர்ச்சியை முன்னெடுக்கும் பொழுதும் மூளையின் சிக்கலான அணுநிலை வலைப்பின்னலூடே புதிய நியு றொனல் *(Neuronal)* இணைப்புக்கள் அதிவிரைவுடன் தொழிற்படத் தொடங்குகின்றன. ஆக்கமலர்ச்சி வலமூளையுடன் தொடர்புடைய செயற்பாடு என்று கூறுதல் அதீத எளிமையாக்கப்பட்ட முடிவாகும். வலமூளை இடமூளையுடன் இணைந்தே தனது ஆற்றுகையை மேற்கொள்கின்றது.

மனித மூளையைக் கணனியுடன் ஒப்பிடுதலும் அதீத எளிமையாக்கலாகி விடுகின்றது. கணனியின் செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்படலாம். ஆனால் மனித மூளை நிறுத்தி வைக்கப்பட முடியாதது நித்திரையின் போதும் அது இயங்கிய வண்ணமிருக்கும். அது தொடர்ந்து தன்னை உருவாக்கிய வண்ணமிருக்கும். இந்நிலையில் சமூக இருப்பிலிருந்து அதன் உருவாக்கம் நிகழ்ந்து கொண்டிருத்தலை முக்கியமாகக் குறிப்பிட வேண்டியுள்ளது.

வலமூளை இடமூளையுடன் இணைந்து தொழிற்படுகின்றதாயினும் அவை ஒவ்வொன்றுக்குமுரிய தனித்துவங்களும் காணப்படுகின்றன. இடமூளைக்குரிய தொழிற்பாடுகளாகவும் பின்வருவன முறையே சுட்டிக்காட்டப்படுகின்றன. *(Adler,H 2006)*

இடமூளை

* சொல் சார்ந்தது
* பகுத்தறியும் பண்பு
* கருத்துக்களை ஒழுங்குமுறையாகத் தொகுக்கும் திறன்
* தருக்கப்பண்பு
* வரன் முறையானதும் ஒழுங்கமைந்ததுமான திறன்
* குறியீட்டுப் பண்பு
* உறு நேர்வுகளுடன் தொடர்புபட்டிருத்தல்
* அருவ நிலைப் பண்பு

* முறையியல் தழுவி நிற்றல்
* செயற்பாங்குடைமை
* காரண காரியப் பண்புடைமையும் நியாயித்தலும்
* வலப்பக்க உடற்செயற்பாட்டைக் கட்டுப்படுத்துதல்

வலமூளை

* சொல்சாராது
* முழுமை நிலையாக்கும் தொகுத்தறியும் திறன்
* மனவெழுச்சி, உணர்ச்சி மற்றும் உள்ளுணர்வுத்திறன்
* வரன்முறைசாரா நெகிழ்ச்சிப்பண்பு
* உருவ நிலைப்பாங்கு
* கலை இலக்கியங்களுக்கு மனவெழுச்சியுடன் துலங்குதல்
* கோட்பாடுகளிலும் எண்ணங்களிலும் விருப்புடைமை
* பார்த்தல், கேட்டல் என்ற வழிகளில் மனவெழுச்சி பூர்வமாகக் கற்றல்
* இசை, பாடல், கவிதை, உருவகங்கள், தொன்மங்கள் முதலியவற்றுக்கு உணர்ச்சிகொள்ளல்
* காலக்கட்டுப்பாட்டினை மீறும் விடுதலையும் தொடர்ச்சியும்
* இடப்பக்க உடலியக்கச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல்

புனைகதையாக்கத்தில் வலமூளையின் செயற்பாடுகளே ஒப்பீட்டளவில் மிகையாகவிருக்கும். ஆனால் முழுமூளையும் இணைந்தே ஆக்க மலர்ச்சியை முன்னெடுத்தலை மனங்கொள்ளல் வேண்டும். ஆக்கமலர்ச்சிச் சிந்தனை என்பது குறித்த வாய்ப்பாடு போன்று செயற்படுதல் இல்லை.

ஆக்கமலர்ச்சியானது மனவெழுச்சிகளோடு இணைந்தது. மனவெழுச்சிகளை அடியொற்றியே இந்திய மரபில் "இரசம்" பற்றிய அழகியற் கோட்பாடு உருவாக்கம் பெற்றது. தமிழ் மரபில் மனவெழுச்சிகள் "மெய்ப்பாடுகள்" என்று குறித்துரைக்கப்பட்டன. மனவெழுச்சிகள் நேர்ப்பண்பு கொண்டும் அமையலாம். எதிர்ப்பண்பு கொண்டும் அமையலாம். இலக்கியப் படைப்புக்களை உருவாக்கும்

ஆக்க மலர்ச்சித் தொழிற்பாடு மூளையின் அல்பா கதிர்வீச்சுடன் இணைந்தது என்பர். அந்நிலை "விழிப்புணர்ச்சியாயிருத்தலின் விழிப்புணர்ச்சி" *(Aware of Being Aware)* என்று குறிப்பிடப்படும்.

ஆக்கமலர்ச்சி என்பது அனைவருக்குமுரிய ஒருதிறன். தனித்து ஒருசிலருக்கு மாத்திரம் கட்டுப்பட்டதன்று. நாளாந்தம் வாழ்க்கையிலும் தொழில்களிலும் ஆக்கமலர்ச்சியைப் பிரயோகிப்பவர்களது திறன் வெளிவருதல் இல்லை. ஆக்கமலர்ச்சி மிக்கோரின் நடத்தைகளைத் தொகுத்து ஆராயும் ஆய்வுப்புலமாக "வரலாற்றியல் உறுகணிப்பு" *(Historiometry)* உருவாக்கப்பட்டது. அவ்வாறான ஆய்வுகளைத் தொடர்ந்து ஆக்கமலர்ச்சி மிகையாகக் காணப்படுவோரிடத்து அமைந்துள்ள சில சிறப்புப் பண்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. (கொக்ஸ் என்பாரின் ஆய்வு)

* யாதாயினும் ஒரு ஆட்சி *(Domain)* அவர்களிடத்து மேலோங்கியிருக்கும் அதற்குரிய ஈடுபாட்டை அவர்கள் வாழ்க்கை நீட்சி முழுவதும் காட்டுவர்.
* செயற்பாடு சிக்கல் நிரம்பியதாகவும் நீடித்துச் செல்வதாகவும் அமையும்.
* ஆக்கவிளைவு அல்லது ஒரு படைப்பு திடீரெனத் தோற்றம் பெறுதல் இல்லை.
* ஆக்கமலர்ச்சி மிக்கோரின் ஒற்றைப்பரிமாண நோக்கானது குடும்பம் நட்பு முதலாம் உறவுகளைப் பாதிக்கும்.
* முரண்பாடுகளையும் தியாகங்களையும் உள்ளடக்கியதாக ஆக்கத்திறன் தொழிற்பாடுகள் அமைந்திருக்கும்.

ஆக்கமலர்ச்சி தொடர்ச்சியான செயற்பாடுகளுடன் இணைந்தது. அது உந்துநிலை எழுச்சியுடன் *(Arousal)* ஆரம்பிக்கின்றது. சமூக இருப்பிலிருந்து எழுத்து அறைகூவல்களைச் சந்திக்கும்பொழுது அந்த எழுச்சி தொழிற்படத் தொடங்குகின்றது. அறைகூவலுக்குரிய பல்வேறு தீர்வுகளை நோக்கிய சிந்தனைத் தொழிற்பாடுகள் இடம்பெறும் நிலையில் ஆக்கமலர்ச்சி எழுச்சிகொள்ள ஆரம்பிக்கின்றது. அறைகூவலின் இயல்புக்கு ஏற்றவாறு பாய்ச்சலின் பண்பு வேறுபட்டுச் செல்லும். பாய்ச்சல் கலை இலக்கியம் மற்றும் விஞ்ஞானப் படைப்புக்களை உருவாக்குபவர்களுக்கு மட்டுமல்ல, வாசகர்களுக்கும் உண்டு. எடுத்துக்காட்டாகப் புனைகதைகளை வாசிப்போர் கதைகளைப் படைக்க வேண்டுமென எண்ணுதலும் தொழிற்படலும்

அவர்களிடத்தே தோற்றம்பெறும் பாய்ச்சலின் வெளிப்பாடுதான். அந்நிலையில் ஆக்கமலர்ச்சிப் பாய்ச்சல் அகிலப்பண்பு *(Universal)* கொண்டது என்பது தெளிவாகின்றது.

ஆக்கமலர்ச்சியின் விளைவுகள், கலை இலக்கியங்களாக, கண்டுபிடிப்புக்களாக, புத்தாக்கங்களாக வெளிவரும் பொழுது பின்வரும் இணைநிலைகள் தோற்றம் பெறுகின்றன.

* எண்ணளவு பெருக்கம் - தரச்சிறப்பு வினா
* புத்தாக்கமும் - பயன்பாடும்
* விளைவுகளும் - சமூக இலக்குகளும்
* பெறுமானமும் - புகழும்

குறைந்தளவு உள்ளீட்டுடன் கூடியளவு வெளியீட்டைத் தருதல் ஆக்கமலர்ச்சியின் பிறிதொரு பரிமாணமாகும். சமூகம் என்ற தளத்திலிருந்து உள்ளீடுகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. சமூகம் சிக்கல் பொருந்தியதாக இருப்பதனால் தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் ஒருவித தெரிவு முறைமை மேற்கொள்ளப்படுகின்றது. தெரிந்தெடுத்தவற்றைப் புதிய வழிகளில் நோக்குதலும் இணைத்தலும் அடுத்து முக்கியத்துவம் பெறுகின்றது. அவற்றைத் தளங்களாக்கி ஆக்க மலர்ச்சியின் விளைவுகள் தோற்றம் பெறுகின்றன விளைவுகளைக் கொண்டே ஆக்கமலர்ச்சியின் திறன் கணிப்பீடு செய்யப்படுகின்றது.

ஆக்க மலர்ச்சியின் விளைவுகள் வர்க்க முரண்பாடுகளை அடியொற்றி இரண்டு வகையாகப் பாகுபடுத்தலாம். அவை:

* சுரண்டல் அல்லது பறிப்புக்குத் துணைபோகும் ஆக்கமலர்ச்சி *(E-Creativity)*
* சுரண்டலுக்கு உள்ளாவோரை எழுச்சிகொள்ளச் செய்யும் ஆக்க மலர்ச்சி *(A.E.Creativity)* இது எதிர்ப்பறிப்பு ஆக்க மலர்ச்சி என்றும் குறிப்பிடப்படும்.

ஆக்கமலர்ச்சி தனிமனிதத் தீவில் உருவாக்கப்படுதல் இல்லை. அது சமூக இருப்பிலிருந்தே மேலெழுகின்றது. சமூக இயல்புகள் அதனை நெறிப்படுத்துகின்றன. சமூகச் செயல்முறை பின்வரும் உறுபண்புகளை *(Trits)* ஆக்கமலர்ச்சிகொண்ட தனிமனிதரின் ஆளுமையிலே வளர்ச்சிக்கொள்ளச் செய்கின்றது.

* தன்மலர்ச்சிப்படையல் *(Originality)*
* கட்டுப்பாடற்ற தன்னிலை ஓங்கல்
* உசாவல் விருப்பு *(Curiosity)*
* ஆபத்தைத் தாங்கும் திறன்
* ஆக்கவலு
* புதுமையும் சிக்கலும் நோக்கிய கவர்ச்சி
* கலையுணர்வு
* திறந்த நோக்கு
* தமது படைப்பு மலர்ச்சி பற்றிய உணர்வு

மரபுவழி உளவியலாளர் ஆக்கமலர்ச்சியை முற்றிலும் ஊகங்களின் அடிப்படையாக விளக்கினர். அதாவது பிறப்புடன் கூடியதென்றும், முன்னோரால் அருளப்பட்டது என்றும் விளக்க முற்பட்டனர். உளப்பகுப்பு உளவியலாளர் நனவிலி மனத்தின் தொழிற்பாடுகளுடன் அதனைத் தொடர்புபடுத்தினர். கூட்டு நனவிலி மற்றும் தொல்வடிவங்கள் *(Archetypes)* ஆகியவை ஆக்கமலர்ச்சியைத் தூண்டுவதற்குரிய தொழிற்பாடுகளாக இருத்தலை யுங் *(Jung,C.G.1993)* விளக்கினார். இவ்வாறான கருத்துக்கள் திட்டவட்டமாக நிரூபிக்கப்படாதவையாக அமைந்தன.

ஆக்கச் செயல்முறையை விளக்கவந்த வலெஸ் அவர்களின் கோட்பாடு நான்கு படிநிலைகளைக் கொண்டதாக அது முகிழ்த்தெழுவதாகக் குறிப்பிட்டது. *(Wallas,G 1926)* தயாரித்தல் நிலை, அடைகாப்பு நிகழும் நிலை, ஒளிரும் நிலை, சரிபார்த்து வெளியிடும்நிலை என்ற படிநிலையும் ஒழுங்கமைப்பும் ஊகங்கள் தழுவியதாகவே எழுந்தது.

ஆக்க மலர்ச்சியை ஏறுநிறை மட்டங்களாக ரையிலர் விளக்கிக் கூறலானார். *(Taylor, 1.A 1975)* அவை வருமாறு.

(1) வெளியீட்டு ஆக்கமலர்ச்சி

(2) விளைவுநிலை ஆக்கமலர்ச்சி

(3) புதியன கண்டறியும் ஆக்கமலர்ச்சி

(4) புத்தாக்க ஆக்கமலர்ச்சி

(5) முகிழ்த்தெழும்வகை *(Emergentive)* ஆக்கமலர்ச்சி

வெளியீட்டுவகை ஆரம்ப நிலையாகவும் முகிழ்த்தெழும் வகை அருவநிலை உன்னதங்களைக் கொண்டதாகவும் அமையும்.

ஆக்கமலர்ச்சி தொடர்பான ஒரு மாற்றுவகையான கருத்தை அறிற்றை என்பார் முன்வைத்தார் *(Arieti, 1976)*

அதாவது நடப்பியலை நிலை மாற்றும் செயல்முறையில் ஆக்கமலர்ச்சி செயற்பாட்டுக்கும், மனநோய் மயப்பட்டவர்களின் சிந்தனைக்குமிடையே ஒப்புமை காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இரண்டினுக்குமுள்ள வேறுபாடு என்னவென்றால், ஆக்கமலர்ச்சி கொண்டவர்கள் அந்த நிலை மாற்றத்தினைச் சமூக நோக்கின் பொருட்டும் தன்னியல் நிறைவின் பொருட்டும் பயன்படுத்துகின்றனர். ஆனால் மனநோய் வயப்பட்டவர்கள் அதனைத் தமது தனிப்பட்ட அகவய உலகின் பொருட்டுப் பயன்படுத்திக் கொள்கின்றனர். ஆக்கச் செயற்பாட்டை ஒருவித மாயச் செயற்பாட்டுத் தொகுப்பு *(Magic Synthesis)* என அவர் மேலும் விளக்கினார்.

ஆக்கமலர்ச்சி நனவிலி மனத்தின் செயற்பாடுகளை உள்ளடக்கிய முதலாம் நிலைச் செயல்முறை மற்றும் நனவு மனத்தின் செயற்பாடுகளை உள்ளடக்கிய இரண்டாம் நிலைச் செயல்முறை ஆகியவற்றின் மாயச் செயற்பாடு என்பது அவரது விளக்கம். முதலாவது உலகத் தருக்கத்துக்கு ஒவ்வாதது. மற்றையது உலகத்தரத்துக்கு இணைந்தது இரண்டையும் மாயவித்தையாக ஒன்றிணைப்பை மேற்கொள்ளல் ஆக்கமலர்ச்சியில் இடம்பெறுகின்றது.

ஆக்கமலர்ச்சி பற்றி ஆராய்ந்த மேலைப்புல உளவியலாளர், அதன் சமூகத்தளங்களை ஆராயத் தவறிவிடுகின்றனர். கலை இலக்கியங்கள் சமூகத்திலே தோற்றம் பெறுமாற்றை ஆராயும் பொழுது, சமூக இருப்புக்கும் ஆக்க மலர்ச்சிக்குமுள்ள தொடர்புகள் தெளிவாகப் புலப்படும். இந்நிலையில் ஆக்கமலர்ச்சி என்பது சமூக இருப்பின் மலர்ச்சியாகின்றது. நிலமானிய சமூக அமைப்பிலே தோற்றம் பெற்ற இலக்கியங்களையும் கைத்தொழிற் சமூக அமைப்பிலே தோற்றம் பெற்ற இலக்கியங்களையும் ஒப்பு நோக்கும்பொழுது காணப்படும் வேறுபாடுகள் சமூக இருப்பின் வழியாக நீட்சி கொண்ட ஆக்க மலர்ச்சியின் வேறுபாடுகளாக அமைகின்றன. சமூக ஆக்கமலர்ச்சியை *(Socio - Cretivity)* ஒரு புதிய ஆய்வுப் புலமாக முன்மொழிதலை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

புனைகதையாக்கத்திலே பயன்படுத்தப்படும் கலைப் பண்புகளும் உறுவினை (Craft) ஆக்கமலர்ச்சியோடு இணைந்தவை. புனைவின்போது வாழ்க்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தலும், தெறித்துக்காட்டுதலும் வித்தியாசமானதாகவும் புதுமையானதாகவும் அமையும் வகையில் அளிக்கை செய்யப்படுதல் ஆக்கமலர்ச்சியோடு இணைந்த தோற்றப்பாடுகளாகின்றன. புனைகதையின் நிகழ்ச்சி ஒழுங்கமைப்பும் கதை வளர்ப்பும் ஒருவித மாயச் (Magical) செயற்பாடாகின்றது.

புனைவுகளில் இடம்பெறும் கதை மாந்தரும் நடப்பியலின் தெறிப்பைக் காட்டுனராக இருக்கையில் அந்தநிலை மாற்றம் (Transformation) ஆக்க மலர்ச்சியின் வயப்பட்டது என்பதை மனங்கொள்ளல் வேண்டும். படைப்பு மலர்ச்சியின் ஒருவித இழுபாடே, இரண்டாம் உலகப் போரின் போது பிரான்சில் இடம்பெற்ற "புதிய நாவல்"களில், உயிரற்ற பொருட்களும் கதை மாந்தராகச் சித்திரிக்கப்பட்ட நிகழ்ச்சியாகும். மனிதரைக் காட்டிலும் அறையிலிருந்த தளபாடங்களுக்கு நாவலாசிரியர் முக்கியத்துவம் கொடுத்தனர்.

கதை மாந்தரைக் குறியீடுகளாக்குதலும் ஆக்க மலர்ச்சித் தொழிற்பாட்டின் வெளிப்பாடாகும் ஆக்கமலர்ச்சி மட்டுமன்றி, கதாசிரியரின் கருத்தியலும் அவ்வாறான குறியீட்டாக்கத்தில் இணைந்து கொள்கின்றது.

நாவலின் நிகழ்புலம் பற்றிய சித்திரிப்பும் படைப்பு மலர்ச்சியுடன் இணைந்த செயற்பாடாகும். நிகழ்புலத்தை மொழிவீச்சுக்குள்ளே கொண்டுவரும் நிலைமாற்றம் நடப்பியற் காட்சிகளைக் "கலை நிழற்படம்" எடுக்கும் செயற்பாட்டுக்கு ஒருவகையிலே ஒப்புமையானது தமிழ் மரபிலே காட்சிகளை உளக்கவர்ச்சி (Romantic) நிலைக்கு உட்படுத்துதலே அழகு பாலிக்கும் என்ற தவறான கருத்தும் நிலவுகின்றது. உளக்கவர்ச்சி மயப்படுத்தலில் மிகை மனவெழுச்சிகளும் எதிர்நியாயித்தலும் மேலோங்கியிருத்தல் குறிப்பிடத்தக்கது.

★★★

15

நவீன இலக்கியப் புலப்பாடுகள்



நடப்பு நிலவரங்களைப் புனைதல் முடிவுக்கு வந்துவிட்டது *(The End of Thereal)* என்ற குரலெழுகை கலை இலக்கியங்களைப் பொறுத்தவரை மிகைப்படுத்தலாக இருந்தாலும், அதனுள்ளே பிற்போக்குத்தனமான பொருண்மையும் செறிந்துள்ளது. எழுத்திலோ காண்பிய வடிவிலோ கலைவடிவம் மேலெழுகை கொள்ளும்பொழுது எளிமையா னதும், மலினமானதுமான நேரிணைப்புக்கள் அழகியல் விசையை கீழ்விழுத்தி விடுதலும் சமகாலத்தின் ஆக்கங்களிலே நுணுகிய நோக்குதற்குரியது.

எலத்திரனியற் தகவற் புரட்சியினால் நூலியம் *(Text)* எழுத்து வடிவமாகவும், காட்சி வடிவமாகவும், ஒலிவடிவமாகவும், மிக வேகமாக, விரைந்த உருவமைப்புக் கட்டுமைக்கு உள்ளாக்கப் படுதலுடன், மிகப் பரந்த நுகர்வோர் தளங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. இந்நிலையில் நடப்பியலுக்கும் தொடர் பாடல் படிமங்களுக்குமிடையேயுள்ள இணைப்புக்கள் பற்றிய ஆய்வுகள் இருபத்துதோராம் நூற்றாண்டுகளில் எழுச்சிகொள்ளத் தொடங்கியுள்ளன. நடப்பு நிலவரங்களைக் காட்டிலும் மனத்தில் நிகழ்த்தப்படும் படிம வாக்கங்கள் அதிக செறிவையும், அதிக உளத்தாக்கங்களையும் ஏற்படுத்தவல்லவை. தொடர்

பாடலின் விரைவும் விரிவாக்கமும், படிமங்களை விரைந்து ஆக்கம் செய்யும் தொழிற்சாலைகளாக எழுத்தாளர்களை மாற்றி வருகின்றது. ஒற்றை நிலைத் தெரிவிலிருந்து விடுபட்டு, பலவற்றிலிருந்து விரும்பியவற்றைத் தெரிவுசெய்யும் கட்டற்ற நிலைக்கு வாசகர்களும் கலை நுகர்ச்சியாளர்களும் மாற்றப்பட்டு வருகின்றார்கள். நூலியம் தொடர்பான வாசகரின் மேலாண்மை எழுச்சி கொண்டுள்ளமை போன்று கலைப் பொருள்களைத் தெரிவு செய்வதிலும் கலை நுகர்ச்சியாளரின் மேலாண்மை தூண்டிவிடப்படுகின்றது. இவற்றின் பின்னால் பல்தேசிய நிறுவனங்கள் புலப்படாக் கரங்களாக இருத்தலைப் பலர் உணர்ந்து கொள்வதில்லை.

தெரிவுப் பெருக்கம் பன்முகமாகியும் விரிவடைந்து செல்லும் நிலையில் எழுத்தாளர்களினதும் கலைஞர்களினதும் எழுத்தாக்கல், மற்றும் கலையாக்கற் செயற்பாடுகளின் விரிவு கேள்விக்குரியதாக்கப்படுகின்றது. திறனாய்வாளர் பிரடிரிக் ஜேம்சன் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலே கூறிய கருத்து வருமாறு: "சமகாலத்து எழுத்தாளர்களும், கலைஞர்களும், பரவலான நிலையில் புதிய சொற்களையோ, நடைகளையோ கண்டுபிடிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்".

....வரையறுக்கப்பட்ட ஒரு சில புத்தாக்கங்களை மட்டும் உருவாக்கக் கூடிய நிலைக்குள் அவர்கள் கொண்டு வரப்பட்டுள்ளனர். தனித்துவமான நடையியல்களும், வடிவங்களும், சொற்களும் கலையுலகிலும் எழுத்துலகிலும் ஏற்கனவே தவழவிடப்பட்டுள்ளன" இவ்வாறான ஓர் அவலமான புலக்காட்சியைக் கொண்டதன் விளைவாகவே பின்னவீனத்துவ மனநிலையில் அவர்கள் பழைய கலைத் தனிமங்களையும், புதியவற்றையும் ஒட்டுமை *(Hybrid)* செய்து அல்லது கலப்புச் செழுமை *(Blend)* செய்து புத்தாக்கங்களை ஏற்படுத்தலாயினர். நவீன தமிழ் அரங்கில் இந்தச் செயற்பாடுகளே நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

ஆக்க நிலையில் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட எலத்திரனியல் தகவல் புரட்சியானது, தயாரிப்பு நிலையில், ஒட்டுமை வேலைகளையும், கலப்புச்செழுமை ஏற்பாடுகளையும் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. கார்டூன் எனப்படும் கேலிமை நுட்பத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் மகாபாரதம், இராமாயணம் போன்றவை விரைந்து விற்கப்படும் பண்டங்களாக மாற்றப்பட்டுள்ளன. கர்நாடக இசைக்கச்சேரி அல்லது பரநாட்டியக் கச்சேரியின் பின்புலத்திலே காண்பியங்களை *(Visuals)* வைத்து நுகர்ச்-

சிக் கவர்ச்சியை ஏற்படுத்துதலும் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நவீன கலையுலகில் அதிக தீண்டலுக்கும் அதிக சீண்டல் விளையாட்டுக்கும் உட்படுத்தப்படும் கலையாக ஓவியமும் சிற்பமும் அமைந்துள்ளன. எழுத்துருக்கலையில் மேற்கொள்ள முடியாத நெகிழ்ச்சியான சுயாதீனப் பாய்ச்சல்களுக்கு இக்கலைகள் இடமளிக்கின்றன. இந்தப் பாய்ச்சல் பழைமையான தொன்மச் சிற்பங்களிலும் சித்திரப் புனைவுகளிலும் ஏற்கனவே ஏற்படத் தொடங்கிவிட்டன. காராம்பசு, மச்சகன்னி, செந்துருவம், யாளி போன்ற பல எடுத்துக்காட்டுக்களை இத்தொடர்பிலே குறிப்பிட முடியும். கட்டற்ற முறையில் சமகாலத்தில் மேற்பாய்ச்சல் கொண்ட கலை அணுகுமுறைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

1. புதிய தன்னிலை அகம் *(Neo Ego)*

அருவ அழகியலை வெகுசன பண்பாட்டுடனும் பண்டங்களுடனும் இணைத்து இக்கலையாக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. பீட்டர், கேலி, ஜெவ் கூன்ஸ், றொஸ்பிளக்னர் முதலியோரது கலைப்படைப்புக்களை இதற்கு எடுத்துக்காட்டுக்களாகக் குறிப்பிட முடியும்.

2. தூண்டலுருவாக்கம் *(Simulation)*

குறிப்பிட்ட பொருளுக்கு ஒப்பானதாகச் செய்யும் கலையாக்கமாக இது அமைகின்றது ஏனைய கலைவல்லுனர்களால் மேற்கொள்ளப்பட்ட வடிவங்களை அவ்வாறே பிரதிபண்ணுதல், இப்பிரிவில் உள்ளடங்கும் ரமணியின் சிற்ப ஓவிய நுட்பங்கள் யாழ்ப்பாணத்து இளம் கலைஞர்களினால் தூண்டலுருவாக்கத்துக்கு உட்படுத்தப்படுதல் இங்கே குறிப்பிடத்தக்கது. முன்னோடியாக இருந்த ரமணி பயன்படுத்திய ஊடகத்தை விட்டு வேறோர் ஊடகத்தின் வழியாக ரமணியின் நுட்பங்களைப் பிரதிசெய்யும் செற்பாடுகளும் இதில் அடங்கும். இதனைத் தமிழ்மரபில் "மீளக்கொலுப்பித்தல்" என்பது ஆங்கிலக் கலை மரபில் இது *'Re Stage"* எனப்படும் சிறிலிவினி, மைக்பிட்லோ, கிளென் பிறவுன் முதலியோரது ஆக்கங்கள் இந்தக் கலை நடையியலுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

3 நிலைமாற்ற முன்னரங்கப் புதுமை *(Trans -Avant Garde)*

இத்தகைய ஆக்கங்கள் நவீன செவ்வியற் கலை *(Neo Classical Art)*யுடன் தொடர்புபட்டவையாய் அமைந்தன. கட்டடக் கலை-

யிற் பழைய பொருட்களைப் பயன்படுத்தி விநோதமானதும், அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்ட ஆக்கங்களைச் செய்தலும் இப்பிரிவில் அடங்கும். பிரான்சிஸ்கோ கிளெமெந்தே, சன்றோசியா முதலியோரது கலையாக்கங்களை இதற்குச் சான்றுகளாகக் குறிப்பிடலாம்.

4. புதிய வெளிப்பாட்டியல் : *(New Expressionism)*

செம்மை நீங்கிய *(Crude)* விரைந்த, பெரிய வடிவில் அமைக்கப்பட்ட படைப்புக்கள் ஜேர்மனியின் வரலாற்றையும் பண்பாட்டையும் உசாவி நிற்கின்ற, பார்ப்பதற்குப் பூர்விக *(Primitive)* தொனிப்புடைய ஓவியப் படைப்புக்கள் இதற்கு எடுத்துக்காட்டுக்களாகும். ஜோர்ச் பசிலிஸ், மற்றும் மார்க்கஸ் லப்பேட்ஸ் ஆகியோரின் ஆக்கங்கள் இவ்வகையிற் குறிப்பிடத்தக்கவை.

5. தெரிகை நல இணக்கவியல் *(Eclectism)*

"உயர்" பண்பாட்டிலிருந்தும், "தாழ்"பண்பாட்டிலிருந்தும் பொருத்தமான படிமங்களைத் தெரிவுசெய்து இணைத்து இணக்கி பல நடையியல்களைக் கொண்டு உருவாக்கப்படும் கலைப்படைப்பாக இது அமைக்கப்படுகின்றது. டேவிட்சாலி, சிக்மர் பொல்கே, கிறிஸ்டின் கிளாஸ் முதலியோரின் ஆக்கங்கள் இப்பிரிவில் அடங்கும்.

சிக்கலானதும் ஊடகக் கட்டுமானத்தைப் பராமரிப்பதற்கான கலையாக்கங்களும் அதனை மறுதலித்து மேலெழும் கலையாக்கங்களும் என்றவாறான வெளிப்பாடுகள் தவிர்க்க முடியாத கால நிகழ்ச்சிகளாகும். சீரழிந்த முதலாளியப் பண்பாட்டினை *(Corruptcapitalist Culture)* மறுதலித்துக் கலையாக்கங்கள் எழுகை கொள்ளும்பொழுது அவை விற்பனைப் பெருஞ்சந்தைகளிலிருந்து புறந்தள்ளப்படுதல் அவற்றுக்குரிய கலைப்பலமாக அமைகின்றது. விற்பனைப் பெருஞ் சந்தைகளுக்கு ஏற்றவாறு தம்மை மாற்றியமைத்துக்கொள்ளும் எழுத்தாளர்களுடன் சிறு சஞ்சிகைகளும் எமது சூழலில் உருவாக்கம் பெறுதல் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் எண்ணக்கருவாக்கக்கலை *(Conceptual Art)* அகக்கட்சித் தூண்டற்கலை *(Insight Art)* முதலியவை பற்றிய சிந்தனைகளை மேலும் ஆழங்களை நோக்கி முன்னெடுக்க வேண்டியுள்ளது. சமூக உந்தலால் உருவாக்கப்பெற்ற தனிமனித ஆக்கமலர்ச்சியின் ஆற்றுகை பொருத்தமான கலை வெளிப்பாட்டு ஊடகங்கள் வழியாக வெளிப்பாடு கொள்ளும் நிலையில் "ஊடகத் தேடல்" அண்மைக் காலமாக ஒப்பீட்டளவில் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது.

கலைப்படைப்புக்கள் ஒவ்வொன்றும் தமக்குரிய தருக்கங்களை உள்ளடக்கி நிற்கின்றன. இந்தத் தருக்கத்தைக் கண்டறிய முடியாத திணறல் நிலையில் கலைப்படைப்புக்கள் இருப்பதனால் அழகியல் தொடர்பான சிக்கற்பாடுகள் இன்னமும் தீர்க்கப்பட முடியாமல் இருக்கின்றன. இத்தருக்கம், படைப்பை உருவாக்கியோர், பல-வகைப்பாடுகள் கொண்ட நுகர்ச்சியாளர், ஆகியோரை உள்ளடக்கி-யதாகவும், படைப்பை இணைத்ததாகவும் கொண்ட கலைத்தருக்-கத்தை உருவாக்குதல் மிகவும் கடினமான பணியாகும். கலை தனக்-குரிய நியாயப்பாடுகளுக்கு மட்டும் உரியதென்பதும், சமூக நியாயப்-பாடுகளுக்கு விரிந்த நியாயப்பாடு கொண்டது அன்று என்பதும் வாய்ப்பாடுகளுக்கு உட்பட்ட சுருங்கி ஒடுங்கிய தருக்கங்களாக இருப்பதால் பலமான திறனாய்வுகளுக்கு இன்றுவரை முகம்-கொடுத்த வண்ணமுள்ளன.

நடப்பியற் சமூகத்தைத் தழுவாத வகையில், ஆனால் தமக்குரிய "நிஜமான மாதிரிகளை"க் கலைப் படைப்புக்கள் உருவாக்கத் தொடங்கியுள்ளன. *(The Generation of a Real Without Reality)* தமது படிமத்தைத் தவிர வேறு எதனையும் பிரதிநிதித்துவப்படுத்தாத மிதக்-கும் கட்டற்ற படிமங்கள் கலைப்படைப்புக்களிலே உருவாக்கப்-படுகின்றன. தீவிர அருவ ஓவியங்களிலும் நவதொலைக்காட்சியிலும் *(Neo - TV)* இவ்வகை ஆக்கங்கள் பரவலாக நிகழ்த்தப்படுகின்றன.

படைப்பாற்றலை வெளிப்படுத்தி மகிழ்ச்சிகொள்ளல் என்ற மனிதரின் உளப்பாங்கில் ஒரு பெயர்ச்சி அல்லது நிலைமாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது. படைப்பாற்றலால் தம்மைத் துலக்கிய மக்கள் தற்போது பொருள்களை நுகர்ச்சி செய்வதன் வாயிலாகத் தம்மை வெளிப்படுத்த முயல்வதாக பின்னைய மார்க்சியவாதியாகிய டீபோர்ட் *(Debord - 1931-1994)* குறிப்பிட்டுள்ளார். அதாவது புதி-தாக ஒன்றை ஆக்குவதிலே நிறைவு கொண்டிருந்த மனித உள்ளம் இப்பொழுது புதிதாக ஒரு பொருளை நுகர்ச்சி கொள்வதில் உள-நிறைவு பெறுமளவுக்கு நுகர்ச்சிச் சமூகம் தீவிர வளர்ச்சி கொண்டுள்ளது.

நுகர்ச்சிச் சமூகத்தின் வளர்ச்சியானது பொருள் நுகர்ச்சியி-லிருந்து படிமங்களை நுகர்ச்சி செய்யும் நிலை மேலோங்கத் தொடங்-கியுள்ளது. பொருள்களை உற்பத்தி செய்வதிலும் பார்க்க படிமங்-களை உற்பத்தி செய்தல் பொருளாதார நிலையிலும், அரசியல் நிலையிலும் பொருண்மை கொண்டதாகக் கருதப்படுகின்றது. இந்தப்

புதிய வளர்ச்சிகள் கலை இலக்கிய ஆக்கங்களிலே தாக்க விளைவுகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன.

தகவல் தொழில்நுட்பத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய சூழலும், நவீன நுகர்ச்சிக் கவிநிலையும் கலை இலக்கிய ஆக்கள் மீது நேரடியான தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன. எலத்திரன் தொடர்பாடலை அடியொற்றிய புதிய சடங்குகள் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது.

"நூலாசிரியரின் இறப்பும் வாசகர்களின் பிறப்பும்" என்ற குரல் படைப்பாக்க வடிவங்கள் மீது செல்வாக்கை ஏற்படுத்துதல் போன்று "தொலைக்காட்சியின் திரையாக பார்வையாளரே மாறத் தொடங்கியுள்ளனர்" *(with TV the Viewer is ths Screen)* என்ற மக்லுகான்னின் *(Mcluhan, 1911-80)* கருத்தும் கலையாக்கங்களிலே தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.

நடைமுறையிலுள்ள நுகர்ச்சிச் சமூகத்தாற் கட்டுமை செய்யப்பெற்ற விழுமியங்களையே சமகால எழுத்தாக்கங்கள் சுளுவாக மீளுருவாக்கம் செய்கின்றன. சமூகத்தின் உறுத்தும் பிரச்சினைகள் ஆக்கமலர்ச்சிக்குள் கொண்டுவரப்படும் வேளைகளிலும் அந்த விழுமியங்களின் முலாம் பூசப்படுதல் உண்டு. இந்தச் செயற்பாடானது வாசகர்களை செயலூக்கம் குன்றிய *(Passive)* நிலைக்குத்தள்ள வைத்துவிடுகின்றது. நுகர்ச்சியின் குணாம்சமே இதுதான். சிந்தனை நிலையில் வாசகர்களைக் குருடாக்கி விடுதலின் வெற்றியே நுகர்ச்சிச் சமூகத்தின் விழுமியமாக்கப்பட்டுள்ளது. அடுத்து என்ன நிகழவிருக்கின்றது என்பதை வாசகரிடத்துத் தூண்டிவிடுதலே அழகியற் பரிமாணம் என்ற அந்தஸ்தைப் பெற்றுவிடுகின்றது. அதிலும் ஆண்களை முதன்மைப்படுத்திய சமூகத்தின் அழகியலே மேலோங்கல் பெற்றுள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. *(Kristeva, 1980)*

ஏற்கனவே நிலை நிறுத்தப்பட்ட வாசிப்புப் பழக்கத்துக்கு உள்ளாக்கப்பெற்ற வாசகர் மீது சமூக நிலையில் சுமத்தப்பெற்ற மட்டுப்பாடுகளின் கனதியும் அழுத்தமும் ஆட்சி செலுத்தப்படுதல் அழகியலாக்கப்படுகின்றது. இதிலிருந்து வாசகரை விடுவிப்பதற்கு ஆதிக்கம் செலுத்துவோரால் ஓரங்கட்டப்பட்ட நூலியத்தின் *(Marginal Text)* தேவை உணரப்படுகின்றது.

போலிகளால் உருவாக்கப்பட்ட வாசிப்பு மாயையில் இருந்து வாசகரை மீட்டெடுக்க வேண்டியுள்ளது. முழு நிறைவான கலைப்படைப்பு என்று கூறுதல் ஒருவிதமான ஆக்கிரமிப்பு நடவடிக்கை-

தான். சமூகத்திலிருந்து கலைப்படைப்பைப் பிரித்துப் பார்த்தலும் ஒருவித ஆக்கிரமிப்புச் செயற்பாடு கொண்ட முன்னெடுப்பு அதற்கு மட்டுமுரிய பரிமாணங்களுடன் மட்டும் தொடர்பு கொண்டுள்ளதென்று வாதிடலும் அறிகையை ஆதிக்க நிலைக்குள்ளே தள்ளி விடுகின்றது.

கலைப்படைப்பு ஓர் ஆக்க உற்பத்தி *(Production)* என்ற வடிவத்தை எடுக்கும்பொழுது பலரின் தலையீடுகளுக்கு அது உட்படுகின்றது. பதிப்பாளர், வடிவமைப்பாளர், விநியோகம் செய்வோர் போன்றோரின் தலையீடுகள் வாசகர்களுக்கு அப்பாற்பட்ட வகையில் நிகழத் தொடங்கியுள்ளன. கலைப்படைப்பைத் தருவோர் தமக்குரிய படிமத்தை உருவாக்கிக் கொள்வதன் வாயிலாக தமது மேலாதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்கின்றனர். இந்த மேலாதிக்கப்பாடும் அவரால் உருவாக்கப்படும் பின்னைய கலைப்படைப்புக்களை "விற்பனை" செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. தமிழகச் சூழலில் திரைப்படத்துறையில் இந்த மேலாதிக்கம் எழுந்து காணப்படுமளவுக்கு நுகர்ச்சியாளரின் அறிகை மட்டம் பின் தள்ளப்பட்டுள்ளது.

மத்திய தரத்தினரது வாழ்க்கை முறையையும் மனோபாவங்களையும் அடித்தள மக்கள் மீது திணிக்கும் மேலாதிக்கம் சமகால எழுத்தாளர்கள் பலரிடத்துக் காணப்படுகின்றது. பொருளாலும் படிப்பால் மேலோங்கிய மத்திய தரவகுப்பினரது மனவெழுச்சிகள் கலை இலக்கிய வடிவங்களுடாக எல்லைப்படுத்தப்பட்டோர் மீது திணித்து விடப்படுகின்றன. தமது அடையாளத்தை நிலை நிறுத்துவதில் ஏற்படும் பதகளிப்பே மத்தியதர வர்க்கத்தினரது கலைப்படைப்புக்களில் மேலோங்கியுள்ளன.

ஆனால் எல்லைப்படுத்தப்பட்டோரது மனவெழுச்சிகள் நாளாந்தம் வாழ்க்கையை "இழுத்துச் செல்வதோடு" தொடர்புபட்டுள்ளன. அதாவது நாளாந்தக் கூலி உழைப்பில் அவர்களது பொழுது கழிந்து விடுகின்றது. இலங்கையின் பெருந்தோட்டத் துறையில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகள் இந்த நடப்பியலை வெளிப்படுத்துகின்றன. யாழ்ப்பாணத்திற் குட்டியப் புலம் என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளும் இந்த முடிவுகளையே மீள வலியுறுத்துகின்றன.

பின்னவீனத்துவ இலக்கியங்கள் தேக்கமடையத் தொடங்கிய நிலையில், பின்னைய மனிதத்துவ இலக்கியம் *(Post Human Litera-*

ture) வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. நவீன நுகர்ச்சிக்கோலங்களும், தீவிர தொழில்நுட்ப வளர்ச்சியும் பின்னைய மனிதத்துவ உருவாக்கத்தை மேலெழச் செய்துள்ளன. தொடர்பாடற் கருவிகள் மனித உறுப்புக்களுடன் இணையத் தொடங்கியுள்ளன. மனித உறுப்புக்களும் இழையங்களும் விற்பனைப் பண்டங்களாக மாறி வருகின்றன. மனித உறுப்புக்களை வினைத்திறனுடன் செயற்பட வைக்கும் இயலாக்குனர்கள் *(Pace Makers)* உடலினுள் வைக்கப்படுகின்றன. உருச்சிகிச்சை முறையால் முகத் தோற்றங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன. மரபு அணுப் பொறியியல் தீவிர வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. ஆய்வுக்குழாய்க் குழந்தைகள் உருவாக்கப்படுகின்றன. இவற்றின் அனுகூலங்கள் சமூக அடுக்கின் மேலுயர்ந்தோருக்கே கிடைக்கப் பெறுகின்றன. மத்தியதர வகுப்பினரின் கலை இலக்கியங்கள் இவ்வாறான பின் மனிதத்துவ வெளிப்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

பின் மனிதத்துவத்தை விளக்குவதற்கு "பொறியுடல்" *(Cyborg)* என்ற எண்ணக்கரு பயன்படுத்தப்படுகின்றது. உடலும் பொறிகளும் கலந்து ஒட்டுமை செய்யப்படும் ஆக்கத்தைப் "பொறியுடல்" என்ற எண்ணக்கரு புலப்படுத்துகின்றது. பொறியுடல் என்ற எண்ணக்கரு மனிதர் மற்றும் மனிதரற்ற பொருள் என்ற இருமைப்பாட்டைத் தகர்த்து விடுகின்றது. இயற்கை - செயற்கை என்ற இருமைப்பாட்டை உடைத்து விடுகின்றது. பின்னவீனத்துவவாதிகள் குறிப்பிடும் எல்லைக் குழப்பங்கள் இங்கே நீக்கப்பட்டு விடுகின்றன.

டொன்னா ஹராவே என்பவர் 1985ஆம் ஆண்டில் தாம் எழுதிய கட்டுரை ஒன்றில் பொறியுடல் பற்றிய கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டார். *(Hara Wayd, (1985) A Cyborgmanifesto)* இந்தப் பிரகடனம் பால்நிலை பற்றிய பழைய எல்லைகளையும் அணுகுமுறைகளையும் தகர்க்கத் தொடங்கியுள்ளது. ஆண் ஆதிக்கச் சமூகத்தாற் செய்யப்பட்ட கட்டுமைகளை நிலைமாற்றம் செய்வதற்குரிய ஏற்புடைமைகள் தோற்றம் பெற்றுள்ளன. பின்னைய பால் நிலையுலகின் பிராணியாக பொறியுடல் தோற்றம் பெற்றுள்ளது. பொறியுடல் நுட்பங்கள் பால்நிலைக் கட்டுமானங்களைத் தகர்த்து விடுவதற்குப் பிரயோகிக்கப்படத்தக்கவையிருத்தல் குறிப்பிடத்தக்கது.

உலகில் இன்று உருவாக்கப்பட்டுவரும் கணனி மென் பொருட்களிற் பெரும்பாலானவை ஆண் ஆதிக்கத்தினை நிலை நிறுத்தும் வகையிலே உருவாக்கப்பட்டு வருகின்றன. இதிலிருந்து மீள்வதற்கும் பொறியுடல் தொழில்நுட்பத்தையே பயன்படுத்த வேண்டியுள்ளது.

மரபுவழியான "உடல் அழகியல்" என்ற எண்ணக்கருவும் பொறியுடலால் மாற்றம்பெறத் தொடங்கியுள்ளது.

நவீன கலை இலக்கிய ஆக்கங்களிலே தாக்கங்களை ஏற்படுத்தும் எண்ணக்கருவாக "இல்லா இடங்கள்" *(Non Places)* என்பதும் எடுத்தாளப்படுகின்றது. இந்த எண்ணக்கருவாக்கம் பிரெஞ்சு மானிடவியலாளராகிய மார்க் அகே *(Marcauge)* என்பவரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மீநிலை நவீனத்துவத்துவ சமூகத்தில் குறிப்பிட்ட ஒரு நபருக்குச் சொந்தமில்லாத இடங்களிலேதான் அவரது வாழ்க்கை கடந்து செல்கின்றது. இவ்வாறான "இல்லா இடங்களே" கதைப் புலங்களாக்கப்படுகின்றன.

இடங்களையும் அவற்றைப் பயன்படுத்துவோரையும் ஆக்கப்படிமங்கள் இணைப்புச் செய்கின்றன. இடம் பற்றிய அறிவிப்புக்கள், வழிகாட்டிச் செய்திகள், போக்குவரத்து குறியீடுகள், வாகன ஓட்டுநர்களுக்கான அறிவிப்பு வடிவங்கள், ஒளியூட்டப்படும் சிலைகள் மற்றும் கட்டங்கள், சுற்றுலா செல்வோருக்கு வழங்கப்படும் வழிகாட்டி ஏடுகள் முதலியவை இடம் பற்றிய வரலாறு மற்றும் பண்பாடு ஆகியவற்றைப் படிமங்களாகி விடுகின்றன. இவற்றின் வழியே மனிதர் நகர்ந்து செல்வோராய் இருத்தலை "இல்லா இடம்" என்ற எண்ணக்கரு விளக்குகின்றது. தனிநபரின் வாழ்க்கை அவருக்கு சொந்தமில்லா இடங்களில் நகர்ந்து செல்லலே ஒப்பீட்டளவில் மேலோங்கத் தொடங்கியுள்ளது. இல்லா இடங்களை ஊடறுத்து ஒவ்வொருவரும் தமது நாளாந்தச் செயற்பாடுகளுக்குரிய பாதைகளைத் தெரிவு செய்கின்றனர்.

மேலைப்புலக் காலனித்துவம் மீண்டெழுந்து உலகம் தழுவிய கவிப்பை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. காலனித்துவத்திலிருந்து உலகம் மீண்டெழுந்துவிட்டது என்று கூறுதல் ஒரு தவறான புலக்காட்சியாகும். தேசங்கள், இனக்குழுமங்கள், பண்பாடு, கலை இலக்கியங்கள் முதலியவற்றை ஊடறுத்து பின்காலனியம் ஊடுருவத் தொடங்கியுள்ளது. இவற்றின் பின்னணியில் அழகியல் பற்றிய மரபு வழிக்கருத்துக்கள் மீளாய்வுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன.

சமூக முரண்பாடுகளை நுண்பாக நோக்கிலும் பெரும்பாக நோக்கிலும் பகுத்து ஆராய வேண்டிய தேவை மேலும் முக்கியம் பெறத் தொடங்கியுள்ளது. அழகியற் போலிகளை அவ்வகையாகவே இணங்காண வேண்டியுள்ளது.

★★★

16

ஆங்கில இலக்கியங்களும், தமிழின் முன்னோடிப் புனையங்களும்



ஆங்கில ஆட்சியும் ஆங்கில மொழிவழிக் கல்வியும், ஆங்கில மொழி அறிவுடையோர் நவீன இலக்கியங்களில் ஈடுபாடு காட்டியமையும் ஆங்கில இலக்கியங்களின் செல்வாக்குகளைத் தமிழிற் கொண்டுவரலாயிற்று. சிறுகதை மற்றும் நாவல் வடிவங்கள் தமிழிலே தோற்றம் பெறுவதற்கும் வளர்ச்சி கொள்வதற்கும் ஆங்கிலப் படைப்புக்களே முன் மாதிரிகைகளாக அமைந்தன. ஆங்கில உரைநடை மரபில் வளர்ச்சி பெற்ற கடினத்தன்மை கொண்ட உரை, மென்மைநிலை உரை *(Light Prose)* என்ற இருமைப் பாகுபாட்டிலே கனதியற்ற "மென்மை நிலை உரைநடை" சிறுகதை மற்றும் நாவல் வடிவங்களை ஆக்குவதற்கு உறுதுணையாயிற்று. மென்மைநிலை உரைநடையின் முக்கியத்துவத்தை தமிழின் நவீன இலக்கிய முன்னோடிகள் அறிந்து கொண்டனர்.

பிரித்தானியாவில் வளர்ச்சி பெற்ற ஓய்வும் வளமும் கொண்ட மத்திய தரவகுப்பினர் ஓய்வாக இருந்து வாசிப்பில் ஈடுபடக் கூடிய சமூக இயல்பு தோற்றம் பெற்றமை புனையங்களும் புனையங்கள் அல்லா வடிவங்களும் வளர்ச்சியுறுவதற்குரிய களம் அமைத்தது. மத்திய தரத்தினரின் சுவைப்பைத் தூண்ட புனையம் சாரா போதனை சார்ந்த கருத்தாடல் வடிவங்களிலே அவர்கள்

ஒருபுறம் கூடுதலான ஈடுபாட்டைக் காட்டினர். அதேவேளை சுவை-யூட்டும் நாவல் மற்றும் சிறுகதையென்ற புனைவு வடிவங்களை வாசித்தலும் சமாந்தரமாக வளர்ச்சியடையத் தொடங்கின. அவ்வடி-வங்களிலே தனிமனித இயல்புகளும், தனிமனித உளவியலும் புனை-வுக்கு உட்படுத்தப்பட்டமை மத்தியதர வகுப்பினரிடத்தே மிகுந்த ஈடுபாட்டை ஏற்படுத்தியது.

அவ்வாறான சமூக இலக்கியக் கவிநிலை *(Socio - Literary Cli-mate)* பிரித்தானியர் ஆட்சியின்போது இந்தியா, இலங்கை முதலாம் புலங்களில் ஏற்படலாயின. எழுத்தறிவின் வளர்ச்சி, அச்சுவழித் தொடர்பாடலின் வளர்ச்சி மத்தியதரத்தினரிடையே ஏற்படத் தொ-டங்கிய வாசிப்பை அடிப்படையாகக் கொண்ட பொழுதுபோக்கு முதலியவை உரைநடை இலக்கியங்களின் வளர்ச்சிக்கு விசை-யூட்டின.

"சமூகத்தில் மனிதர்" என்ற இயல்பின் புனைவு பிரித்தானி-யாவின் ஒகஸ்தன் கால இலக்கியங்களில் எழுச்சி கொள்ளலாயிற்று. தனிமனித ஊக்கலை ஆராய்தலும், தனிமனித வினைப்பாடுகளை வினைத்திறன் கொண்டவகையில் எடுத்தியம்புதலும் என்ற செயற்-பாடுகள் நாவல் மற்றும் சிறுகதை ஆக்கங்களுக்குரிய உட்பொருள்-களாயின. டானியல் டிபோ *(1660-1731)* எழுதிய "றொபின்சன் குருசோ" என்ற நாவல் மத்தியதர வகுப்பினரின், இயல்பையும் எழுச்சியையும், விடாமுயற்சியையும், கூட்டுச் செயற்பாடுகளற்ற தனிமனித உன்னதங்களையும் காட்டுவதாக அமைந்தது. தனிமனித உளவியலை அடிப்படையாகக் கொண்ட பரிசோதனைகளே சிறு-கதை மற்றும் நாவல் ஆக்கங்களுக்குரிய வித்தாகவும் விளைநிலமா-கவும் அமைந்தன.

ஆங்கில நாவல் மற்றும் சிறுகதையாக்கங்களில் அடுத்து இடம்-பெற்ற சிறப்பார்ந்த தோற்றப்பாடு உறுபற்று *(Sentiment)* உள்ளடக்-கமும் அதனோடிணைந்த பகுப்பாய்வும் ஆகும். அதுவும் தனிமனித இயல்புகளோடு இணைந்த சிறப்பார்ந்த பரிமாணமாயிற்று. றிச்சாட்-சனுடைய புனைவுகள் அவ்வகையில் முக்கியம் பெறலாயின.

தனிமனித ஓங்கலின் பிறிதொரு வளர்ச்சியாக ஆங்கில மரபிலே கொதிக் *(Gothic)* நாவல்கள் தோற்றம்பெற்றன. அதிமானிடச் சித்திரிப்புக்கள் அங்கே இடம்பெறலாயின. அவற்றின் தொடர்ச்சியாக உருவாக்கம் பெற்ற உளக்கவர்ச்சி *(Romantic)* இயக்கம் விக்டோரி-யன் காலம் முதலியவை நாவலாக்கத்தின் எழுச்சியைத் தொடர்ந்து

முன்னெடுத்தன. வாழ்க்கையில் எத்துணை துன்பங்கள் இருப்பினும் சமூக இயல்புகளைக் கருத்திற்கொள்ளாது தனிமனிதர் மகிழ்ச்சியை நாடியமை, "களிப்புடன் முடிவடையும்" (Happy Ending) நாவலாக்கங்கள் எடுத்துக்காட்டின.

கல்வி விரிவாக்கம் மற்றும் மக்களாட்சிக் கருத்தியலின் விரிவாக்கம் முதலியவற்றுடன் தொழிலாளர் மற்றும் தாழ் மத்திய தர வகுப்பினரின் எழுச்சி இணைந்து வளரலாயிற்று. இத்தகைய தோற்றப்பாடு பிரித்தானியாவில் மட்டுமன்றி இலங்கை, இந்தியா முதலாம் நாடுகளிலும் இடம்பெறலாயிற்று. பிரித்தானியாவின் தாழ்மத்தியதர வகுப்பினரின் வாசிப்புச் சுவையோடு இணைந்த நாவலாக்கங்களை சார்ல் டிக்கின்ஸ் (1812-1870) வளமாக முன்னெடுத்தார்.

பிரித்தானியாவின் தாழ் மத்தியதரத்துக் குடும்பங்களில் நிகழ்ந்த உராய்வுகளும், உதிர்வுகளும் அவரது சொந்த வாழ்க்கையிலும் நிகழலாயின. அவ்வகையில் ஏற்பட்ட அனுபவங்கள் அவரது பிற்கால எழுத்தாக்கங்களிற் பதிவுகளாயின. மறக்க முடியாத தனிமனிதத் தனித்துவம் அவரது நாவல்கள் வழியாக வெளிவரத் தொடங்கின.

இருபதாம் நூற்றாண்டிலே பல்வேறு விசைகள் ஆங்கில நாவலாக்கங்களிலே செல்வாக்குகளை ஏற்படுத்தலாயின. சோசலிச சிந்தனைகளின் பரந்துபட்ட விசைகள், அறிவியற் கண்டுபிடிப்புக்களினதும் அறிவியல் எழுச்சிகளினதும் தாக்கங்கள், அழகியல் மெய்யியலின் வளர்ச்சி, உளவியல் எழுத்தாக்கங்களின் விரிவு, திறனாய்வுச் சிந்தனைகளின் மேலெழுகை தொடர்பாடல் உச்சங்கள் முதலியவை ஆங்கிலச் சிறுகதையாக்கங்களிலும், நாவலாக்கங்களிலும் செல்வாக்குகளை ஏற்படுத்தலாயின. "சமூகத்திறனாய்வு" என்ற பரிமாணம் நாவல்களிலும் சிறுகதைகளிலும் பரந்துபட்ட முறையிலே இடம்பெறலாயின. மேலும் "பரிசோதனை" என்ற பண்பும் புனைகதையாக்கங்களிலே எழுச்சிகொண்டு இடம்பெறலாயின. கட்டமைப்பு நிலையிலும், எடுத்துரைப்பு நிலையிலும் பரிசோதனைகள் பரவலாக இடம்பெறத் தொடங்கின. டி.எச்.லோரன்ஸ் (1885-1930) அவர்கள் மேலும் ஒருபடி முன்னேறி பாலியல் அனுபவங்களை அடியொற்றிய பரிசோதனைகளையும் தனது புனைவுகளிலே முன்னெடுத்தார்.

இருபதாம் நூற்றாண்டின் ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு புனைகதைகளிலே காணப்பட்ட ஒரு சிறப்புப் பண்பு "நேர்நிலைச் சித்திரிப்பு" (Mirroring) ஆகும். புதிய பொருளுற்பத்தி முறைகள் மற்றும் புதிய வாழ்க்கை முறைகள் முதலியவை முன்னோர் காணப்பெறாத

காட்சிகளைச் சமூக வீதியிலே தோற்றுவித்தன. அத்தகைய ஒரு சமூகக் காண்பிய வளர்ச்சியே நேர்நிலைச் சிந்தனைகளின் எழுச்சிக்கும் சித்திரிப்புக்கும் வழிவகுத்தது.

ஏறத்தாழ அவ்வகையான ஒருநிலை பிரித்தானியர் ஆட்சிக்காலத் தமிழகத்திலும் தோற்றம் பெற்றது. புதிய கட்டடங்கள், அணிகலன்கள், உடைகள், ஊர்திகள் நகரவாக்கக் காட்சிகள் முதலியவை முன்னர் தமிழகத்திலே காணப்பெறாத சமூகக் காண்பியங்களாக அமைந்தன. அத்தகைய வடிவங்களும் தமிழகத்து நாவல் மற்றும் சிறுகதைகளிலே நேர்நிலைச் சித்திரிப்புகளுக்கு விசையூட்டி வழிவகுத்தன. கருத்து நிலையில் ஆங்கிலப் புனைகதைகளிலே இடம்பெற்ற நேர்நிலைச் சித்திரிப்புகள் தமிழகத்துச் சிறுகதை மற்றும் நாவலாக்க முன்னோர்களுக்குத் தூண்டுதலளித்தமை குறிப்பிடத்தக்கது.

வேதநாயகம்பிள்ளை, மாதவையா, இராசமையர், வ.வே.சு. ஐயர், புதுமைப்பித்தன், திருஞான சம்பந்தப்பிள்ளை, இலங்கையர்கோன், சம்பந்தன் முதலிய தமிழ்நாவல் மற்றும் சிறுகதை முன்னோடிகள் நவீன ஆங்கில இலக்கியம் பற்றிய புலமையுடையோராய் விளங்கினர். நவீன ஆங்கில இலக்கியங்களிலிருந்து எழுந்த பின்வரும் பரிமாணங்கள் அவர்களது ஆக்கங்களிலே செல்வாக்குகளை ஏற்படுத்தலாயின.

(1) ஆங்கில இலக்கியங்களில் இடம்பெற்ற "மென்மைநிலை" உரைநடையின் செல்வாக்கு.

(2) சமூக நெருக்குவாரங்களின் மத்தியில் தனிமனித அவலங்கள்.

(3) உறுபற்றும் அதன் பகுப்பாய்வும்

(4) சமூகத்திறனாய்வை புனையங்கள் வழியாக முன்னெடுத்தல்

(5) புனைகதைகளில் உட்புகுந்த "பரிசோதனை" என்ற பண்பு

(6) நேர்நிலைச் சித்திரிப்பு முறைமை

(7) புதிதாகத் தோற்றம் பெற்ற மத்தியதரத்து வாசகர்களை இலக்குமாந்தராகக் குவியப்படுத்திப் புனைகதையாக்கம் செய்தல்

(8) தனிமனித ஊக்கலை முன்னுரிமைப்படுத்தல்

மேற்கூறிய பொதுப் பண்புகளை மட்டுமன்றி, ஆங்கில நாவல்கள் மற்றும் சிறுகதைகளில் இடம்பெற்ற சிறப்புப் பண்புகளும் நவீன தமிழ்ப் புனைகதையாளர்களிடத்துச் செல்வாக்குகளை ஏற்படுத்தின.

வால்டர்ஸ் கொட்டின் வரலாற்று நாவலாக்கங்கள் கல்கி அவர்கள் வரலாற்று நாவல்களை ஆக்குவதற்குரிய முன்மாதிரிகைகளாக அமைந்தன. ஆங்கிலமொழியில் எழுச்சி கொண்ட துப்பறியும் நாவல்கள் தமிழிலே துப்பறியும் நாவல்களை எழுதியோருக்கு முன்-மாதிரிகைகளாக அமைந்தன.

நவீன ஆங்கில இலக்கியங்களை முன்மாதிரிகளாகக் கொண்டு தமிழில் எழுதப்பட்ட சிறுகதைகளிலும் நாவல்களிலும் ஒருவித செயற்கைப் பண்புகள் பதிவுகள் தவிர்க்க முடியாத பேறுகளாயின.

பிறமொழி நாவல்களை ஆங்கில மொழிபெயர்ப்புகள் வாயி-லாக அறிந்துகொள்ளும்நிலை தமிழ் நாவல் இலக்கியத்தில் மாற்று-வகைப் பரிமாணங்களைத் தோற்றுவிக்கலாயிற்று. அவ்வகையில் சோவியத் நாவல்களின் தாக்கங்கள் சிறப்பாகச் சுட்டிக்காட்டப்-படத்தக்கவை.

★★★



பேராசிரியர் முனைவர் சபா.ஜெயராசா தமிழில் "கல்வியியல்" துறைசார்ந்த நூல்கள் பல எழுதி, அத்துறைசார் விருத்தியில் முதன்மையான பங்கு வகித்து வருபவர். கலை, இலக்கியம், உளவியல், தத்துவம் எனப் பல்வேறு துறைசார் புலங்களுடன் ஊடாடி வருபவர். இவற்றின் செழுமை மற்றும் அறிவு, ஆய்வு யாவும் இவரது "புலமைமரபு" எத்தகையது என்பதைத் தனித்துக் துல்லியமாக வெளிப்படுத்தும். மேலும், கலை தத்துவம் பற்றிய தொடர் விசாரணை, இவரை புதிய அறிவுருவாக்கப் பணியில் முழுமையாக ஈடுபட வைப்பதுடன், கல்வியின் பொருள்கோடல் சார்ந்து புதிய புதிய அர்த்தப்பாடுகளை நோக்கிக் கவனம் குவிக்கவும் செய்கிறது. தொடர்ந்து புதிய ஆய்வுக் களங்கள் நோக்கியும் கவனம் கொள்ளத் தூண்டுகிறது.

இன்றுவரை கல்வி உலகில் முனைவர் சபா. ஜெயராசா உயிர்ப்புமிகு புலமையாளராகவே திகழ்கின்றார்.

ISBN 978-955-1857-31-8

சேமமடு பதிப்பகம்

விலை: 260 ரூபா

CBCN: 2009-01-02-032